21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HOMELIFE HIGHER STANDARDS
•Independently owned and operated
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

நதி 21 | பாலம் 09 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 01, 2011

# கனேடிய தேர்தலில் தமிழர் போட்டி

வழக்கம்போல கனேடிய தேர்தல் களம் 2011 சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. இம்முறை தேர்தல் ஆனது வலிந்து கொண்டுவரப்பட்டது என்பது அரசியலில் ஆர்வமுள்ளவர்களால் இலகுவாக அனுமானிக்கக் கூடியதாக இருந்தது. தேர்தல் திகதி நிர்ணயிக்கப்பட்டபோது இருந்த கட்சிகள் மீதான நம்பிக்கை, நிலைப்பாடு இப்பொழுது மாறியுள்ளது என தேர்தல் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஒரு கிழமையாக புள்ளி விபரங்கள் நாளுக்குநாள் மாறிக்கொண்டே இருக்கின்றன. கனேடிய நாடாளுமன்றத்திற் கான 41ஆவது தேர்தல் நாளான மே 02,



2011 இற்கு இன்னும் ஓரிரு நாட்கள் இருக்கும் இன்றைய நிலையில் பழமைவாதக் கட்சிக்கும், புதிய ஜனநாயக கட்சிக்கும் இடையே போட்டி அதிகமாக காணப்படுகின்றது என தேர்தல் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

25 ஆண்டுகளுக்கு மேலாக கனடாவில் இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்து கொண்டு வருகின்றார்கள். அரசியலில் போதிய அளவு பிரதிநிதித்துவத்தை தமிழ் மக்கள் பெறவில்லை என்பதனைக் காட்டுவது போலத்தான் அரசியல் நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. ஏற்கெனவே பாட-சாலைக்குரிய பிரதிநிதியாகவும் (School Trustee) மற்றும் நகரசபை உறுப்பினராகவும் தமிழர் தெரிவு செய்யப்பட்ட போதிலும் அதனைத் தாண்டி மாநில நாடாளுமன்ற உறுப்பினர் (MPP), மத்திய நாடாளுமன்ற உறுப்பினர் (MP) என்ற நிலையை எவரும் இன்னமும் எட்டவில்லை. இத்தேர்தல் அடுத்த இலக்குக்கு ஒரு களமாக உள்ளது.



எதிர்வரும் தேர்தலில் இரு தமிழர்கள் Toronto பகுதியில் போட்டியிடுகின்றார்கள். NDP யின் சார்பில் ராதிகா சிற்சபைஈசன், ஸ்காபரோ றூஜ் றிவர் (Scarborough-Rouge River) தொகுதியிலும், கவன் பரம்சோதி, ஸ்காபரோ தென்மேற்கு (Scarborough Southwest) தொகுதியிலும் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ராதிகா சிற்சபைஈசன் ஏறத்தாழ 85,000 வாக்குரிமை கொண்ட அதிலும் தமிழர் அதிகமாக வாழும் றூச் றிவர் பகுதியில் போட்டியிடுகின்றார். மேலும் இந்தத் தொகுதியில் போட்டியிடும் மூன்று முக்கிய போட்டி உறுப்பினர்களில் இவர் மட்டுமே றூஜ் றிவர் தொகுதியில் வாழ்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவர் போட்டியிடும் தொகுதியில் 20 ஆண்டுகளாக பிரதிநிதியாக இருந்த டெறிக் லீ இம்முறை போட்டியிடவில்லை. 15,000 இற்கும் மேற்பட்ட தமிழர் வாக்குரிமையைக் கொண்ட தொகுதியில் ராதிகா சிற்சபைஈசன் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது. மார்க்கத்தில் வாழும் ராணா சாகர் (Rana Sarkar) றூஜ் றிவர் தொகுதியில் லிபரல் கட்சிக்குப் போட்டியிடுகிறார்.

## தெற்காசியர்களை நாடும் பழையவாதக் கட்சி

ஊடகவியலாளருக்கான பல விருதுகளைப் பெற்றவரும் 1978 ஆம் ஆண்டில் இருந்து ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் செய்தி ஆசிரியர், தேசியபதிப்பு ஆசிரியர் போன்ற பல பதவிகளை வகித்தவரும் தற்போது ஆசிரியர் பக்கம் பகுதிக்கு எழுதி வருபவருமான ஹைதரபாத், இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்ட 68 வயது ஹரூன் சித்தீக் (Haroon Siddiqui) கடந்த ஏப்பிரல் 24, 2011 இல் ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் எழுதிய ஆசிரியர்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Geat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
MONEY TRANSFER
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# கனடிய தேர்தல் களம் - 2011

தேர்தலுக்கு 19 நாட்கள் இருக்கும் போது கட்சித் தலைவர்களுக்கு இடையேயான விவாதம் (ஆங்கிலம்) நடைபெற்றது. தற்போது தேர்தல் பிரசாரங்கள் மும்மரமாக நடைபெற்றுவருகின்றன. எல்லா கட்சித் தலைவர்களும் நாட்டின் பெரும்பாலான பகுதிகளுக்கு சுற்றுப்பிரயாணம் செய்து விட்டார்கள். கட்சிகளுக்குகிடையே நடைபெற்ற விவாதம் ஒவ்வொரு கட்சியினதும் அரசியல் நிலைகளையும் அவற்றின் கொள்கைகளையும் வெளிகாட்டியதோடு மட்டுமல்லாமல் அவர்களது அடுத்தடுத்து வரும் தேர்தல் பிரசாரத்திற்கான செய்தி களையும் வெளிகாட்டி நிற்கின்றன.

ஸ்ரீபன் காப்பர் தனது கட்சியின் முக்கிய கொள்கையான நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான பாடுபடுதலை தனது செய்தியில் தெரிவித்தார். அவர் பெரும்பான்மையுடன் வரும் ஒரு பழமைவாதக் கட்சி அரசாங்கம் மட்டுமே கனடாவின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிசமைக்கும் என்றார். அவர் தனது அரசு கனடிய அரசின் கடனை குறைப்பதிலும் தீவிரமாக உழைக்கும் எனவும் தெரிவித்தார். ஸ்ரீபன் காப்பர் மேலும் தெரிவிக்கையில் கூட்டுத்தாபனங்களுக்கான வரிக்குறைப்பு வேலைவாய்ப்பு வசதிகளை கூட்டும் என்றார்.

விவாதத்திற்கு முதல்நாள் அரசகணக்கு பரிசோதனை ஆணையாளரால் நடத்தப்பட்ட கணக்கு பரிசோதனையின் தற்காலிக அறிக்கையின் நகல் வெளியாகியிருந்தது மைக்கல் இக்னாற்றிவ் இற்கு வாய்ப்பாக அமைந்தது. இவ் அறிக்கையில் கனேடிய அரசு யூன் 2010 இல் நடத்திய G8 மாநாட்டின் செலவினங்களில் நடைபெற்ற முறைகேடுகள் வெளியாகியிருந்தன. இவற்றைப் பற்றி விவாதத்தில் தெரிவித்த மைக்கல் இக்னாற்றிவ் பழமைவாத அரசு மக்களின் நம்பிக்கைக்கு உகந்த அரசு அல்ல எனக்குறிப்பிட்டிருந்தார். விவாதத்திற்கு முதல் லிபரல் அரசின் கொள்கைகளான சமூகநலசேவைத் திட்டங்களுக்கு மேலதிக பணஉதவி வழங்குதல், குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திற்கு உதவிவழங்குதல், குடும்பநலம் மற்றும் இளைப்பாற்று சம்பளம் போன்றவற்றுக்கு உதவி வழங்குதல் பற்றியும் ஒரு அறிக்கையை லிபரல் கட்சி வெளியிட்டிருந்தது. இவ்அறிக்கையால் லிபரல் கட்சி புதிய ஜனநாயக கட்சிக்கு வழமையாக வாக்குகள் வழங்கும் மக்களின் வாக்குகளை கவர முயற்சித்திருந்தது.

புதிய ஜனநாயக கட்சித் தலைவர் ஜக் லேட்டன் விவாதத்தின்போது பழமைவாதக் கட்சி மற்றும் லிபரல் கட்சி இரண்டையும் விமர்சித்திருந்தார். ஜக் லேட்டன், லிபரல்கட்சி நாடாளுமன்றத்தில் பழமை வாதக் கட்சியின் பல கொள்கைகளுக்கு ஆதரவாக வாக்களித்துவிட்டு இப்போது தேர்தல் நேரம் அவற்றிற்கு எதிராக பேசிவருகிறார் என்று கூறினார். அவர்மேலும் தெரிவிக்கையில் ஸ்ரீபன் காப்பர் அரசியல்வாதியாகியதும் தன்னை தெரிவு செய்த மக்களின் அபிலாசைகளை விட்டுவிட்டு பெரிய கூட்டுத்தாபனங்களின் நண்பராக மாறிவிட்டார் என்றார்.

விவாதத்திற்கு பிந்திய தேர்தல் பிரசாரத்தில்: லிபரல் கட்சி, பழமைவாதக் கட்சியினால் பெரும்பான்மை அரசு அமைவதை தவிர்க்க முடியுமா எனப்பார்ப்போம். புதிய ஜனநாயக கட்சி தாங்கள் மட்டும்தான் மக்களின் நம்பிக்கைக்குரிய கட்சி என்று கூறி பிரசாரம் செய்வதால் அதனால் லிபரல் கட்சி ஆதரவு வாக்குகளை தம்பக்கம் திருப்ப முடிகிறதா என பார்ப்போம். பழமை வாதக் கட்சி தங்களால் மட்டுமே நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த முடியும், நாட்டின் கடன் சுமையை குறைக்க முடியும் என பிரசாரம் செய்வதால் அவர்களால் பெரும்பான்மை அரசு அமைக்கும் அளவு வாக்காளர்களை தம்பக்கம் திருப்ப முடியுமா எனப் பார்ப்போம். எது எவ்வாறு இருப்பினும் ஒன்ராறியோ மாகாணமே இம்முறை தேர்தலில் மிகவும் திருப்பத்தை ஏற்படுத்தக் கூடிய இடமாக இருக்கப்போவதில் எவ்வித ஐயமும் இல்லை.



- பார்த்தி கந்தவேள் -

# தெற்காசியர்களை நாடும்....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பக்கத்தின் சுருக்கம்.

13 இலட்சம் தெற்காசிய மக்களை பழமைவாதக் கட்சி தன்பக்கம் இழுக்க முயல்கிறது என்று சொல்வது தவறாகும். பழமைவாதக் கட்சி தெற்காசிய மக்களின் ஒரு பகுதியினரை குறிவைத்தே தனது



அரசியல் பிரசாரத்தை செய்கிறது. அதாவது கனடிய சனத்தொகையின் ஒரு பகுதியினரை கூறுபோட்டு பிரித்து தன்பக்கம் இழுக்க பழமைவாதக் கட்சி முயல்கின்றது.

கனடிய புள்ளி விபர திணைக்களத்தின் “தெற்காசியர்கள்” என்னும் பதம் கனடாவிலுள்ள இந்தியர்கள், பாகிஸ்தானி யர்கள், நேபாளிகள், பங்களாதேசிகள் மற்றும் இலங்கையர்களை குறிக்கும். இவர்களை விட இந்தியாவிலிருந்தும் இடம்பெயர்ந்து ஆபிரிக்கா, கரீபியன் மற்றும் பீஜி நாடுகளில் வசித்து அங்கிருந்து கனடா வந்தவர்களும் இந்த “தெற்காசியர்கள்” என்னும் சொற் பதத்தினுள் அடங்குவர்.

ஆனால் ஸ்ரீபன் காப்பர் அல்லது அவரது அமைச்சர் ஜேசன் கென்னி அவர்களுக்கு பாகிஸ்தானியர்களது 130 ஆயிரம் வாக்குகளோ, இலங்கையர்களது, அவர்கள் தமிழர் என்றால் என்ன சிங்களவர் என்றால் என்ன, அவர்களது 105 ஆயிரம் வாக்குகளோ, பங்களாதேஷிகளது 33 ஆயிரம் வாக்குகளோ தேவையில்லை. அவர்களுக்கு மற்றைய சிறிய வாக்குப்பலம் கொண்ட “தெற்காசியர்” களது வாக்குகளும் தேவையில்லை.

500 ஆயிரம் வாக்குப்பலத்தை கொண்ட இந்தியர்கள் மட்டுமே பழமைவாதக் கட்சிக்கு வேண்டிய ‘தெற்காசியர்கள்’. இல்லை, இந்தியர்கள் என்று பொதுப்படையாக கூறுவதும் தவறு. அவர்களுக்கு வேண்டுவது இந்தியர்களிலும் சீக்கிய சமூகத்தையும், இந்து சமயத்தையும் சேர்ந்த வாக்குகள் மட்டுமே. இந்திய முஸ்லீம்களின் வாக்கும் தேவையில்லை. ஸ்ரீபன் காப்பரும் அவருடைய பழமைவாத கட்சியும் பிரசாரம் செய்வதும் வேண்டியிருப்பதும் ‘தெற்காசியர்கள்’ என்ற பிரிவிலுள்ள சீக்கிய மற்றும் இந்துக்களாக இருக்கும் இந்திய மக்களின் வாக்குகள் மட்டும் தான்.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

# 30 ஆண்டுகளின் பின் ஓர் அரச திருமணம்



லண்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் நடந்த கண்கவர் திருமண சடங்கில் பிரிட்டிஷ் இளவரசர் வில்லியமும் கேட் மிடில்டனும் கேண்டர்பரி பேராயர் டாக்டர் ரோவன் வில்லியம்ஸால் கணவன்

தொடர்ச்சி 03ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

# வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059*
*3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca*
*5. web: vlambaram.com*

# தெற்காசியர்களை நாடும்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பழமைவாதக் கட்சிக்கு பெரும்பான்மை பலம் கிடைக்காமல் போனதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் ரொறொன்ரோ, மொன்றியல் மற்றும் வன்கூவர் நகரங்களில் வாழும் சிறுபான்மை சமூகத்தை சேர்ந்தவர்களே. இதனால் இம்முறை பழமைவாதக் கட்சி சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த மூன்று சமூகங்களை மிகவும் சிறப்பாக குறிவைத்து தனது தேர்தல் பிரசாரங்களை செய்கின்றது. அம்மூன்று சமூகங்களும் தெற்காசியர்கள் (இந்தியர்) சீனர்கள் மற்றும் அராபியர்கள் ஆகும்.

ஆனால் யூதமக்களின் பெரும் செல்வாக்கை பெற்றதால் ஸ்ரீபன் காப்பர் அராபியர்கள், ஆப்கானிஸ்தானியர்கள் மற்றும் ஈரானியர்களை கொண்ட 750 ஆயிரம் முஸ்லீம் வாக்குகளை இழக்க தயாராகி விட்டார். இதனால் பழமைவாதக் கட்சி தனது யூத ஆதரவு, ஸ்ரேலிய ஆதரவுக் கொள்கைகளை வெளிப்படையாக கடைபிடித்தும், இதுவரை ஒரு முஸ்லீம் பள்ளிவாசலுக்கும் செல்லாமலும், கனடிய அரசு கூட்டமைப்பிற்கான அரச உதவியை நிற்பாட்டியும் வருகிறது.

சீனர்களின் வாக்கை பெறும் நோக்குடன் ஸ்ரீபன் காப்பர் அரசு முன்னர் சீனக்குடிவரவாளர்களுக்கு விதிக்கப்பட்ட தலைக்கான வரிக்கு (Head tax) மன்னிப்புக்கோரியும், அதில் பாதிக்கப்பட்ட வர்களது உறவினர்களுக்கு நட்டஈடு கொடுக்கவும் முன்வந்தது. அதைவிட பழமைவாதக் கட்சி அரசு தற்போது சீன அரசாங்கம் செய்யும் மனித உரிமை மீறல்களைப் பற்றி பேசவும் தயக்கம் காட்டியும் வருகிறது.

“தெற்காசியர்கள்” சீனர்களைவிட அதிகூடிய சிறுபான்மை சமூகமாக இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பான்மையான இந்தியர் களை கவரும் நோக்குடன், தெற்காசியா விலேயே பொருளாதார வளர்ச்சியில் ஜாம்பவானாக திகழும் இந்தியாவுடன் இருபக்க பொருளாதார உடன்படிக்கைகளை ஸ்ரீபன் காப்பர் அரசு செய்துள்ளது.

தெற்காசியர்களை சேர்ந்த சமூகங்களில் சீக்கியர்கள்தான் கனடாவின் அரசியலில் மிகவும் அதிகமாக ஈடுபட்டுள்ளவர்கள். 27 தெற்காசியர்களை கொண்ட கனடிய நாடாளுமன்ற அங்கத்தவர்களில் 21 பேர் சீக்கிய சமூகத்தை சேர்ந்தவர்கள். அவர்களில் 20 பேர் லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள். ஸ்ரீபன் காப்பர் இந்தியர்களை அதிலும் சிறப்பாக இந்துக்களையும், சீக்கியர்களையும் கவரும் நோக்குடன் எயர் கனடா விமான விபத்து விசாரணையின் அசமந்தப் போக்கிற்கு மன்னிப்பு கேட்டும், அவ்விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு நினைவுத் தூபி திறந்தும், 1914 ஆம் ஆண்டில் கனடா திருப்பி அனுப்பிய பெரும்பான்மையாக சீக்கியர் வந்த கப்பலான ‘கொமகட்டு மாறு’ சம்பவத்திற்கு மன்னிப்பு கேட்டும், சீக்கியர்களது வணக்கத்தலத்திற்கு சீக்கியர் மாதிரி தலையில் துணி கட்டியும் சென்றார்.

அமைச்சர் ஜேசன் கென்னி ரொறொன்ரோவிலும் வன்கூவரிலும் இந்தியர்கள் அதுவும் குறிப்பாக சீக்கியர்கள் வாழும் இடமெல்லாம் சென்று வாக்கு வேட்டையாடுகிறார். கட்சித் தலைவர் விவாவதத்தில் லிபரல் கட்சித்தலைவர் மைக்கல் இக்னாற்றிவ்



கூறிய செய்தியை சிறுபான்மையின மக்கள் குறிப்பாகக் கவனிக்க வேண்டும். நாங்கள் அரசியலை பல்கலாச்சார விடயத்தில் இருந்து பிரித்தே பார்க்க வேண்டும். அமைச்சர் கென்னி நாட்டை இனக்குழுமங்களின் அடிப்படையில் கூறுபோடுகிறார். இது கனேடியர்களிடையே வெறுப்பை தூண்டி விடுகிறது. கனடாவில் குடியேறுபவர்கள் தங்களை கனேடியர் களாகவே மதித்து நடக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அமைச்சர் கென்னி தனது அரசியல் இலாபங்களுக்காக சமுதாயங்களை கூறுபோட்டு ஒன்றுக்கு ஒன்று எதிராக தூண்டிவருவதன் மூலம் கனடாவின் பல்கலாச்சார கொள்கை உடைந்து போக வழிவகை செய்கிறார்.

நன்றி: ரொறொன்ரோ ஸ்ரார்.

# 30 ஆண்டுகளின்......

02ஆம் பக்கத்தொடர்ச்சி

மனைவி யாக அறிவிக்கப்பட்டனர்.

தனது தந்தை இளவரசர் சார்ல்ஸுக்கு பிறகு என பிரிட்டிஷ் மன்னர் பட்டத்துக்கு வரிசை யில் இரண்டாம் இடத்தில் உள்ளவர் இளவரசர் வில்லியம்.

இளவரசர் வில்லியம் அணிவித்த மோதிரத்தை கேட் மிடில்டன் அணிந்துள்ளார். வேல்ஸிலிருந்து எடுக்கப்பட்ட தங்கத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட மோதிரம் இது. பிரிட்டிஷ் மஹாராணி இரண்டாம் எலிசபெத் பேரனுக்கு தனது ஆசிகளை வழங்கியுள்ளார்.



திருமண பந்தத்தில் கணவனாக தான் ஏற்கும் வில்லியம்முக்கு “அன்பையும், ஆதரவையும், கௌரவத்தையும் வழங்குவேன்” என்று கேட் மிடில்டன் திருமண உறுதிமொழி வழங்கினார். 21 ஆம் நூற்றாண்டின் ஓர் அரச குடும்ப மணப்பெண்ணான கேற் மிடில்ட்டன் விளங்குகிறார்.

வில்லியம்மின் தாயார் இளவரசி டயானா இளவரசர் சார்ல்ஸ்டனான தனது திருமணத்தின்போது, “கணவனுக்கு கீழ் படிந்து நடப்பேன்” என்ற வரிகளை தனது திருமண உறுதிமொழியில் சொல்லாதது போலவே, கேட் மிடிலடனும் அவ்வார்த்தைகளை சொல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1902 ஆம் ஆண்டு ஏழாவது எட்வேர்ட் அரசருக்கு முடிசூட்டுவதற்காக இசையமைக்கப்பட்ட வைபவ பாடல் இசைக்கும் போது தேவாலய நடைபாதை வழியாக எதிர்கால அரசியாக வரக்கூடிய அவர் பவனி வந்தார். ஜெருசலம் மற்றும் கிறீன்ஸ்லீவ்ஸ் ஆகிய பிரபலமான பாடல்களும் இந்த திருமணத்துக்கான இசையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு பிரித்தானியத் தன்மையும், அரங்கியல் உணர்வும் வரவேண்டும் என்ற காரணத்துக்காக இளவரசர் சார்ள்ஸ்தான் இதனை தேர்வு செய்ததாக அதிகாரிகள் கூறுகிறார்கள்.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


SPECIAL


# ஞானியுடன் ஒரு மாலை பொழுது

## விவேகம், தியானம் மற்றும் ஆனந்தம்

தற்போதைய நவீன உலகில் எப்படி உண்மையான ஆனந்தத்தையும் விடுதலையையும் நீங்கள் பெற முடியும் என்பதற்கான தனது அனுபவங்களை, சத்குரு, உங்களுடன் பகிர்ந்து கொள்ள இருக்கிறார்.

**Metro Toronto Convention Center**
222 Bremner Blvd., Toronto, ON M5V 3L9
www.ishafoundation.org/toronto
E-Mail: toronto@ishafoundation.org
தொடர்புக்கு: 647-764-3030 / 416-300-3010



"என்னிடம் போதனைகள் ஏதும் கிடையாது, நீங்கள் விருப்பத்துடன் இருந்தால், மனித வாழ்கையில் இது சாத்தியம் என்று இதுவரை நீங்கள் கற்பனை கூட செய்திராத பரிமாணத்திற்கும் சூழ்நிலைக்கும் உங்களை அழைத்துச் செல்வேன்" - சத்குரு

# மே 28, 2011, சனிக்கிழமை

மாலை ஐந்து மணியிலிருந்து எட்டு மணி வரை
(மாலை நான்கு மணிக்கு 'சவுண்ட்ஸ் ஆப் ஈஷா' குழுவின் இசை முழக்கம்)

சத்குரு அவர்கள் ஏறத்தாழ பத்தாண்டுகளுக்குப் பின்னர் றொறோன்றோவிற்கு வருகை புரிகிறார். சத்குருவின் முன்னிலையில் வாழ்வின் ஆழமான பரிமாணங்களை உணர உங்களுக்கு இது ஓர் அளப்பரிய வாய்ப்பு.

சத்குரு அவர்கள் தன்னை உணர்ந்த ஞானியாக, யோகியாக, குருவாகத் திகழ்பவர். அனைத்து மக்களும் தன் இயல்பான ஆனந்தத்தை உணரவும், வாழ்வை தன் உள்நிலை அனுபவத்தின் வாயிலாக நிகழ்த்தவும், தெய்வீகம் உணரவும் கருணையோடு வழிகாட்டுபவர். யோகாவை தற்காலத்திற்கு ஏற்றவாறு வழங்குபவர். அவருடைய சொற்பொழிவுகளும் அவர் நடத்தும் நிகழ்ச்சிகளும் அவரை உலகத்தரம் வாய்ந்த பேச்சாளராகவும், உலகளவில் ஒரு கருத்தை உருவாக்குபவராகவும் உயர்த்தியுள்ளது.

ஈஷா அறக்கட்டளையின் நிறுவனரும் 'இன்னர் என்ஜினியரிங்' யோக நிகழ்ச்சியை உருவாக்கியவருமான சத்குரு அவர்கள் மிக வலிமை வாய்ந்த 50 இந்தியர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளார். உலகளவில் மிகவும் பிரசித்திப் பெற்ற மாநாடுகளான உலகப் பொருளாதார மாநாடு, ஐ. நா சபையின் புத்தாயிரமாண்டு அமைதி மாநாடு, உலக தலைவர்கள் மாநாடு, இங்கிலாந்தின் பிரபுக்கள் சபை மற்றும் டெட்(TED) மாநாட்டிலும் பங்கேற்றுள்ளார். இம்மாநாடுகளில் தலைமை, சமூக-பொருளாதார முன்னேற்றம் மற்றும் தனியொருவருடைய வளர்ச்சி போன்ற பல தலைப்புகளில் பேசியுள்ளார்.

சத்குரு அவர்கள் நிறுவிய ஈஷா அறக்கட்டளையைச் சார்ந்த உலகம் முழுவதிலுமுள்ள பல லட்சம் தன்னார்வத் தொண்டர்கள், கிராம மக்களுக்கான கல்வி, ஆரோக்கியம் போன்ற பல மேம்பாட்டுத் திட்டங்களையும் மரக்கன்றுகள் நடுதலில் உலகளவில் கின்னஸ் சாதனை நிகழ்த்திய பசுமைக் கரங்கள் திட்டத்தையும் முன்னின்று நடத்தி வருகின்றனர். சத்குரு அவர்களால் விஞ்ஞான முறைப்படி வடிவமைக்கப்பட்ட ஈஷாவின் யோகப் பயிற்சிகள் மூலம் இனம், மதம், வயது கடந்து இலட்சக்கணக்கான மக்கள் தங்களுக்குள் இயல்பான அமைதியையும் ஆனந்தத்தையும் உணர்ந்துள்ளனர்.

சத்குருவினுடைய பேட்டிகள் ஃபோர்ப்ஸ், தி நியூயார்க் டைம்ஸ், பிபிசி, ப்ளூம்பெர்க், சிஎன்என்ஐ மற்றும் சிஎன்பிசி ஆகிய பத்திரிக்கைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. சத்குரு அவர்கள், தலாய் லாமா, ஆர்ச் பிஷப் தேஸ்மண்ட் டுடு மற்றும் பிற ஆன்மீக தலைவர்களுடன் இணைந்து, பில் மோயர் அவர்களால் 2008ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட "பியாண்டு அவர் டிபரன்ஸஸ்" (Beyond Our Differences ) என்னும் குறும்படத்தில் பங்குபெற்றுள்ளார். இது தவிர சத்குரு அவர்கள் 50 புத்தகங்களை எழுதியுள்ளார், மேலும் இவரைப்பற்றி நான்கு புத்தகங்கள் வெளிவந்துள்ளன. மேலும் அவர் அமேஸான் புத்தக நிறுவனத்தின் சிறந்த விற்பனைகளில் ஒன்றான "மிட் நைட் வித் தி மிஸ்டிக்" (Midnights with the Mystic) புத்தகத்தின் இணை எழுத்தாளரும் ஆவார்.

## தியான அன்பர்களின் பகிர்தல்கள்

"சத்குருவை சந்தித்தது என் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது."
- ரவி வெங்கடேசன், முன்னாள் தலைவர் - மைக்ரோசாப்ட் இந்தியா

"சத்குருவை ஆன்மீக உலகத்தின் மைக் ஜாகர் எனலாம்."
- ஜோ உட், சிஇஓ, ஜோ உட் ஆர்கானிக்ஸ்

எப்போது நம் குடும்பத்தில், அலுவலகத்தில் ஒரு பொறுப்பு எடுக்கிறோமோ அப்போதே மன அழுத்தம் வந்துவிடுகிறது. ஆனால் ஆச்சரியம். ஈஷா யோகப் பயிற்சிகள் செய்யச் செய்ய, குறிப்பாக, தியானம் செய்யச் செய்ய மன அழுத்தமின்றி எல்லாவற்றையும் என்னால் தெளிவாக, தீர்க்கமாகக் கையாள முடிகிறது. என் பயிற்சிகள் ஆழமாக ஆழமாக என்னுள் ஒருவித நிச்சலனம் ஊடுருவுவதைக் கவனிக்க முடிகிறது. இதைத்தான் விலை மதிப்பில்லாததாக அறிகிறேன்.
- ரவி வெங்கடேசன், தலைமை நிர்வாக அதிகாரி, மைக்ரோசாஃப்ட், இந்தியா

ஈஷாவில் இருந்தபோது பலமுறை சுற்றிப் பார்த்தேன் என்னை! - ரா. பார்த்திபன் (நடிகர்)

மதம், இனம், மொழிக்கு அப்பாற்பட்ட 'ஆன்மீகம்'. "உன்னை உனக்கு உணர்த்தும் உன்னதம்" அது தான் ஈஷா யோகா மையம். நம்ம பசங்களுக்கு இஷா கோபிகர், இஷா டியோல் மாதிரி சினிமா நட்சத்திரங்களை விட ஈஷா யோக மையம் நல்லாவே தெரிஞ்சிருக்கு. அதுக்கு காரணம் அவங்க அப்ரோச்!

"ஞான ஒளி வீசும் சத்குரு முகத்தை பார்த்தால் கவலைகள், கால் பிடறியில் பட, பி.டி.உஷாவை விட வேகமாக ஓடுகின்றன." "பிரேக் பிடிக்காத தண்ணீர் லாரி போல் ஓடுகிற மனம்... நிதானமாகி, நம் வசமாகிறது." ஈஷா யோக மையத்தில் உள்ள "பாதரச லிங்கம் உள்ள தீர்த்தக் குளத்தில் நீராடினால்... நாள் முழுவதும், "I am secret of my energy!." என்று சொல்லிக் கொண்டே இருப்பீர்கள்" - விவேக் (நடிகர்)

உண்மையில் இப்போது என்னை நான் ஒரு முழுமையான பெண்ணாக, சக்தி வாய்ந்த பெண்ணாக உணர்கிறேன். மனதுக்குள் நிரந்தரமான அமைதியும் வந்துவிட்டது. எனக்குக் கிடைத்த புத்துணர்வுக்குக் காரணம் ஈஷாவில் சொல்லிக் கொடுத்த சாம்பவி மகா முத்ராவைத் தொடர்ந்து பயிற்சி செய்து வருவதுதான். - நடிகை ஸ்ரேயா

**றொரோன்றோ நிகழ்ச்சிக்கு இரண்டாயிரம் பேருககு மேல் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.**
**இன்றே உங்கள் டிக்கெட்டுகளை பெறுங்கள்!**

Ticket prices & seating:
$100: Premier Seating: seats are closest to the stage, parking included
$50: Preferred Seating: Right behind premier seating
$25: General seating - $15 for students

அளவான இருக்கை வசதியே உள்ளது, இந்த நிகழ்ச்சிக்கான டிக்கெட்டுகள் விரைவில் தீரும் நிலையில் உள்ளது. அதனால் தங்கள் இருக்கைகளை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

- மாணவர்களுக்கான டிக்கெட் பெற விரும்புபவர்கள் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையுடன் வர வேண்டும்.
- இருக்கையில் அமர்வதற்கு கதவுகள் மாலை நான்கு மணிக்கு திறக்கப்படும்.
- நான்கு மணிக்கு - வரவேற்பு மற்றும் 'சவுண்ட்ஸ் ஆஃ. ஈஷா'வின் இசை முழுக்கம்.
- தயவு செய்து பத்து வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளை மட்டுமே அழைத்து வரவும்.

Serandib Travels
202 - 2075 Lawrence Ave E,
(Lawrence & Warden)
416 750 0009

Paisano's Italian Garden Cafe
116 Willowdale ave,
(Bayview & Sheppard East)
647 764 3030

Vlambaram News
201 - 5215 Finch Ave., E.
(Finch & Middle Field)
416 282 8059

Elanthulir Video
4 - 3430 Finch Ave E.
(Warden & Finch)
416 495 8403

# பலதரப்பினரையும் நெருக்கடிகளுக்குள் தள்ளியுள்ள நிபுணர் குழு! குழப்பத்தில் இலங்கை அரசு!

- இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன் -

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தாமதமாக வெளியிடப்பட்டுள்ள ஐநா நிபுணர் குழுவின் அறிக்கை பல தரப்பினரையும் நெருக்கடிக்குள் தள்ளியிருக்கின்றது. இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தில், யுத்தம் முடிவடைவதற்கு முன்னரான சில மாதங்களில் போர் முனைகளில் என்ன நடந்தது என்பது குறித்து சண்டை நடை பெற்ற வேளையிலேயே அதிர்ச்சிதரும் தகவல்கள் வெளிவந்த வண்ணமே இருந்தன.

இந்தத் தகவல்கள் ஆதாரபூர்வமாக ஐநா மன்றத்திற்கு உடனுக்குடன் சென்றடைந் ததைப் பலரும் அறிந்திருந்தார்கள். எனினும் ஐநா மன்றம் இது குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் அப்போது எடுக்கவில்லை. வெறும் வாய் வார்த்தை களுடனும் ஒப்புக்காக விடுக்கப்பட்ட அறிக்கைளுடனும் அது நின்றுவிட்டது. போர்ப்பிரதேசத்தில் இன்னல்களுக்கு முகம் கொடுத்திருந்த மக்களும், அவர்கள் சார்பான நிறுவனங்களும் அந்த வேளையில் அங்கு நடந்து கொண்டிருந்த அநியாயங்களைச் சுட்டிக்காட்டி, ஐநா மன்றத்தின் மீதும் ஐநா செயலாளர் நாயகத்தின் மீதும் தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தார்கள்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் நடைபெற்ற சம்பவங்களை மனிதாபிமானத்திற்கு எதிரான நடவடிக்கைகளை காலம் கடந்த நிலையில் இப்போது நிபுணர் குழுவின் ஊடாக ஐநா அதிகாரபூர்வமாக வெளியிட்டிருக்கின்றது.

"இந்த அறிக்கையால் எங்களுக்கு என்ன கிடைக்கப்போகுது...... இறந்தவர்கள் இறந்ததுதானே.... அவையின்ர உயிரை இவங்களால மீட்டுக் கொடுக்க முடியுமா? காயமடைந்தவர்களுக்கும் காணாமல் போயுள்ளவர்களுக்கும் ஏதேனும் பலன் கிடைக்கப்போகுதா.... இல்லையே...?" - இதுதான் இன்று வன்னியில் உள்ள பெரும்பான்மையான மக்களின் ஆதங்கமாக இருக்கின்றது.

யுத்த மோதல்களின்போது, ஊழிப்பிரளயம் போன்ற அந்தப் பயங்கரமான சூழலில் அவர்கள் அனுபவித்த இன்னல்கள், துன்ப துயரங்கள் என்பன வார்த்தைகளினால் விபரிக்க முடியாதவை. அந்த வேளையில் தங்களைப் பாதுகாப்பதற்கு ஏதாவது நடவடிக்கைகளை, தமது தொப்புள் கொடி உறவாகிய தமிழ்நாடும், இந்தியாவும், மற்றும் ஐநாவும் எடுக்கும் என்ற அதீத நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைத்தது வெறும் ஏமாற்றமே. அந்த ஏமாற்றத்தினால் விளைந்த மனக் கசப்புணர்வு, அந்த மக்களுடைய மனங்களில் இன்னும் ஆழமாகப் பதிந்திருக் கின்றன. எத்தனை காலம் சென்றாலும் அந்தக் கசப்புணர்வு மறையப் போவதில்லை.



ஐநாவின் நிபுணர்குழுவை நியமிப்பதற்கு செயலாளர் நாயகம் பான் கீ மூன் (Ban Ki-moon) நடவடிக்கை எடுத்தது முதல் இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டு வெளியிடப்படு கின்ற கட்டத்தை நெருங்கியிருந்த நேரம் வரையும் இலங்கை அரசு நிபுணர்குழு மீதான தனது அதிருப்தியைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தது.

இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற போர்க்குற்றச் சம்பவங்கள் தொடர்பாக ஆராய வேண்டும், அந்தச் சம்பவங்களுக்கு வகை கூற வேண்டும், அங்கு ஏற்பட்ட விளைவுகளுக்கு அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும் அப்போதுதான் நாட்டில் ஓர் இணக்கமான சூழ்நிலையும் உண்மையான சமாதானமும், அதன் தொடர்ச்சியாக வளமான அபிவிருத்தியும் ஏற்படும் என்பதை பான் கீ மூன் வலியுறுத்தியிருந்தார். இதனை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளாத போதிலும், யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்த பான் கீ மூனுடன் இணைந்து யுத்த முடிவுக்குப் பின்னர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை கள் குறித்து உடன்பாட்டுடன் கூடிய இணை அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கை வெளியிடப்பட்ட வேளை இலங்கை அரசுக்கும் ஐநா செயலாளர் நாயகத்திற்கும் இடையில் ஏற்பட்டிருந்த இணக்கப்பாட்டை அடிப்படையாகக் கொண்டே, அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வதற்கும் செயற்படுவதற்கும் உரிய சிபாரிசுகளை உள்ளடக்கிய ஓர் ஆய்வறிக்கையைத் தயாரிப்பதற்காக நிபுணர் குழு நியமிக்கப்பட்டது.

யுத்தம் முடிவடைந்திருந்த வேளை, இலங்கைக்கு பான் கீ மூன் விஜயம் செய்திருந்த போது, சூழல் கைதியாக மாறி, நிர்ப்பந்தமான ஒரு நிலைமையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பான் கீ மூனுடன் இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். இந்த அறிக்கை வெளிவந்ததன் பின்னர் இலங்கையின் இறுதியுத்தச் செயற்பாடுகள் பற்றிய விசாரணைகள், அதுபற்றிய ஆய்வுகள் எதற்குமே இலங்கை அரசாங்கம் வளைந்து கொடுக்கவுமில்லை. விட்டுக்கொடுக்கவும் இல்லை. அத்துடன் இராஜதந்திரிகளும் மனிதாபிமான அமைப்புக்களைச் சேர்ந்தவர் களும் இறுதிக்கட்ட போர் இடம்பெற்ற பகுதிகளுக்குச் செல்வதை அது விரும்ப வில்லை. அதனால்தான் பாதுகாப்பு காரணங்களையும் கண்ணிவெடி அபாயத்தை யும் சுட்டிக்காட்டி, அங்கு செல்வதற்கான அனுமதியை வழங்க மறுத்திருந்தது. அது மட்டுமல்லாமல் நிபுணர் குழு இலங்கைக்கு வந்து விசாரணைகள் நடத்துவதையும் இலங்கை அரசு விரும்பியிருக்கவில்லை. யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் நிறைவடையப் போகின்ற இன்று வரையும் யுத்த பிரதேசத்திற்கு வெளியார் எவரும் செல்ல முடியாத நிலைமையே நிலவுகின்றது. அதற்கான அனுமதி மறுப்பு தொடர்கின்றது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் ஆறு அல்லது ஏழு மாத காலப்பகுதியில் மோதல் பிரதேசங்களில் சுமார் நான்கு லட்சம் மக்கள் சிக்கியிருந்தார்கள். நாளாந்தம் பொதுமக்கள் இறந்து கொண்டிருந்தார்கள். நூற்றுக்கணக் கானவர்கள் தினந்தோறும் காயமடைந்த வண்ணமிருந்தார்கள். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று சர்வதேச மட்டத்தில் விடுக்கப்பட்ட அழுத்தத்தையடுத்து, குறுகிய ஒரு நிலப்பரப்பை மோதலற்ற பிரதேசமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தி, இந்தப் பகுதிக்குள் செல்லுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது, இந்தப் பகுதிகளில் கனரக ஆயுதங்களில் இருந்து தாக்குதல்கள் நடத்தப்படமாட்டாது, குறிப்பாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட மாட்டாது என்ற உறுதிமொழியை அரசாங்கம் வழங்கி யிருந்தது. ஆனால் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் இந்த யுத்தமோதலற்ற பகுதிகளின் மீது உயரத்தில் பறந்து சென்ற ஐநா செயலாளர் நாயகம் பான் கீ மூன் கண்ட காட்சிகள் அகோரமாக இருந்தன. அங்கு ஓர் ஊழித்தாண்டவம் நடந்து முடிந்ததற்கான அத்தனை அடையாளங்களும் காணப்பட்டன. இதனைக் கண்டு அவர் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியிருந்தார். இந்தத் தகவலை அவருடன் அப்போது பிரயாணம் செய்த செய்தியாளர் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது என்ன நடந்தது என்பதை இலங்கைக்கான இந்த விஜயத்தின்போது பான் கீ மூன் நன்றாக

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


## தாரணி சட்ட அலுவலகம்

* சட்டத்துறையில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவம்
* இலவச ஆரம்ப ஆலோசனை

- *Real Estate Law* வீடு, காணி, வர்த்தக நிலையம் உரிமைச் சட்டம்.
- *Family Law* குடும்பச் சட்டம்.
- *Wills & Estate* இறுதி விருப்பாவணமும், மரணச் சொத்தும் சட்டம்.
- *Power Of Attorney & Affidavit* தத்துவப் பத்திரம் & சத்தியக்கடதாசி
- *Immigration Law* குடிவரவுச்சட்டம்



**தாரணி தர்மலிங்கம்,** LLB
Barrister Solicitor & Notarypublic

**GTA Square**
*5215 Finch Avenue East , #213*
**Tel: 416.291.4900**
**Fax: 416.291.4901**
*Email: contact@tharani lawoffice.com*

# கணேஷ் உடன் கலந்துரையாடல்

## விளையாட்டுத் தகவல்கள் 304

**கேள்வி:** வணக்கம் உங்களை எனக்கு 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தெரியும். நான் குமரன் விளையாட்டு கழகத்துக்கு தலைவராக இருந்த காலத்தில் நீங்கள் சென். அந்தனீஸ் விளையாட்டு கழகத்துக்கு பொறுப்பாளராக இருந்தீர்கள். அக்கால கட்டத்தில் கனேடிய தமிழ் உதைபந்தாட்ட சங்கத்தில் நிர்வாகக் குழுவில் நாம் இருவரும் ஒன்றாக இருந்து பணியாற்றினோம். கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக விளம்பரம் பத்திரிகையில் 300 ஆவது கட்டுரையை தாண்டி எழுதிக்கொண்டு இருக்கிறீர்கள். விளம்பரம் பத்திரிகையுடனான உங்கள் அனுபவத்தை கூறமுடியுமா?



**பதில்:** யாழ். இந்துக்கல்லூரியில் மாணவனாக கல்வி கற்ற காலத்தில் விளையாட்டு செய்திகளை யாழ். நகரில் இருந்து வெளிவரும் ஈழநாடு பத்திரிகைக்கு எழுதுவது எனக்கு பிடித்தமான ஒரு விடயம். கனடா வந்ததன் பின்பு 15 வருடங்களுக்கு முன்பு டி.பி.எஸ் ஜெயராஜ் நடத்திய மஞ்சரி பத்திரிகையில் முதன் முதலாக எழுதத்தொடங்கினேன். அதைப் பார்த்து நீங்கள் விளம்பரம் பத்திரிகை பதிப்பாளர் மகேந்திரன் அவர்களுக்கு என்னை அறிமுகப்படுத்திய பெருமை உங்களையே சாரும். மகேந்திரனது குடும்பத்துடன் ஏற்பட்ட பழக்கம் குடும்ப நட்பாக மாறியது. மகேந்திரனுடைய நேர்மையான பத்திரிகை தொழில் என்னை மிகவும் கவர்ந்தது. அதில் இருந்து இந்த நட்பு 12 ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றது.

**கேள்வி**: விளம்பரம் பத்திரைகையில் தொடர்ந்து எழுதவேண்டும் என்ற எண்ணம் எவ்வாறு தோன்றியது?

**பதில்:** விளம்பரம் பத்திரிகையில் எழுதுவதற்கு எனக்கு பூரண எழுத்து சுதந்திரம் விளம்பரம் தந்துள்ளது. அதே நேரம் விளையாட்டுத்துறை செய்திகளை ஒப்புநோக்கல் செய்து எழுத்துப் பிழைகள் இன்றி விளம்பரம் பத்திரிகையில் வெளிவரச் செய்வது ஆசிரியர் அவர்களையே சாரும். விளையாட்டுதுறை செய்திகளை சிறிய எழுத்து பிழைகளுடன் வாசகர்களுக்கு கொடுத்தால் அதனுடைய முழு அர்த்தமுமே மாறிவிடும். நான் பல பத்திரிகைகளுக்கு எழுதிக்கொண்டு இருந்தேன். ஆனால் என்னுடைய முழு எழுத்து சிந்தனைக்கும் முழு வடிவம் கொடுப்பது விளம்பரம் பத்திரிகை என்றால் மிகையாகாது.

**கேள்வி:** முன்பைவிட, இப்பொழுது எல்லாம், உங்களின் பெயரை ரொறொன்ரோவில் இருக்கும் முன்னணி வானொலிகள், தொலைக்காட்சிகளில் கேட்பதுடன் பார்க்கக் கூடியதாகவும் உள்ளது. எல்லா ஊடகங்களுடன் வேலை செய்யும் போது, நீங்கள் எவ்வாறு உணருகிறீர்கள்?

**பதில்:** ரொரன்ரோவில் உள்ள எந்த ஒரு ஊடகங்களும் இது வரையில் என்னுடைய விளையாட்டு செய்தி வர்ணனைகளை கட்டுப்படுத்தியது கிடையாது. ஆகவே என்னால் இயலுமானவரை அவர்களுக்கு மென்மேலும் செய்திகளை வழங்கும்போது ரசிகர்களும், நேயர்களும் உற்சாகப்படு கிறார்கள். ரசிகர்களுடைய இந்த ஆதரவே மேலும்மேலும் என்னை இந்த பணியை செய்யத் தூண்டுகின்றது.

**கேள்வி:** மேலெழுந்த மாதிரியாக, பார்க்கும்போது, உலகில் பலவிதமான விளையாட்டுகள் இருக்கும் போதும், Cricket (துடுப்பாட்டம்) ஐ பற்றி அதிகமாக எழுதுவது போலத் தோன்றுகின்றது, இதனைப்பற்றிய உங்களின் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** அதிகளவு கிரிக்கெட் ஆட்டங்களை பற்றி எழுதினாலும் அந்தந்த காலங்களில் எந்த விளையாட்டு ரசிகர் மனங்களில் எதிர்பார்ப்பை உருவாக்குவதோ அதையே! உதரணமாக கிரான்ட் ஸ்லாம் (Grand Slam) டெனிஸ் போட்டிகள் நடக்குபோதும், உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டிகள் நடக்கும்போதும், அல்லது யூரோப் உதைபந்தாட்ட போட்டிகள் நடக்கும் போதும், கனேடிய ஹொக்கி போட்டிகள், நடக்கும்போதும் மேலும் ஒலிம்பிக் போட்டிகள் நடக்கும்போதும் கூட சீசனல் விளையாட்டுகளை நான் எழுதத் தவறுவதில்லை. அந்த காலகட்டங்களில் ரசிகர்களின் எதிர்பார்ப்பும் அப்படியே இருக்கின்றது.

குறிப்பாக எமது தமிழ் வீரர்கள் கனடாவிலும் சரி உலகெங்கிலும் சரி எந்த விளையாட்டுத்துறையிலும் புரியும் சாதனைகளை நான் எழுதத்தவறுவதில்லை.

**கேள்வி:** தமிழ்மக்கள் பலர் கனடாவிலும் மற்றும் உலகின் பல நாடுகளிலும் பலவிதமான விளையாட்டுகளில் சிறந்து விளங்குகிறார்கள், அவர்களைப்பற்றிய தகவல்கள் பற்றி அல்லது அவர்களுடன் தொடர் கொண்டு அவர்களின் வளர்ச்சி பற்றி விளம்பரத்தில் எழுவதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்னவாக இருக்கலாம்? நடைமுறையில் இது சாத்தியமாகுமா?

**பதில்:** நிச்சயமாக! விளம்பரம் பத்திரிகையில் பல தடவைகள் கனடாவிலும் சரி உலகிலும் சரி எமது தமிழ் வீரர்கள் புரியும் சாதனைகளை கட்டுரைகளாக வரைந்துள்ளோம். ஆனால் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விளையாட்டுத்துறையில் புரியும் சாதனைகளை ஊடகங்களுக்கு தெரிவிப்பதில்லை. பாடசாலை ரீதியாகவும் சரி மாகாண அல்லது தேசிய அளவில் எமது தமிழ் இளம் சமுதாயம் புரியும் சாதனைகள் உடைய தரவுகளை மட்டும் எமக்கு தந்தால் போதும். நிச்சயமாக நாம் அவர்களுடைய சிறப்புக்களை எமது சமுதாயத்தின் முன் கொண்டு வருவது விளம்பரம் பத்திரிகையின் ஒரு முக்கிய நோக்கமாகும்.

**கேள்வி:** விளையாட்டு வீரர் முரளிதரன் பற்றி நீங்கள், நிறையவே விளம்பரத்தில் எழுதியுள்ளீர்கள், அண்மையில் கூட எழுதியிருந்தீர்கள், இவரைப்பற்றி அதிகம் எழுதுவது எதற்காக?

**பதில்:** உண்மையிலேயே விளையாட்டுத்துறையில் தமிழ் மகன் ஒருவர் உலகளாவிய ரீதியில் இதுவரையில் சரித்திரத்தில் தடம்பதித்தது முரளிதரனைத் தவிர யாருமே இல்லை. பல வீரர்கள் விளையாட்டுத்துறையில் சாதனை படைத்திருந்தாலும் இவருடைய சாதனைகளை முறியடிப்பது என்பது ஒரு கேள்விக்குறியே ஆகும். மேலைத்தேய நாட்டு வீரர்கள், நடுவர்களின் பல நெருக்கடிகளை சமாளித்தது மட்டுமல்லாமல் எத்தனையோ தடவை அவருடைய உடலைக்கூட சோதனைக்கு உட்படுத்தியிருந்தார்கள். இத்தனை சோதனைக்கு மத்தியிலும் எனது விடா முயற்சியினாலும், கடின உழைப்பினாலும் எவருமே நெருங்கமுடியாத சிறப்பான சாதனைகளை ஏற்படுத்தி உலகெங்கும் வாழும் தமிழர்கள் யாவருமே பெருமைப்பட வைத்தவர். ஆகவே இந்த நட்சத்திர வீரரைப்பற்றி எழுதுவதை ரசிகர்கள் ஆவலாக எதிர்பார்க்கிறார்கள்.

**கேள்வி:** கனடாவில் தமிழ்மக்களின் வளர்ச்சியை நோக்காக கொண்டு பல விளையாட்டுக் கழகங்கள் (Soccer / Cricket / Athlethic) இயங்குகின்றன. இவற்றின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும்? இந்தக் கழகங்களும் தொடர்ந்து இயங்க வாய்ப்புகள் உள்ளனவா?

**பதில்:** நிச்சயமாக! கிரிகெட் துறையை எடுத்துக்கொண்டால் தமிழர் கழகமான செஞ்சூரியன் விளையாட்டுகழகம் ரொரன்றோவில் முதன்மையான விளையாட்டு கழகமாக திகழ்ந்து வருகின்றது. இந்தக் கழகத்தில் இருந்து பல விளையாட்டு வீரர்கள் கனேடிய தேசிய அணியில் விளையாடி உள்ளனர். தடகள விளையாட்டு போட்டிகளை எடுத்துக்



உரையாடியவர்
யோகாஸ் தவம்

கொண்டால் பல தமிழ் வீரர் வீரங்கனைகள் தேசிய அளவில் பங்கு பற்றி பல பதக்கங்களை வென்றுள்ளார்கள். உதை பந்தாட்டத்தை எடுத்துக்கொண்டால் கனேடிய மண்ணில் உத்தியோகபூர்வ அந்தஸ்துபெற்று பல கழகங்கள் சிறுவர்களிலிருந்து ஆண்கள், பெண்கள் மேற்பிரிவுகள் வரை வெளிநாட்டுப் பயிற்சி வல்லுனர்களால் பயிற்சிகள் வழங்கப்படுவது மட்டுமல்லாமல் எமது தமிழர் சமுதாயத்தில் தெரிவு செய்யப்பட்ட திறமையான வீரர்கள் ஒற்றுமையாக ஒரு அணியின் கீழ் திரண்டு கடந்த பல வருடங்களாக ரொரன்றோவில் வேறு இனத்து கழகங்களுடன் மோதி சாதனைகள் படைத்துள்ளார்கள். உதாரணமாக கனேடிய தமிழர் விளையாட்டு கழகமான (CTTSA), Scarborough Rangers விளையாட்டு கழகங்களை குறிப்பிடலாம்.

**கேள்வி:** உலகில் மட்டுமல்லாது கனடாவிலும் தமிழ்மக்களின் நற்பெயரை விளையாட்டின் ஊடாக, எவ்வாறு நிலை நாட்டலாம் என நீங்கள் நம்புகின்றீர்கள்?

**பதில்:** "வீரம் செறிந்த விழுமிய பரிமாணங்களை உடைய தமிழினத்தில் சரித்திரத்தை சர்வதேச உலகிற்கு வெளிக்கொண்டு வருவதற்கு விளையாட்டுத்துறை பங்களிப்பு மிக மிக முக்கியமானதொன்றாகும்." தமிழீழ மண்ணில் போராட்ட வடிவங்களுக்கு மத்தியிலும் தமிழீழ விளையாட்டுத் துறையை ஆரம்பித்த முதல் நாள் கிளிநொச்சி மண்ணில் எமது தேசியத் தலைவர் சொன்ன வார்த்தைகள் இவை.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# இறுக்கப்படும் அடமானக்கடன்

வீட்டின் விலை அதிகரிப்பு, இப்பொழுது சீராக உள்ளதாக பல பொருளாதார அறிஞர்கள் தங்கள் அறிக்கைகள் மூலம் கூறுகின்ற போதிலும் நாட்டின் சில பகுதிகளில் அதிகரிப்பு தொடர்ந்து கொண்டே செல்கின்றது. ஆனாலும் கல்ஹரி போன்ற நகரங்களில் கடந்த வருடம் (2010) மார்ச் இற்கும் இவ்வருடம் மார்ச் 2011 இற்கும் இடையில் சிறிதளவு இறக்கம் (1.7%) ஏற்பட்டுள்ளது. வன்கூவர் நகரத்தை தவிர, அனேகமான மற்றய நகரங்களின் விலை அதிகரிப்பு சீரானதாகவே காணப்படுவதாகக் கொள்ளலாம்.

கனடிய பணவீக்கம் (Inflation) மார்ச் மாதத்தில் எதிர்பாராதளவிற்கு ஏற்பட்ட அதிகரிப்பே இதற்குரிய முக்கிய காரணமாகும். அண்மைக்காலங்களில் ஏற்பட்ட உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருளின் விலை அதிகரிப்பே (கடந்த ஒரு வருடத்தில் எரிபொருள் 18.9% அதிகரித்துள்ளது) பணவீக்கத்தை அதிகரிக்க செய்துள்ளது. மார்ச் 2011 இல் பணவீக்கம் 3.3% ஆக அதிகரித்துள்ளது. முந்தைய மாதத்தில் 2.2% ஆக இருந்தது. கடந்த 2½ வருடங்களில் இதுவே மிகப்பெரிய பணவீக்க

## கடந்த ஒரு வருடத்தில் வீட்டின் சராசரி விலை ஏற்றம் எவ்வாறு அதிகரித்துள்ளது என்பதனைக் கீழே காணலாம்.

| நகரம் | மார்ச் 2010 | மார்ச் 2011 | % மாற்றம் |
|---|---|---|---|
| வன்கூவர் | $693.482 | 786.311 | 13.4 |
| ரொறொன்ரோ | $434,693 | $456,147 | 4.9% |
| மொன்றியல் | $287,737 | $307,097 | 6.7% |
| கல்கறி | $405,551 | $398,836 | 1.7 |
| கனடா | $341,081 | $321,286 | 8.9 |

இவ்வருடத்தில் (2011) யூலையில் வட்டிவீதம் அதிகரிக்கலாம் என ஆரூடம் கூறப்படுகின்றது. இன்றைய நிலைமையில் இது உண்மைபோலத் தான் தோன்றுகின்றது.

அதிகரிப்பாக காணப்படுகின்றது. மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்படும் அரசியல் சீரற்ற நிலை, ஜப்பானில் ஏற்பட்ட அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்பு போன்றவையே காரணமாகக் கூறப்படுகின்றது. இந்நிலைமை தொடருமாயின் வருடக் கடைசியில் 4% வரை பணவீக்கம் அதிகரிக்கலாம் என ஐயம் தோன்றுகின்றது. இதனால் வட்டிவீத அதிகரிப்பே பணவீக்கத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம் என்பது, அனேக பொருளாதார கொள்கை வகுப்பாளர்களின் ஏகோபித்த நம்பிக்கை.

வட்டிவீத அதிகரிப்பு ஆதனம் வாங்குபவர்களை பாதிக்கலாம் என்பது உண்மையாக தோன்றினாலும் 1/4% அல்லது ½% வட்டிவீத அதிகரிப்பு ஆதன வியாபாரத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் வட்டி அதிகரிப்பு 1% ஐ தாண்டினால், முதல்தடவை ஆதனம் வாங்குபவர்களிற்கு பாதிப்பு ஏற்படலாம். அதாவது மாதாந்த கொடுப்பனவு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 340


**HomeLife / GTA Realty Inc., Brokerage***

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

*Independently Owned & Operated



5215 Finch Ave. E, #203 Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng (Broker/Owner)

**CONDO. FOR RENT**
**SCARBOROUGH TOWN CENTER**
1 Bedroom + den condo. for lease. Utilities included. Immediate occupancy. Resonable rent.

**BRAND NEW TOWN HOUSE**



**KENNEDY & SHEPPARD**
3 + 1 Den town house sale. 3 Washrooms. Asking only $430,900.

**HOUSE FOR SALE**
3 Bedroom + walk-out house for sale. 2 Storey house. New Market (HWY404 / MULLOCK). 5 Years old. Main floor master bedroom + full washroom. Immediate occupancy. Asking only $389,900.

**CONDO. FOR SALE**
SHERBOURNE & BLOOR
2 Bedroom + den condo for sale. 2 Washroom.

**CONDO. FOR SALE**



**WARDEN & FINCH**
2 + Den can be 3 bedroom. Asking only 159, 900

**BRAND NEW CONDO. AVAILABLE**
**HWY 401 & YONGE**
2 Bedroom, 2 washroom. Over 1200 Sqft. Asking price $474,000. Call: 416.315.9397

**CONDO. FOR RENT**



**YONGE & LAKESHORE TORONTO**
2 Bedroom condo for rent. Corner unit. Rent $1800.

**CONDO FOR SALE**
**MCCOWAN & ELLESMERE**
Brand new 1 bedroom + den condo for sale. Walking distar to Scarborough Town center. Immediate occupancy. Asking $239,900.

**SPACE FOR LEASE**
**Finch & Middlefield.**
1000 sqft. 2nd Floor. All utilities included. Close to all amenities. Lease only $1100.

**BRAND NEW TOWN HOUSE FOR SALE**



**KENNEDY & SHEPPARD**
4 Bedroom, 3 washrooms Asking price $444,900

**CONDO. FOR SALE**
**MCCOWAN & SHEPPARD**
2 Bedroom + den condo. for sale. 2 Full washroom. Large unit. Very close to TTC, 3 minutes to hwy 401. Asking $234,900

**SPACE FOR LEASE**
2000 Sqft. Clean building. Lots of parking. 2nd floor. Above Embassy store in Scarborough / at 5200 Finch Ave. East. All utilities included. No extra. Can be used for Private Tution, Medical Office, Yoga class, Insurance, Law Office Physiothraphy , Optical, Mortgage........ Much more Resonable rent..

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
*Cell: 613 850 9931*

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

*Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555*

# பலதரப்பினரையும்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

அறிந்திருந்தார். ஆயினும் இந்தக் குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்கள் சரியான முறையில் வெளிவரவேண்டும் என்பதற்காகவே அவர் நிபுணர் குழுவை உருவாக்கி அதன் ஊடாக இந்த அறிக்கையைத் தயார் செய்திருக்கலாம்.

ஐநாவின் கொள்கைகளுக்கமைய இந்த நிபுணர் குழு சுதந்திரமாகச் செயற்பட்டிருப்பதை அதன் அறிக்கையின் ஊடாகத் தெளிவாகத் தெரிகின்றது. ஏனெனில் யுத்தம் நடைபெற்ற வேளை, யுத்தப் பிரதேசத்தினுள்ளே என்ன நடக்கின்றது என்பது தொடர்பாக ஐநாவுக்கு அப்போது அங்கு இருந்த தொடர்பாடல் வலைப்பின்னல் ஊடாகத் தெளிவான தகவல்கள் வந்து கொண்டிருந்தன. இந்த தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டவையாகவும் இருந்தன. இருந்தும் ஐநா இந்த அநியாயங்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து அதற்கே உரிய அதிகாரத்துடன் உறுதியான வகையில் குரல் எழுப்பவும் இல்லை. அங்கு நடைபெற்ற சம்பவங்களை மனித உரிமை மீறல்களை, யுத்தக் குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்தவுமில்லை என்பதையும் நிபுணர் குழுவின் அறிக்கை தெளிவாகவும் உறுதியாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கு ஐநா பொறுப்பு கூற வேண்டும் என்ற செய்தியும் அங்கு கூறப்பட்டுள்ளது.

இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான செயற்பாடுகள் என்பவற்றிற்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளுமே பொறுப்பு. இதற்கு வகையும் பொறுப்பும் கூறப்பட வேண்டும் என்பதை இந்த அறிக்கை பல்வேறு வழிகளின் ஊடாக வலியுறுத்தியிருக்கின்றது.

இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இருதரப்பினருக்கும் பின்புலத்தில் பலமாகவும் உறுதுணையாகவும் இருந்தவர்கள் பற்றியும் அறிக்கை பேசுகின்றது. அந்த வகையில் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக, வேற்று நாட்டுப் படைகளுடன் மோதுவதைப் போன்ற ஈவிரக்கமற்ற ஒரு யுத்தத்தை நடத்துவதற்காக ஆயுதங்களையும், போர்த்தள பாடங்களையும் வழங்கி உதவிய இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு எதிராகப் போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதை ஐநாவின் இலங்கைக்கான முன்னாள் பேச்சாளர் கோடன் வைஸ் வலியுறுத்தியிருக்கின்றார்.



விடுதலைப் புலிகளின் மீதும் இந்த அறிக்கை குற்றம் சுமத்தியுள்ளது. குறிப்பாகப் பொதுமக்களைக் கேடயமாகப் போரின்போது பயன்படுத்தியமை, இளைஞர்களைப் போராளிகளாக்குவதற்குப் பலவந்தமாகப் பிடித்துச் சென்றமை, யுத்தப் பிரதேசத்தில் இருந்து தப்பியோட முயன்ற பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியமை உள்ளிட்ட பல விடயங்களைப் போர்க்குற்றச் செயல்களாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான செயல்களில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளுக்கு புலம்பெயர்ந்துள்ள தமிழர் சமூகம் நிதியுதவி உள்ளிட்ட உதவிகளை வழங்கியிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள நிபுணர் குழு, இந்த நிதி பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது. ஆகவே, இலங்கை அரசாங்கம் யுத்தம் நடத்துவதற்கு உதவி செய்த நாடுகளும், இந்த யுத்தச் செயற்பாடுகளுக்கு வகையும் பொறுப்பும் கூற வேண்டும், அதே போன்று விடுதலைப் புலிகளுக்கு உதவிய புலம்பெயர்ந்துள்ள தமிழர் சமூகமும் பொறுப்பு கூற வேண்டும் என்பதும் இந்த அறிக்கையின் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலோட்டமான பார்வையில் யுத்த மோதல்களின்போது, யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இருதரப்பினரும் உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள், அதிலும் அரசாங்கப் படைகள் அதிகமாக மீறியிருக்கின்றன என்பதை அறிக்கை தெளிவாகக் கூறியிருக்கின்றது. யுத்தத்தில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளின் இராணுவ பிரிவு முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கை அரசாங்கத்தின் மீதே போர்க்குற்றச்சாட்டுக்கள் மேலோங்கிய நிலையில் சாட்டப்படுகின்றது.

ஆனால் நிபுணர்குழுவின் அறிக்கையானது பல தரப்புச் செயற்பாடுகளையும் விலாவாரியாகச் சுட்டிக்காட்டி, அனைத்துத் தரப்பினரும் வகை கூற வேண்டும் என நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தியிருக்கின்றது.

ஐநாவினால் இந்த அறிக்கை அதிகாரபூர்வமாக வெளியிடப்படுவதைத் தடுப்பதற்குப் பகீரதப் பிரயத்தனங்களை இலங்கை அரசு மேற்கொண்டிருந்தது. இந்த முயற்சியின் ஒருபடியாகவே, தனக்குக் கிடைத்திருந்த அந்த அறிக்கையின் பிரதியைப் பயன்படுத்தி அறிக்கையின் முக்கிய சில பகுதிகளை உள்ளூர் பத்திரிகையான ஐலண்ட் பத்திரிகைக்குக் கசியவிட்டு அதன் மூலம் அரசியல் இலாபம் தேடுவதற்கான உத்தியையும் இலங்கை அரசாங்கம் கையாண்டிருந்தது.

பயங்கரவாதிகளிடமிருந்து சிங்கள மக்களையும் நாட்டையும் மீட்டெடுத்த சுதந்திரப் போராட்ட வீரர்களாகக் காட்டப்பட்டு வருகின்ற இராணுவத்திற்கு எதிராகவும், தமது விடுதலை வீரத் தலைவனாகிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகவும் சோடிக்கப்பட்ட போர்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவர்களை சர்வதேச மட்டத்தில் குற்றவாளிகளாக்குவதற்கு ஐநா முயற்சிக்கின்றது என்ற ஒரு தோற்றப்பாட்டை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதே இந்த உத்தியின் முக்கிய நோக்கமாகும். இந்த நோக்கமானது அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்றே கூறப்படுகின்றது.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையை முற்றாக நிராகரித்துள்ள போதிலும், போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் சரியான விளக்கங்களையும் காரணங்களையும் தன்னால் வெளியிட முடியாது என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கின்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் இதனை நன்கறிவார். இதனால்தான் இந்த அறிக்கை தொடர்பான விசாரணைகள் எதுவும் நடைபெறாமல் தடுக்க வேண்டும் என்பதற்காகத் தன்னால் இயன்ற அத்தனை முயற்சிகளையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சர்வதேச இராஜதந்திர மட்டத்திலும் அரசாங்கம் கையாண்டு வருகின்றது.

அதேவேளை, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இந்த அறிக்கைக்கு எதிரான போராட்டங்களை நடத்துவது என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது அத்தகைய போராட்டங்களை நடத்தப் போவதில்லை என்று அரசு அறிவித்திருக்கின்றது. குற்றஞ்செய்த மனம் குறுகுறுக்கும் என்பார்கள். அதுபோலவே குறுகுறுத்த மனப்போக்கில் அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்களும் முக்கியஸ்தர்களும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். இந்த அறிக்கை மூன்று முட்டாள்களின் அறிக்கை என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ள அதேவேளை, இந்த அறிக்கையில் கூறப்பட்ட எதனையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. எனவே அதுபற்றி கருத்து கூற வேண்டிய அவசியமில்லை என அமைச்சர் டலஸ் அழகப்பெருமா கூறியிருக்கின்றார். இந்த அறிக்கை விடுதலைப்புலிகளைப் புனிதர்களாகக் காட்டுவதற்காகவே வெளியிடப்பட்டிருக்கின்றது என்றும் இது ஒரு பக்கசார்பான ஆதாரமற்ற அறிக்கை என்றும் அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதேவேளை, இந்த அறிக்கை தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு ஐநாவின் உறுப்புநாடுகள் வேண்டுகோள் விடுக்க வேண்டும், அதனை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். அப்போதுதான் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்த முடியும் என தெரிவித்துள்ள ஐநா செயலாளர் நாயகம். அத்தகைய விசாரணை ஒன்றை நடத்துவதற்குத் தனக்கு அதிகாரமில்லை என்றும் கூறியுள்ளார்.

எனினும் இலங்கை அரசாங்கத்தின் போர்க்குற்றச் செயற்பாடுகள் பற்றிய விசாரணைகளில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யத்தத்தை நடத்துவதற்கு இலங்கை இராணுவத்தினருக்கு ஆயுதத் தளபாடங்களை வழங்கி உதவிய நாடுகளும் வகை கூறவேண்டிய சந்தர்ப்பம் இருப்பதனால், அத்தகைய விசாரணை ஒன்றை ஐநாவின் உறுப்பு நாடுகள் விரும்பப் போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

பல்வேறு தரப்பினர் மத்தியிலும் அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் இந்த அறிக்கை ஏற்படுத்தியிருக்கின்ற போதிலும், இதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மீது சர்வதேச மட்டத்தில் ஒரு போர்க்குற்ற விசாரணை நடத்தப்படுமா என்பது இப்போதைய உலக அரசியல் நீரோட்டத்தில் சந்தேகமாகவே இருக்கின்றது.


# நூல் வெளியீடு

**"எம்மை நாம் பாதுகாப்பது எப்படி"**
**என்ற மருத்துவ கைநூல்**

**இடம்:** *1537 - 1539 Warden Ave.*
*(Warden & Ellesmere)* அமைந்துள்ள கனேடிய
நயினாதீவு நாகம்மாள் கோவில் கலாச்சார நிலையத்தில்

**நேரம்:** மே 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு

**தமிழ் அறிஞர்களும், வைத்திய நிபுணர்களும் மற்றும் அனைவரும் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.**
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

நூல் வெளியீட்டு அமைப்பாளர்கள் கனடா
647.718.3909


வாழ்க்கை கவர்க்கமானது இனிய இல்லமொன்றில்..
Sell your home FASTER and More MONEY with
Elaguppllai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
When you list your home with MIKE you receive these Guarantees
Your home advertised 24 hours a day until is sold
Your home advertised in full colour prints ads every week until it is sold
Our Team of Specialists for the same price as hiring a single agent
Your home sold in 90 days or we buy it*
SOLD
Mccowan/Hwy 401
$193,888
Condo Apt , Bed rooms 1 Washrooms 1
Lawrence/Atkinson
$289,000
Detached Bungalow, Bed-rooms 3, Washrooms 1,
Pt. Union/Lawrence
$336,000
Town house 2 Story, Bed-rooms 3, Wasroom 2
Steeles/Kennedy
$359,000
Link 2 Story, Bed rooms 3 Washromss 2
9th Line/14th
$388,800
Town House 2 Story, Bed rooms 3 Washrooms 3,
Main St/10th Line (N)
$406,900
Detached 2 Storey , Bed rooms 3 Washrooms 3,
Steeles/Markham
$439,900
Detached 2 storey, Bed-rooms 3, Washrooms 3,
Church/Ninth Line
$448,000
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3,
9th Line/Hoover Park Dr.
$469,900
Detached 2 Story, Bed rooms 3 Washromss 3,
Middlefied/Denison
$475,000
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3
16th Ave & 9th Line
$488,000
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3
E-Markham/N-14th Ave
$495,000
Detached 2 story, Bed rooms 4+2 Washrooms 4
Meadowvale/Sheppard
$499,900
Detached 2 Story, Bed rooms 4+1, Washrooms 4,
9th Line And 14th Ave
$525,000
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3,
Bur Oak / Markham / 9th Line
$579,000
Link 2 Story, Bedrooms 4 Washrooms 3,
E.Mccowan/S.Major Macken-
$549,900
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3
1Sheppard/Morningside
$579,900
Detached 2 Story, Bedrooms 4+1, Washroom 3,
Ninth Line/14th Ave
$598,000
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3,
9th Line/14th Avenue
$625,000
Detached 2 Story, Bedrooms 5 Washrooms 4
Brimley/Highglen
$849,000
Detached 2 Story, Bedroom 4+2 Washrooms 5
Bayly & Shoal PointCousens
$359,900
Detached 2 Story Bed rooms 3, Washrooms 3,
Fathertobim/Fernforst
$435,000
Detached 2 Storey, Bed rooms 3, Washrooms 3,
Sunset Rd/Shorelea Line
$439,000
Sale Of Business Without Property Gas Stations
Hwy 89 West Of Hwy 27E
$1,275,000
Sale Of Business Without Property Gas Stations
Pt. Union/Lawrence
$336,000
Townhouse 2 Story, Bedrooms 3 Washrooms 2
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave, Penthouse, Markham ON L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

2007 நவம்பரில் இருந்து பார்த்தால் கனடிய டொலர் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. ஒரு கனடிய டொலருக்கு அமெரிக்க டொலர் 1.05. வங்கியில் சென்று மாற்றினால் இந்த ரேட் கிடைக்காது. ஏனென்றால் நாம் குறிப்பிடுவது அந்நியச் செலவாணிச் சந்தையில் வணிகம் புரியம் நிறுவனங்களுக கிடையே நிலவிய ரேட்டைத்தான். இந்த ரேட்டும் நிலையாக இருக்காது. நொடிக்கு நொடி கூட மாறலாம். இதை அடிப்படையாக வைத்தே வங்கிகள் தங்களின் வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்கும் ரேட்டைத் தீர்மானிக்கிறார்கள். வங்கிகள் வாடிக்கையாளர்களுக்குச் செய்யும் சேவைகளுக்காக சிறு பகுதியை கழித்துக் கொண்டு ரேட்டை நிர்ணயிக்கலாம். உதாரணமாக ஒரு கனடிய டொலர் 1.05 அமெரிக்க டொலர் என்று வங்கிகளுக்கு இடையிலான சந்தையில் நிலவும் போது வாடிக்கையாளர் ரேட் 1.00 க்கு 1.00 ஆக இருக்கலாம். .05 சேவை மற்றும் இலாபக் கட்டணமாக வங்கியால் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.



மேலும் நீங்கள் விற்பதற்கு ஒரு விலை இருக்கும். வாங்குவதற்கு ஒருவிலை இருக்கும். இரண்டுக்கும் உள்ள வித்தியாசம், வணிகம் செய்பவரின் லாபத்திற்குப் போகும். மேலும் மார்ச் மாதத்தில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஓராண்டு விலைவாசி உயர்ந்துள்ளது. எவ்வளவு? 3.3 சதவீதம்.

எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களின் விலை ஏற்றமே இந்த உயர்வுக்குக் காரணம். அதிகபட்ச உயர்வு எரிபொருள் விலையினால் மட்டுமே. விலைவாசி உயர்ந்தால் Bank of Canada வட்டி வீதத்தைக் கூட்ட வேண்டும்.

கனடிய டொலரின் மதிப்பு உயர்ந்தால் வட்டி வீதத்தைக் கூட்டக்கூடாது. இப்போது நடப்பதோ, எதிரும், புதிருமான விடயம். Bank of Canada என்ன செய்யும்? பெரும்பாலும் வட்டி வீதத்தைக் கூட்டாது. சமீபத்தில் வந்துள்ள புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பார்க்கையில் பெரும் பான்மையான மக்கள் கனடிய பொருளாதாரத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இதற்கு என்ன அடிப்படை என்று பார்த்தால், வீட்டு விலைகள் விழாமலும், மாறாக சற்றே உயர்ந்தும் வருவதும் தான் காரணம் என்று அறியப்படுகின்றது. இந்த அடிப்படையைப் பலமான அஸ்திவாரமாகக் கருத முடியாது.

நாம் பலமுறை கூறியுள்ளபடி பாட்டி கால வைத்தியமே சிறந்தது. அது என்ன பாட்டிகால வைத்தியம் என்கிறீர்களா? செலவுகளைச் சிக்கனமாகச் செய்து, வரவு எதுவானாலும் அதற்குள் சேமிக்கும் பழக்கத்தைக் கைக்கொள்வதே. திட்டம் போட்டு செலவு செய்யுங்கள். முதலில் வரவு எவ்வளவு என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். இது தெரியாதா? என்கிறீர்களா? உங்களுக்கு என்னென்னவற்றிற்கு எவ்வளவு எவ்வளவு சம்பளத்தில் பிடிக்கிறார்கள் கடைசியில் கையில் வாங்குவது எவ்வளவு? சொல்லுங்கள் பார்க்கலாம். எளிய கேள்வி. ஆனால் பலபேருக்கு விடை தெரியாது என்பதுதான் உண்மை. செய்யும் செலவீனம் ஒவ்வொன்றையும் திட்டமிட்டுச் செய்யுங்கள். கடன் அட்டைகளை ரொக்கத்தைப் போல உபயோகியுங்கள். கடனுக்கு வாங்கு முன் வட்டியைப் பாருங்கள். திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளை அறிந்து கொள்ளுங்கள். அபாரத்தொகை என்று ஏதாவது எப்போதாவது வருமா? தெரிந்து கொள்ளுங்கள். இதெல்லாம் தெரிந்திருந்தால் தான் நீங்கள் திட்டமிட்டுச் செயல்படுபவர். இல்லையேல் கண்ணை மூடிக்கொண்டு வாகனத்தை ஓட்டும் சாரதி தான் நீங்கள்.

மேலும் இதுபோன்ற பல நல்ல தகவல்களைத் தெரிந்து கொள்ள ஆசிரியரின் இணையதள முகவரிகள் www.dreams and money.com www.perri.com நேரில் உரையாட தொலைபேசி எண்: 416.473.6100



**பெரி. முத்துராமன்**

# சீரற்ற சிரியா

**- ரதன் -**

இன்று உலகம் இரண்டு முக்கிய பொருளாதார முறைகளுள் உழல்கின்றது. Neoliberalism and Globalization. இவை இரண்டும் ஒன்றை உறுதிப்படுத்துகின்றன. குறைந்த உற்பத்தி விலையில் அதிகளவு லாபம். சவப்பெட்டிக்கு பிணம் யாருடையது என்பதில் கவலையில்லை என்பது போல் இவற்றிக்கும் எப்படி பெறுவது என்பதல்ல எப்படியும் பெறலாம் என்பதே நோக்கம். இதற்காக சந்தைகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது அவசியம். எண்ணெயில் இருந்து ஒவ்வொரு பொருட்களினதும் விலை நிர்ணயம் மேற்கே செய்கின்றது. தேயிலையின் விலையை இலங்கை தீர்மானிக்க முடியாது. இதன் தொடர்பில் போர் அவசியம். ஆயுத பொருட்கள் விற்பனைக்கு இது உதவும். லிபியா மீதான தாக்குதலில் ஆயுத விற்பனையில் லாபம் கிடைக்கும் என பிரான்ஸ் நேரடியாகவே கூறியுள்ளது. மத்திய கிழக்கில் தொடரும் போர்களின் அடிப்படையும் மேற் கூறியவையே. மத்திய கிழக்கில் புதிதாக முளை விட்டுள்ள போராட்டங்கள் சிரியாவுக்கும் பரவியுள்ளன.

சிரியா கி.மு 10,000 ஆண்டளவில் இருந்து அதன் சரித்திரத்துக்கான ஆதாரங்களைக் கொண்டுள்ளது. Neolithic கலாச்சாரத்தை ஆரம்பத்தில் கொண்டிருந்தது. ஆய்வாளர்களின் கருத்துப்படி சிரியா மிகத் தொன்மையான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. Ebla கலாச்சாரம் மிகப் பழையது. Semitic languages எனப்படும் முதல் எழுத்து வடிவத்தைக் கொண்ட மொழிக் கூட்டத்தில் Ebla மொழியும்



உள்ளடக்கப்பட்டது. சிரியா கி.மு முதலாம் நூற்றாண்டில் Canaanites, Phoenicians (கிறீக்), Arameans ஆகியோர் வசமிருந்தது. பின்னர் வெவ்வேறு கால கட்டங்களில் Egyptians, Sumerians, Assyrians, Babylonians and Hittites போன்றோர் வசமிருந்தது. இவர்கள் அனைவரும் ஒன்றில் கிரேக்கர் (மெசத்தோப்பியர் உட்பட்ட) மற்றையவர்கள் அரேபியர்களாக இருந்தனர். கி.மு 300 ஆண்டளவில் அலெக்சாண்டரின் Seleucid Empire ன் அங்கமாகவிருந்தது. Pompey சிரியாவை கைப்பற்றியதன் பின்னர் இது ரோம சாம்ராஜ்யத்தின் அங்கமாக மாறி விட்டது. இது கி.மு 62ம் ஆண்டளவில் நடைபெற்றது. சிரிய நகரமான Antioch ரோம சாம்ராஜ்யத்தின் மூன்றாவது பெரிய நகரமாக மாறிவிட்டிருந்தது. கி.பி 222-235 வரை ரோம சாம்ராஜ்ய அரசனான Alexander Severus சிரியனவர். ரோம சாம்ராஜ்யத்தில் இதன் பின்னரும் இரு சிரி யர்கள் அரசர்களாக இருந்துள்ளனர். மிகப் பழமை வாய்ந்த கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று சிரியாவில் உள்ளது.

கி.பி 640 ம் ஆண்டளவில் சிரியா முஸ்லீம் சாம்ராஜ்யமாக மாறியது. அவர்கள் சிரியா வை நான்கு மாநிலங்களாக பிரித்திருந்தனர். டமாஸ்கஸ், ஹோம்ஸ், லெபனான், பாலஸ்தீனியம் ஆகியவையே அவை. இந்தியாவரை பரவியிருந்த இந்த சாம்ராஜ்யத்தில் டமாஸ்கஸ் மிக முக்கிய நகரமாகவிருந்தது. Abbasid அரசில் அரேபிய மொழி ஆட்சி மொழியாக மாற்றப்பட்டது. இதன் பின்னர் ஒட்டோமன் சாம்ராஜ்யத்திலும் சிரியா முக்கிய பிரதேசமாக விளங்கியது.

## நவீன சிரியாவின் முக்கிய சரித்திர நிகழ்வுகள்

1918-1920 – 1918 ஐப்பசியில் அரேபிய Emir Feisal தலைமையிலான படைகள் பிரித்தானிய படைகளின் உதவியுடன் ஒட்டோமன் சாம்ராஜ்யத்தை முடிவுக் கொண்டுவந்தன. அதன் பின்னர் நடைபெற்ற தேர்தலின் பின் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் பாலஸ்தீனிய பிரதிநிதிகளும் உள்ளடக்கப்பட்டனர். லெபனான் பாலஸ்தீனியமும் உள்ளடக்கப்பட்ட நாடாக சிரியா விளங்கியது. 1920 San Remo மாநாட்டின் பின்னர் சிரியா பிரெஞ்சு சட்டத்தின் கீழும், பாலஸ்தீனியம் பிரித்தானிய சட்டத்தின் கீழும் கொண்டுவரப்பட்டன. 1920ம் ஆண்டளவில் பிரென்ச் படைகளின் ஆதிக்கத்தால் Emir Feisal நாட்டை விட்டு வெளியேறினார். அதே ஆண்டு Greater Lebanon என்ற மாநிலம் அமைக்கப்பட்டது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# இன்றைய காந்தி



இன்று இந்தியாவில் தொலைக்காட்சி, பத்திரிகைகள், ஃபேஸ்புக், டுவிட்டர், வலைதளங்கள் என எங்கெங்கு காணினும் அதிகம் விவாதிக்கப்படும் பெயர், 'அன்னா ஹசாரே'தான். இந்தியாவின் இன்றைய நாயகராக பெரும்பான்மையானவர்களால் முன்னிறுத்தப்படுகிறார், ஹசாரே. தேசத்தின் ஊழல் கறையை அகற்ற வந்த உத்தமர் இவர் என்று முழக்கங்கள் கேட்கின்றன. ஐந்து மாநில தேர்தல் செய்திகளையும் பின்னுக்குத் தள்ளி, திடுமென இப்படியொருவர் எங்கிருந்து குதித்து வந்தார்? திடீரென்று ஒருநாள், ஊழலுக்கு எதிரான லோக்பால் மசோதாவை வலியுறுத்தி அன்னா ஹசாரே டெல்லியில் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கியது தான் தாமதம், மொத்த இந்தியாவும் அன்னா ஹசாரே பெயரை உச்சரிக்கக் தொடங்கிவிட்டது. அவர் எப்படி இது நடந்தது? யார் இந்த அன்னா ஹஸாரே?

அன்னா ஹசாரே, 1940ஆம் ஆண்டு ஜனவரி 15இல் மகராஷ்டிராவில் பிறந்தவர். ஐந்து ஏக்கர் நிலத்துக்குச் சொந்தமான குடும்பத்தில் பிறந்த ஹசாரே, கடுமையான நிதி நெருக்கடிச் சூழலால், ஏழாம் வகுப்பை பாதியிலேயே நிறுத்திக்கொண்டார். இந்திய ராணுவத்தில் வாகன ஓட்டுநராக தனது வாழ்க்கையைத் தொடங்கி, பிறகு ராணுவத்தில் இருந்து விருப்ப ஓய்வு பெற்றார். சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி மற்றும் ஆச்சரியா வினோபா பாவே ஆகியோரின் தாக்கத்தால் சமூகப் போராளியாக உருவெடுத்த ஹசாரே 1975இல் மகாராஷ்டிராவின் ராலேகாவ் சித்திக்கு வந்தார்.

இந்த ராலேகான் சித்திதான் முதன்முதலில் அன்னா ஹசாரே என்ற போராளியை வெளியுலகுக்கு அடையாளம் காட்டியது. பொருளியல் ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் பெரும் சரிவில் இருந்தது இந்தக் கிராமம். ராலேக்ஜான் சித்தி ஊருக்கு அன்னா வரும்போது, அந்த ஊரின் சமூக மையமாக இருந்த ஆலயத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டுக் கொண்டிருந்தது. ஊர் எப்படி இருந்தது என்பதற்கு இதைவிட சிறந்த ஆதாரம் தேவையில்லை. குடி தண்ணீர் முதல் மக்களின் அடிப்படைத் தேவைகள் மிக மோசமான நிலையில் இருந்தது. மெல்ல மெல்ல அந்தக் கிராமத்தை மீட்டெடுத்தார், அன்னா. முதலில், மது எதிர்ப்பு போராட்ட இயக்கத்தைத் தொடங்கி வழி நடத்தினார்.

அந்தக் கிராமத்தில் இருந்து மதுவை அறவே ஒழித்தார். பின்னர், கிராம மக்களை ஒன்று திரட்டி, 'ஷ்ரம்தன்' என்ற தன்னார்வ தொழிலாளர்கள் அமைப்பைத் தோற்றுவித்தார். ஏரிகளை வெட்டுவது, சிறு அணைகளைச் சரிசெய்வது, குளங்களைத் தூய்மைப்படுத்துவது என நீர் மேலாண்மைக்கு வழிவகுத்தார். இதன் மூலமாக, ராலேகான் சித்தியில் தண்ணீர் தட்டுப்பாடு ஒழிந்தது. தன்னார்வத் தொழிலாளர்களைக் கொண்டே கிராமத்தில் உயர் நிலைப்பள்ளி கட்டுவதற்கு கிராமவாசிகளைத் தூண்டி, அதிலும் வெற்றி கண்டார்.

அன்னா ஹஸாரே, ராலேகான் சித்திக்கு புதிய தொழில்நுட்பம் எதையும் கொண்டு வரவில்லை. அந்த நிலப்பகுதிகளில் பல காலமாக இருந்துவந்த முறைதான் அது. நூறு வருடம் முன்பு வெள்ளையர் ஆட்சி இந்திய பாசனத்தையும் பொதுநிலத்தையும் கையிலெடுத்தபோது, அந்தமுறை கைவிடப்பட்டு இந்தியாவெங்கும் அவர்கள் அமலாக்கிய ஒரேவகையான நீர்நிர்வாக முறை கொண்டுவரப்பட்டது. அது அந்தக் கிராமத்தை அரைப் பாலை நிலமாக ஆக்கியது. தேவையான அளவுக்கு மழை பெய்யக்கூடிய நிலம் அது. ஆனால், மழை ஒரே சமயம் கொட்டித் தீர்த்துவிடும். அந்த நீரைச் சேர்த்து வைக்க ஆழமில்லாத நூற்றுக்கணக்கான குட்டைகளை உருவாக்கி வைப்பது பழங்கால முறை. தமிழ்நாட்டில் திருப்பத்தூர், தருமபுரி, வேலூர், செங்கற்பட்டு பகுதிகளில் முன்னாள் இந்த முறை இருந்தது. இப்பொழுதும் இதன் எச்சசொச்சங்களை திருப்பத்தூர் பகுதிகளில் பார்க்கலாம். வெள்ளையர் ஆட்சியில் இந்தக் குட்டைகள் பராமரிப்பில்லாமல் விடப்பட்டன. அன்னா ஹஸாரே அக்குட்டைகளை மீட்டெடுத்தார். புதிதாக நிறைய குட்டைகளை உருவாக்கினார். சில வருடங்களில் நிலத்தடி நீர்மட்டம் பெருகியது. திட்டமிட்டு அளவோடு நிலத்தடி நீரைப் பயன்படுத்தி வேளாண்மை செய்ய கிராமத்தினருக்கு சொன்னார், ஹசாரே. கிராமத்தின் பசுமை மீண்டு வந்தது. விவசாயத்துடன் இணைத்தே பசு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றையும் செய்தார் அன்னா. மெல்ல மெல்ல அக்கிராமம் அதன் முக அடையாளமாக விளங்கிய வறுமையில் இருந்து மேலே வந்தது. அங்கே நிலவிய கடுமையான குடிப் பழக்கத்தையும் தீண்டாமையையும் ஊர்ப் பஞ்சாயத்துக்கள் மூலம் இல்லாமலாக்கினார். ராலேகான் சித்தி, ஒரு கிராமத்தில் என்ன சாத்தியம் என்பதற்கான உதாரணமாக இன்று சுட்டிக் காட்டப்படுகிறது.

அன்னா ஹசாரே செய்தது மிக எளிமையான விஷயம்தான். ஒரு கிராமத்தின் பிரச்சினைகள் அந்தக் கிராமத்திற்கே உரியவை. அவற்றுக்கான தீர்வுகளையும் அந்தக் கிராம இயல்பிலேயே உருவாக்கிக் கொள்ளமுடியும். அந்தந்தக் கிராமங்களில் அதற்கான முடிவெடுக்கும் அமைப்பும் செயல்படுத்தும் வசதியும் இருந்தால் மட்டுமே அப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அவர் கிராமப் பஞ்சாயத்தை உயிர்ப்பிப்பதன் மூலம் அதைச் செய்தார். அதன்மூலம் அந்த மக்கள் மறந்துவிட்டிருந்த ஒரு முறையை திருப்பிக் கொண்டுவந்தார். இந்திய அரசு அதிகார அமைப்பின் ஊழல், பொறுப்பின்மை, தாமதம் அனைத்துடனும் போராடியே அன்னா ஹஸாரே தன் சாதனையைச் செய்ய வேண்டியிருந்தது. இந்த அரும்பணிக்கு, 1992இல் பதமபூஷன் விருதை வழங்கி கௌரவித்தது இந்திய அரசு.

தொடர்ச்சி 28ஆம் பக்கம்




இந்த ஆண்டின் நிதிநிலைக் குறித்து பேசுவதற்கு நிறைய உள்ளது.

உங்களின் வரிப் பணங்கள் எங்கே செல்கின்றன என்பதை அறிந்துகொள்ள இணையத்திற்கு செல்லவும் அல்லது அழைக்கவும்.

ஒண்டாரியோ நிதிநிலை 2011

ontario.ca/budget • 1-800-337-7222 • காதுகேளாதோருக்கான தொலைத்தட்டச்சு(டிடிஒய்): 1-800-263-7776

ஒண்டாரியோ அரசாங்கத்தால் பணம் செலுத்தப்படுவது

Ontario

# இறுக்கப்படும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

இறுக்கமான நிலையை உருவாக்கலாம். ஏற்கெனவே 35 வருட அடமானம் திருப்பிக் கொடுக்கும் காலம் 30 வருடங்களாக குறைக்கப்பட்டதுடன், அடமானம் பெறுவதில் இறுக்கம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் இன்றைய காலகட்டத்தில் அடமானக்கடன் பெறுவதில், அனேகமான நிதி நிறுவனங்கள் மிகவும் இறுக்கமான நிலைப்பாட்டை எடுத்துள்ளன. அண்மையில் நிதிநிறுவனம் ஏற்றுக்கொண்ட அடமானக்கடனை CMHC (Canada Mortgage and Housing Corporation) நிராகரித்துள்ளது. மேலும் பல சந்தர்ப்பங்களில் Completion Date இற்கு முதல்நாளில் கூட பல அடமானக்கடன்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதனால் ஆதனம் வாங்குபவர்களும் விற்பவர்களும் பல நெருக்கடிக்குள்ளான சந்தர்ப்பங்கள் உண்டு.

ஆதனம் வாங்குபவர்கள் அடமானக்கடனைப் பற்றி போதிய தகவல்களை தமது வீட்டுப்பிரதிநிதி மற்றும் அடமானக்கடன் பிரதிநிதியிடம் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியம். போதியளவு கவனம் எடுக்காத நிலையில் பலர் எதிர்பாராத பல சிக்கல்களிற்கூடாக செல்வதனை கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆதனம் விற்பவர்/வாங்குபவர் இருவருக்கும் மிகவும் நெருக்கடியான நிலை தோன்றுகின்றது. அதனால் பணச்செலவுகளும் ஏற்படுகின்றது.

# கணேஷ்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்தக்கூற்றை இந்தக் கனவை தற்பொழுது உலலெங்கும் வாழும் கடின உழைப்பும், விடாமுயற்சியும் உடைய தமிழின இளைஞர்களும், யுவதிகளும் தத்ரூபமான உண்மையென நிரூபித்துக்கொண்டு இருக்கிறார்கள். விளையாட்டுத்துறையில் இந்த வளர்ச்சி நிச்சயமாக நற்பெயரையும் ஒரு சிறந்த எதிர்காலத்தையும் உருவாக்கப்போகின்றது. அது மட்டுமல்லாமல் கனேடிய மண்ணில் விளையாட்டுத் துறையில் பங்குபெறும் வீரர்கள், வீரங்கனைகள் புலமைப்பரிசுகள் பலவற்றைப்பெற்று தமது வளமான கல்வியை வளர்த்து ஒரு சிறந்த நிலையை எட்டுவதற்கும் உத்வேகமாக இருக்கப்போகின்றது.

**கேள்வி:** நன்றி கணேஷ், இவ்வளவு நேரமும் என்னுடன் உங்கள் நேரத்தை செலவு செய்ததற்கு நன்றி, இறுதியாக உங்கள் அபிமான பத்திரிகை விளம்பரத்தின் வாசகர்களுக்கு உங்கள் செய்தி என்ன?

**பதில்:** தயவுசெய்து பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைச் செல்வங்களின் விளையாட்டுத்திறமைளை விளம்பரம் பத்திரிகைக்கு தெரியப்படுத்தினால் நிச்சயமாக அவர்களுடைய திறமைகளை வெளி உலகிற்கு எடுத்தியம்புவதற்கு எங்கள் பேனாக்கள் உந்துகோலாக இருக்கும்.

நன்றி,
வணக்கம்

# சீரிய சிரியா

10ஆம் பக்கத்தொடர்ச்சி

1925-1946 – 1925 காலகட்டத்தில் பிரெஞ்ச் அரசுக்கு எதிரான சுதந்திரப் போராட்டங்கள் ஆரம்பமாகிவிட்டன. இரண்டாம் உலகப் போரின் போது 1940ல் பிரான்ஸ் ஜேர்மனிடம் வீழ்ச்சியடைந்தது. இக்காலத்தில் இடைக்கால ஜேர்மனிய அரசிடம் சிரியா மாறியது. ஆனால் அது நீண்ட காலம் நீடிக்கவில்லை. மீண்டும் பிரித்தானிய படைகளும் பிரெஞ்ச் படைகளும் சிரியாவை கைப்பற்றின. 1945ல் பிரெஞ்ச் படைகள் மிகவும் குறைந்த வேகத்தில் வெளியேறுவதற்கு எதிராக போராட்டங்கள் தோன்றின. இறுதியாக 1946ல் பிரெஞ்ச் படைகள் முற்றாக வெளியேறின.

1947-1963 – 1947ல் Arab Socialist Baath Party ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் என்ன பயன்? Adib al-Shishakhli என்ற இராணுவ அதிகாரி ஆட்சியை கைப்பற்றினார். இதன் பின்னர் பல நாடுகளில் நடைபெற்றது போல் சகல அரசியல் கட்சிகளும் களைக்கப்பட்டன. 1955ல் நடைபெற்ற தேர்தலில் Shukri al-Quwatli அதிபரானார். 1958ல் சிரியாவும் எகிப்தும் இணைந்து புதிய பிரதேசமாக United Arab Republic உருவானது. இதன் அதிபராக எகிப்திய ஜனாதிபதி நாசர் இருந்தார். இவ் இணைப்புக்கு போராடி உழைத்த சிரிய பாத் கட்சி உட்பட்ட அனைத்து சிரிய கட்சிகளும் நாசரால் கலைக்கப்பட்டன. 1961ல் சிரிய இராணுவ வீரர்களால் டமாஸ்கஸ் கைப்பற்றப்பட்டு எகிப்திய-சிரிய இணைப்பு துண்டிக்கப்பட்டது. 1963லும் 1966லும் இரு தடவைகள் இராணுவ அதிகாரிகள் சிரியாவை கைப்பற்றினர்.

1967 -1999 1967ல் இஸ்ரேல் நடத்திய ஆறு நாள் யுத்தத்தில் சிரிய இராணுவத் தளம் முற்றாக அழிக்கப்பட்டது. இவ் யுத்தம் சிரியா, ஜோர்டான், எகிப்துக்கு எதிராக இஸ்ரேலால் நடத்தப்பட்டது. இதன் போது சிரியாவின் முக்கிய பிரதேசமான Golan Heights இஸ்ரேலால் கைப்பற்றப்பட்டது 1970 ல் மீண்டும் இராணுவ ஆட்சி. 1971 பங்குனியில் நடைபெற்ற தேர்தலில் அசாட் அதிபரானார். இவர் அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டு வந்த திருத்தம் அசாட்டுக்கு எதிராக போராட்டங்கள் தொடங்கின. அவரது புதிய திருத்தம் முஸ்லீம் அல்லாதவரும் சிரிய ஜனாதிபதியாக வரலாம் என்பதே. இதனால் ஏற்பட்ட கலவரங்களை இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. 1973ல் சிரியாவும் எகிப்தும் இணைந்து நடத்திய Golan Heights மீண்டும் கைப்பற்றுவதற்கான போர் தோல்வியில் முடிவுற்றது. இதன் பின்னர் எகிப்து - இஸ்ரேல் உறவில் ஏற்பட்ட மென்போக்கு சிரியாவையும் தொற்றிக் கொண்டது. இதன் விளைவாக 1980ல் சிரிய அதிபர் அசாட்டை கொல்லுவதற்கு ஏற்பட்ட முயற்சி தோல்வியில் முடிந்தது. 1982ல் இஸ்ரேல் லெபானின் மீது தாக்குதல் நடத்திய போது சிரிய இராணுவத்தையும் தாக்கியது. 1987ல் பெய்ரூட்டில் அமைதியை ஏற்படுத்த அசாட் சிரிய படைகளை இரண்டாம் தடவையாக லெபனானுக்கு அனுப்பினார். அமெரிக்க ஈராக் ஆக்கிரமிப்பின் போது சிரிய அமெரிக்காவை ஆதரித்தது. ஈரான்-ஈராக் போரிலும் சிரியா ஈரானையே ஆதரித்தது.

2000-2005 2000 ஆனி மாதம் கார் விபத்தொன்றில் இறந்த சிரிய அதிபர் அசாட்டின் இடத்துக்கு ஜனாதிபதியாக அவரது மகன் Bashar Al-Assad தெரிவுசெய்யப்பட்டார். 2002 மே மாதம் அமெரிக்காவின் axis of evil பட்டியலில் சிரியாவும் உள்ளடக்கப்பட்டது 2003ம் ஆண்டு அமெரிக்கா சிரியாவை தான் எடுக்கும் (right decisions) முடிவுகளுக்கு கட்டுப்படவேண்டும் என மிரட்டியது. இதே ஆண்டு சிரியாவின் டமாஸ்கசில் உள்ள பாலஸ்தீனிய முகாம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதற்கு அடுத்த ஆண்டு சிரியாவில் இருந்து ஈராக்குள் போராளிகள் செல்வதை சிரியா தடைசெய்யவில்லை எனக் கூறி அமெரிக்கா சிரியா மீது பொருளாதார தடைகளை விதித்தது. 2005ம் ஆண்டு மேற்கால் கொடுக்கப்பட்ட தொடர்ச்சியான அழுத்தத்தின் விளைவாக சிரியா தனது படைகளை லெபானில் இருந்து விலகத்திக் கொண்டது. இதன் பின்னர் சிரிய ஜனாதிபதி ஈராக்குடனும் மேற்குடனும் நல்லுறவுகளை மேற்கொள்ள முயற்சித்தாலும் அவரால் முடியவில்லை. இதற்கான பிரதான காரணங்கள் இரண்டு. ஒன்று சிரியா இஸ்ரேலுக்கு அருகில் உள்ளது. இரண்டாவது சிரியாவில் பாலஸ்தீனியர் குறிப்பாக ஹிஸ்புல்லா ஆதரவுப் படைகள் உள்ளனர். இவ் விரண்டும் அவ்வப்போதும் தொடர்ச்சியாகவும் மிரட்டல்களையும் தாக்குதல்களையும் சிரியா பெற்றுக்கொள்ள காரணமாக அமைந்தன.




இதைத் தவிர முஸ்லீம் தீவிரவாதிகள் உள்ளனர். லெபனாவின் முன்னாள் ஜனாதிபதி ஆட்சியில் இருந்தபோது இவரைக் கொன்றதற்கு முக்கிய காரணம் சிரியா என அமெரிக்க நம்புகின்றது. அமெரிக்கா தொடர்ந்து சிரியாவை மிரட்டி வருகின்றது. கடந்த வருடம் அமெரிக்க பத்திரிகை ஒன்று ஈரான் சிரியாவிற்கு ஆயுத உதவி செய்துள்ளது. இது இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதலை ஏற்படுத்தினால் தடை-செய்ய உதவி புரியும் என குற்றஞ்சாட்டியது. கடந்த 32 வருடங்களாக தந்தையும் தனயனும் ஆட்சிப் பீடத்தில் உள்ளார்கள். எகிப்தைப் போன்று இங்கும் இராணுவமும் அரசும் மிக நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது. அண்மைக் காலங்களில் சிரியாவில் நடைபெறும் போராட்டங்களுக்கு எதிராக இராணுவம் தாக்குதல்களை மேற்கொள்கின்றது. அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு தொடர்ந்துள்ள இப்போராட்டங்களின் பின்னணியில் இஸ்ரேல் உள்ளது என சிரியா குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால் அமெரிக்கா உள்ளது என்பது உண்மையே. சிரியா தடுமாற்றமான நிலை அமெரிக்காவிற்கு கோபத்தை வரவழைத்துள்ளது. ஒரு புறம் முஸ்லீம் தீவிரவாதிகளின் ஆதரவு தேவை. மறுபுரம் மேற்கை பகைக்க கூடாது. இந்த இரண்டும் கெட்டான் நிலை அவதானத்துடன் இஸ்ரேல் அவதானிக்கின்றது. கடந்த காலங்களில் சிரியாவால் இஸ்ரேலுக்கு ஏற்பட்ட தலையிடியை தீர்க்க சந்தர்ப்பம் பார்த்து நிற்கின்றது. ஏற்கெனவே சிரியாவிடமிருந்து கைப்பற்றப்பட்ட Golan Heights இன்னமும் இஸ்ரேல் வசமே உள்ளது.

கிளர்ச்சியாளர்கள் எகிப்தைப் போல் நவீன தொழில்நுட்பத்தை பாவிக்கின்றனர். இது ஒவ்வொரு நாளும் தொடர் போராட்டங்களை ஒழுங்கு செய்பவர்களிடையே தொடர்புடகமாகவும் பிரச்சாரத்துக்கும் உதவுகின்றது. எகிப்தில் போராட்டத்தை தொடங்கிய ஏப்ரல் 18 குழுவும் இப் போராட்டங்களுக்கு உதவிபுரிகின்றது. எகிப்தைப் போல் அல்லாமல் "சுதந்திரம் தேவை", "ஊழல் அற்ற ஆட்சி" போன்ற சுலோகங்களுடன் வீதிக்கு வரும் இவர்கள் அதிபரை வெளியேற்றுவது தங்களது நோக்கமல்ல என்று கூறுகின்றார்கள். அதிபர் வெளியேறாமல் ஊழல் அற்ற ஆட்சி சாத்தியமற்றது. கிளர்ச்சியாளர்களின் நோக்கத்தை அதிபரும் அறிந்துள்ளார். Wall Street பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் ***"Reform in politics is important but it is not as important and urgent as the people waking every day and they want to eat, to have good health, to send their children to good schools. That is what they want"*** அதிபர் கிளர்ச்சியாளர்களின் விருப்பத்தை நிறைவேற்றினாலும் அவர் மேற்கின் சொல்லுக்கு கட்டுப்பட்டு முஸ்லீம் தீவிரவாதிகளை கட்டுப்படுத்தும் வரை அவரது கதிரைக்கு ஆபத்து காத்து நிற்கின்றது. சின்ன தடுமாற்றமும் கொத்திச் செல்ல காத்து நிற்கும் பருந்து போன்று இஸ்ரேல் காத்து நிற்கின்றது. இந்த இடியப்பச் சிக்கலை எவ்வாறு அதிபர் தீர்க்கப்போகின்றார். இதுவே இன்று உலகம் கேட்கும் கேள்வி.

# தேவை ஒரு சுய பார்வை

அன்பார்ந்த வாசகர்களுக்கு: ஒரு பெண்ணின் வாழ்க்கை மகள் என்பதிலிருந்து ஆரம்பித்து மருமகள், மனைவி, தாய், மாமி, அம்மம்மா அல்லது அப்பம்மா எனப் பல பாத்திரங்களாக அமைவதுடன் ஒவ்வொரு பாத்திரமும் வெவ்வேறு வாழ்வியல் நிலைகளில், படிமுறைகளில், உள்ளும் புறமுமாகச் சேகரித்துக்கொண்ட அனுபவங்களின் பிரதிபலிப்பாக அமைகின்றது. இங்கு மாமி என்ற பாத்திரம் மட்டுமே எனது கவனத்துக்கு எடுக்கப்படுவதால், கூறப்படும் கருத்துக்கள் ஒட்டுமொத்தமாக ஒரு பெண்ணின் முழுமையான மனோபாவ வெளிப்பாடாகக் கருதப்படாமல் மாமி என்ற பாத்திரத்தின் அடிப்படையில் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இக்கட்டுரை பல பகுதிகளாக வெளிவர இருப்பதனால் எந்த ஒரு பகுதியையும் தவற விடாதீர்கள். அது மட்டுமன்றி இக்கட்டுரையின் இறுதிப் பகுதி இக்கட்டுரை பற்றிய உங்களது கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க இருப்பதால் உங்கள் வினாக்களை அல்லது ஏற்கனவே இக்கட்டுரையில் கூறப்பட்ட விடயம் பற்றிய உங்கள் சுய பார்வையை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதி உங்கள் பெயரைக் குறிப்பிடலாமா இல்லையா என்பதையும் குறிப்பிட்டு kgmaster54@hotmail.com எனும் மின் அஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

**KG Master-kgmaster@rogers.com**

## ஓடும் நீர் உறைவதில்லை 22
## இரண்டாம் பாகம்

"மாமி ஆமியா" என்ற ஆய்வில் கடந்த நான்கு பகுதிகளிலும் ஒரு பெண்ணின் பல்வேறு பாத்திரங்களும் அந்தப் பாத்திரங்களுக்கு ஏற்ப ஏற்படும் மனோபாவ மாற்றங்களும் பற்றி அறிந்துகொண்டோம். இப்போது மாமி என்னும் பாத்திரம் எதிர்மறையான பார்வைக்கு உட்படுத்தப்படுவதற்கான காரணிகள் பலவாக இருந்தாலும் மிகவும் சுருக்கமாகக் கூறுவதாயின் தாயின் எதிர்மாறான (Opposite) வடிவமே மாமி என்பதாகும். ஏனெனில் நமது மனம் ஒன்றைச் செயற்பட வைப்பதற்கு ஒரு நபரை அல்லது ஒரு சூழலை வேண்டி நிற்கின்றது. இதற்கேற்ப ஒரு தாயின் மனம் அதன் எதிர்மறைத் தன்மையை வெளிப்படுத்துவதற்குச் சாதகமாக அமையக் கூடிய ஒரே வாய்ப்பு தன் குழந்தை அல்லாத ஆனால் குழந்தையுடன் தொடர்புள்ள இன்னொரு நபராக அமைந்தாக வேண்டியுள்ளது. இந்த விடயத்தை மிகவும் உன்னிப்பாக அவதானிப்பதாயின் ஒரு தாய்க்கும் மகளுக்கும் இடையிலுள்ள உறவையும் மாமி மருமகளுக்கு இடையிலுள்ள உறவையும் ஒப்பீடு செய்தல் அவசியமாகின்றது. இங்கே இன்னுமொரு விடயத்தை நாம் அவதானித்தல் வேண்டும். தாயின் எதிர்மாறான (Opposite) வடிவம் மாமி என்பது போல் ஒரு மகளின் எதிர்மாறான வடிவம் மருமகளாகும் என்பது தான். இந்த எதிர்மாறான வடிவம் தந்தை-மகன், மாமா-மருமகன் என்பனவற்றிக்கும் பொருத்தமானது.



இந்த எதிர்மாறான வடிவத்தின் வெளிப்பாடாக அமைவது ஒருவரது ஆதிக்கத்தன்மையே. எப்பொழுது இருவர் ஒருவருக்கு ஒருவர் மற்றவர் மீது தனது ஆதிக்கத்தன்மையை பயன்படுத்துகிறாரோ அப்பொழுது இந்த எதிர்மாறான வடிவத்தை மிகவும் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். ஆதிக்கம் செலுத்துதலின் அடிப்படையாக அமைவது ஆதிக்கம் செலுத்துபவருக்குப் பாதுகாப்பின்மை என்ற அதி உச்சமான பயம் தான். அதாவது எப்பொழுது ஒருவருக்குப் பாதுகாப்பில்லை என்ற அச்சம் உச்சமடைகின்றதோ அப்பொழுது அவர் மற்றவர்களை அச்சுறுத்துவதாலோ அல்லது அதிகாரத்தைச் செலுத்துவதாலோ மற்றவர்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயல்வார். தாய் மகள் என்ற உறவு முறைக்குள் இந்த அச்சுறுத்தலோ அல்லது அதிகாரப் போட்டியோ இடம் பெறுவதில்லை. ஏனெனில் இவர்களுக்கிடையில் பாதுகாப்பின்மை அல்லது பயம் என்பது இருப்பதில்லை. அதனால் அதிகாரப் போட்டியோ அல்லது ஆதிக்கப் போட்டியோ அவசியமற்றதாகி விடுகின்றது. மாறாக மாமி மருமகள் என்ற உறவுக்குள் இருவருக்குமே இந்தப் பாதுகாப்பின்மை பற்றிய அச்சம் உச்ச நிலையில் காணப்படும். ஒருவேளை தன் மகன் அவரது மனைவியின் சொல்லைக் கேட்டுத் தன்னைப் புறந்தள்ளி (உளவியல் ரீதியாகப் புறந்தள்ளல்) விடுவாரோ என்ற அச்சம் தாய்க்கும், ஒருவேளை தன் கணவர் தனது தாயின் சொல்லைக் கேட்டுத் தன்னைப் புறந்தள்ளி (உளவியல் ரீதியாகப் புறந்தள்ளல்) விடுவாரோ என்ற அச்சம் மருமகளுக்கும் ஏற்படுவதால் இவர்கள் இருவருக்குமான அதிகாரப் போட்டியும் ஆதிக்கப் போட்டியும் தொடர்கதையாக அமைந்துவிடுகின்றது. இந்த ஆதிக்கப் போட்டியும் அதிகாரப் போட்டியும் ஒப்பீட்டளவில் மாமா - மருமகனை விட மாமி - மருமகளுக்கிடையில் அதிகமாக இருப்பது நாம் எல்லோரும் அறிந்ததே. இதற்கான காரணம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள அச்ச மனப்பான்மையே.

அடுத்ததாக இது ஒரு தொடர்கதையாக அமைந்து விடுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளேன். ஏனெனில் பல சந்தர்ப்பங்களில் மாமியார் தன்னைக் கொடுமைப்படுத்துவதாகக் குறை கூறிய மருமகள்கள் பலர் காலப்போக்கில் அவர்களது மருமகள்களால் அதே குற்றச்சாட்டுக்கு ஆளாவது சாதாரண விடயமாக அமைந்துவிடுவதை நாம் அனுபவரீதியாகக் காண்கிறோம். "நிச்சயமாக என்னுடைய மருமகளுடன் இப்படி நடக்க மாட்டேன் எனக் கூறியவர்களும், எனது மருமகளை எனது மகளை விட நன்றாகப் பார்ப்பேன்" எனக் கூறியவர்களும் காலப்போக்கில் அவற்றைக் காற்றோடு பறக்கவிட்ட சம்பவங்கள் பல கோடி. இதைவிட மிகவும் வேடிக்கையான விடயம் என்னவெனில் தாமாகத் தெரிவு செய்து தனது மகனுக்குத் திருமணம் செய்து கொடுத்த மருமகளையே தாறுமாறாகக் குறைகூறுவது தான். இப்போது எமக்குள் எழும் ஒரே ஒரு வினா இந்தத் தொடர் கதைக்கு முடிவுவைக்க ஏதேனும் வழியுண்டா என்பதே.

ஆம் வாசகர்களே: வழியுண்டு. இரண்டு குடும்பங்களால்தான் புதியதொரு கும்பம் உருவாகின்றது என்ற உணர்வு பூர்வமான உண்மையை நாம் புரிந்துகொள்ளல் வேண்டும். புதிய குடும்பம் ஒன்றிற்கு நாம் பங்களிப்பவராக மட்டும் இருக்க வேண்டுமேயன்றி அந்தக் குடும்பத்தின் சமூக, பொருளாதார, ஆன்மீக விடயங்களில் பங்காளிகளாக இருக்கக் கூடாது. புதிதாக உருவான குடும்பத்தின் எந்தவொரு விடயத்திலும் அந்தக் குடும்ப அங்கத்தவர்களான கணவன் மனைவி இருவரதும் முழுமையான அனுமதியின்றி நமது தலையை நுழைக்கக் கூடாது. ஒவ்வொரு குடும்பமும் தனித்துவமானது. ஒப்பீட்டிற்கு அப்பாற்பட்டது. ஒவ்வொரு குடும்பமும் அதற்கே உரித்தான பாதை ஒன்றைக் கொண்டிருக்கும். பயணம் செய்யவேண்டியவர்கள் அவர்கள் மட்டுமே. அந்தப் பாதைக்குத் தடையாக நிற்பவர்கள் அனைவரும் அந்தப் பாதையிலிருந்து விரட்டப்படுவது அல்லது விலக்கப்படுவது தவிர்க்க முடியாத இயல்பு நிலையாகும். நமது குடும்பத்தை அதற்கே உரித்தான பாதையில் நாம் நகர்த்திக்கொண்டு செல்லும்போது நாம் முகம் கொடுத்த எத்தனை தடைகளை விரட்டியடித்துள்ளோம் அல்லது விலக்கி வைத்துள்ளோம். எனவே நாம் விரட்டியடிப்பவர்களாகவும், விலக்கி வைப்பவர்களாகவும் இருக்க வேண்டுமேயன்றி, விரட்டப்படுபவர்களாகவும், விலக்கப்படுபவர்களாகவும் இருக்கக் கூடாது. இதற்குத் தேவை புரிந்துணர்வுடன் கூடிய ஒரு சுய பார்வை மட்டுமே. இந்தச் சுய பார்வையை மீண்டும் வலியுறுத்தி "மாமி ஆமியா" எனும் தொடர் நிறைவுக்கு வருகின்றது.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# சட்டவிரோத வாகன தரிப்புகளுக்கு எதிராக ரொறொன்ரோ நகர சபையின் புதிய தீர்மானங்கள்

***EXCEPTIONS OF ILLEGAL PARKING FINES - TORONTO***

## கனடிய தகவல் தொடர் 147

ரொறொன்ரோ நகரசபை உறுப்பினர் திரு. ஹெவார்ட் மொஷ்கோ (Mr. Howard Moscoe) அவர்கள் சட்டவிரோத வாகன தரிப்புகளுக்கு எதிராக ரொறொன்ரோ நகரில் அறவிடும் தண்டனை ரிக்கற்றுகளின் சில விதிவிலக்குகள் தொடர்பாக நகரசபை கூட்டத்தில் எழுப்பிய கேள்வி சிறுபரபரப்பான செய்தியாக 'ரொறொன்ரோ சன்' (Toronto Sun) என்னும் ஆங்கில பத்திரிகையில் ஒரு செய்தியாக வெளிவந்திருந்தது.

(1) 'சில குறிப்பிட்ட மக்கள்! சில குறிப்பிட்ட சேவையில் உள்ள வாகனங்கள் மற்றும்
(2) சில குறிப்பிட்ட வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்கள் ஆகியவற்றுக்கு சட்டவிரோத முறையில் வாகனம் தரித்தார்கள் என்ற குற்றசாட்டில் வைக்கப்படும் தண்டனை ரிக்கற்றுகளுக்கு பணம் செலுத்த தேவையே இல்லை என்ற சுமார் 25 பக்கங்கள் கொண்ட ரொறொன்ரோ நகர சபையினால் உருவாக்கப்பட்ட சட்ட புத்தகத்தினை (Confidential Booklet of Parking Ticket Exemptions) எதற்காக மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படவில்லை' இதுவே அவர் எழுப்பிய பரபரப்பான கேள்வி ஆகும்.

சட்டவிரோத வாகன தரிப்புகளுக்கு எதிராக ரொறொன்ரோ நகரில் சராசரியாக 2.8 மில்லியன் ரிக்கற்றுகள் வருடம் ஒன்றுக்கு சராசரியாக வழங்கப்படுகின்றது எனவும் இதில் 82% வீதமானவை அறவிடப்படுகின்றது எனவும் நகரின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. மிகுதி சொற்ப பேர் மட்டும் ஏதோ வழியில் தப்பிக்கொள்கின்றனர்.

அதாவது இத்தண்டனை ரிக்கற்றுக்களினால் நகரசபைக்கு வந்து குவியும் வருமானத்தினை இழக்க கூடாது என்ற நோக்கிலேயே இது பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பதனை இங்கு ஆங்கில ஊடகங்கள் சுட்டிகாட்டியிருந்தது.

பிரச்சினை கிளப்பட்டதாலேயோ என்னவோ இறுதியாக 'வாகன தரிப்பு தண்டனை ரிக்கற்றுகளின் விதி விலக்குடன்' (Parking Ticket Exemption) என்ற நகரசபையின் சட்டபுத்தகத்தின் விபரங்கள் நகரசபையின் உத்தியோக இணையதளத்தில் வெளியிடப்பட்டது. தொடர்ந்து கடந்த யூன்.08.2010 இல் இவ்விதிவிலக்குகள் தொடர்பான முக்கிய குறிப்புகளை 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து யூன்.09.2010 இல் CBC செய்தி பிரிவிலும் வெளியிட்டிருந்தனர்.

அதாவது சில வகையான வாகன தரிப்பு தண்டனை ரிக்கற்றுகளை பெற்றவர்கள் அந்த தண்டனை ரிக்கற்றுக்களுக்கு பணம் செலுத்தாது அதனை நகரசபையின் குறிப்பிட்ட நிர்வாக பிரிவுக்கு அறிவித்து தண்டனை ரிக்கற்றினை ரத்து செய்துகொள்ளலாம் என்பதே இங்கு வெளியிடப்படாது காலதாமதமாக பகிரங்கத்திற்கு வந்த விடயமாகும்.

இவ்விதி விலக்குகள் பின்வருமாறு!

**ரத்து செய்யப்படும் வாகன தரிப்பு ரிக்கற்றுக்கள்**
(Parking Ticket Exceptions)



உடல் அங்கவீனமாகவிருந்த வலிமையாக நடக்க முடியாதவர்களுக்கு விசேட அடையாள அட்டையுடன் சேர்ந்த வாகன தரிப்பு பத்திரத்திற்கு விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம். இப்பத்திரம் வைத்திருக்கும் வாகன உரிமையாளர் இன்னொரு இடத்தில் எதிர்பாராத விதமாக ரிக்கற் வாங்கினால் நகரசபை வாகன தரிப்பு அமலாக்கல் பிரிவுக்கு அறிவித்து வழங்கிய ரிக்கற்றினை ரத்து செய்யலாம்.

2. சுமார் 100 கி.மீற்றருக்கு அப்பால் இருந்து ரொறொன்ரோ நகருக்கு வருகை தந்த ஒருவரின் வாகனத்திற்கு சில நேரங்களில் தண்டனை ரிக்கற் வழங்கியிருந்தால், அத்தகைய நிலையில் உள்ளவர்களும் இதனை அறிவித்து ரத்து செய்யலாம்.

3. ஏதாவது சமய நிகழ்வுகளுக்கு சென்றவர்கள், சென்ற இடத்தில் சட்டவிரோதமாக வாகனம் தரித்தார் என்ற குற்றசாட்டில் ரிக்கற் வாங்கியிருந்தால் அச்சமய நிகழ்வின் மதபோதகரிடமிருந்தோ அல்லது சமய நிகழ்வினை நடத்திய நிறுவனத்திலிருந்தோ அத்தாட்சிப்படுத்தும் கடிதம் பெற்றுக் கொடுத்து இவ் ரிக்கற்றினை ரத்து செய்யலாம்.

4. முதியவர், அல்லது உடல்நிலை பாதிக்கப்பட்டவர் ஒருவர் சிகிச்சைக்கு சென்றபோது வாகனம் தரித்து ரிக்கற் வாங்கியிருந்தாலும் நிலைமையினை நிரூபித்து ரிக்கற்றினை ரத்து செய்யலாம்.

5. சாப்பாடு, உணவுகளை விநியோகிக்கும் தொழில் செய்பவர் தொழில் நேரம் ரிக்கற் வாங்கியிருந்தாலும் அதனையும் ரத்து செய்யலாம். ஆனால் வாகனத்தில் அந்த நேரம் 'உணவு விநியோகிப்பவர்' என்ற சைகை மாட்டியிருக்க வேண்டும். (உதாரணம்: பீசா உணவு விநியோகம்) வேலை செய்யும் கம்பனியிலிருந்து தொழில் செய்து கொண்டிருக்கும் நேரம் வழங்கிய ரிக்கற் என குறிப்பிட்டு அத்தாட்சி கடிதம் எடுத்து சமர்பித்தால் ரிக்கற்றினை ரத்து செய்வார்கள்.

இங்கு உணவு விநியோகம் தவிர ஏனைய நேரத்தில் வேலை செய்யும் இடத்தில் தப்பாக வாகனம் நிறுத்தியமைக்காக ரிக்கற் வழங்கினால் அதனை நகரசபை நிர்வாகம் ரத்து செய்யமாட்டார்கள்.

6. தொழில் நேரம் இயங்கிக்கொண்டிருக்கும் ராக்ஸி வண்டிகள் (Taxi Cabs), உல்லாச பிரயாண பேருந்துகள் (Tour Buses) போன்ற வாகனங்களுக்கு வழங்கும் தண்டனை ரிக்கற்றுகளையும் நகரசபையின் நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து ரத்து செய்யலாம்.

இதேபோல மருத்துவ நிறுவன வாகனங்கள் (Nursing Agency Vehicles) போன்றவற்றிற்கு தொழில் நேரம் வழங்கும் ரிக்கற்றுகளையும் அறிவித்து ரத்து செய்யலாம்.

7. ஒருவர் ஒரு நாளில் மூன்று மணித்தியாலத்தினுள் துர் அதிஸ்டவசமாக ஒன்றுக்கு மேற்பட்ட ரிக்கற்றுகளை பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் அந்த நிலையில் மேலதிமாக பெற்ற ரிக்கற்றுகளை மனிதாபமான அடிப்படையில் ரத்து செய்யலாம்.

வாகன தரிப்பு ரிக்கற்றுகளில் எழும் பிரச்சினைகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நகரசபை அலுவலக முகவரி இதுவே ஆகும்.

The Parking Tag Operations
Station 1210
21 Floor, Metro Hall
55, John Street
Toronto, ON M5V 3C6

Phong: 416.397.8247
Fax: 416.392.4436

அல்லது
Toronto Police Parking Enforcement
Customer Service Section
Phone: 416.808.6500

**சட்டவிரோத வாகன தரிப்பு ரிக்கற்றுகளை கனடாவில் அமல்படுத்துபவர்கள்**
(ORGANIZATION OF PARKING ENFORCEMENT IN CANADA)

கனடாவின் சமஷ்டி அரசியல் கட்டமைப்பில் மூன்று வகையான அரச ஆதிக்கத்தினுள் நாம் வசித்து வருகின்றோம் என்பது யாவரும் அறிந்த விடயம் ஆகும். அவையாவன பின்வருமாறு!


1. கனடிய மத்திய அரசு (Federal Government of Canada)

2. பிராந்திய அரசு போல இயங்கும் கனடாவின் பதின் மூன்று மாகாண அரசுகள்! உதாரணம் ஒன்ராரியோ கியூபெக் மாகாண அரசு. (Provincial Government of Canada)

3. சிற்றரசுபோல கனடாவினுள் இயங்கும் ஏராளமான நகரசபை அரசுகள். உதாரணம்! ரொறொன்ரோ, மார்க்கம், மிசுசாகா (Municipality Government of Canada)

இங்கு மூன்றாவதாக குறிப்பிடப்பட்ட சிற்றரசு போல இயங்கி வரும் நகரசபை அரசுகளே தங்களின் அந்தந்த நகரசபைகளின் வாகன தரிப்புகள் தொடர்பான சட்டங்களை உருவாக்கி, அதனை அமல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு நகரசபை அரசுகளிலும் சட்டவிரோத வாகன தரிப்புகளின் தண்டனை ரிக்கற்றுகளின் ஒழுங்கு விதிகள் என்பது ஒரேமாதிரியிருந்தாலும் அதன் அமல்படுத்துவதில் நகரசபைக்கு, நகரசபை வித்தியாசமும் உண்டு.

உதாரணமாக ரொறொன்ரோ நகரசபை எல்லையினுள் பின்வரும் மூன்றுவகையான

சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# நினைவாற்றல் – MEMORY - 8

அன்பான வாசகர்களே!

நாம் வாழ்நாள் பூராவும் கால், கை போன்ற உறுப்புக்களைப் பாவித்துக் கொள்வதைப் போல எமது நினைவாற்றலையும் பாவித்துக் கொள்கின்றோம். எமது நினைவாற்றல் வலு மிகவும் பெறுமதியானது. எமது நினைவாற்றல் வலுவைப் பேணிப் பாது காப்பது மிகவும் முக்கியமானது. இதற்கான வழிமுறைகளை நன்கு புரிந்து அறிந்து வைத்திருப்பது எமக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்ற எண்ணத்துடன் தொடர்ந்து ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். இந்தக் கட்டுரையைப் பலரும் வாசித்து வருகின்றார்கள் என்பதை அறிந்து கொள்வதில் மன நிறைவு அடைவதோடு, அதற்கான வாய்ப்பை வழங்கி வரும் விளம்பரம் பத்திரிகைக் குழுவினர்க்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மேலும் சில தகவல்களோடு உங்களைச் சந்திக்கின்றேன்.

ஒரு குறிக்கப்பட்ட விடயம் நினைவு படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் போது ஒரே சமயத்தில் பல இணைப்புக்கள் (connections) ஏற்படுத்தப்பட்டு மூளையின் பல பாகங்களும் நினைவாற்றல் தொழிற்பாட்டில் ஈடுபடும். முன்னேற்றமான தற்காலிக தொழில்நுட்ப வசதியால் அண்மைக்கால ஆய்வுகளில் மூளையின் எப்பாகங்கள் நினைவாற்றல் தொழிற்பாட்டில் ஈடுபடுகின்றன என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. இதன் காரணமாகவே நினைவாற்றல் பற்றிய பல தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. சாதாரணமான உடல் நிலை கொண்ட ஒருவர் தனது எண்பதாவது வயதில் பத்து வீதமான நியுரோன்ஸ்களை இழந்து விடுவார். ஆனால் மிகுதி தொண்ணூறு வீதத்தால் தேவையான இணைப்புக்களை மேற்கொள்ள முடியும். மூளை ஒரு மணித்தியாலத்திற்கு சராசரியாக ஐந்து கிராம் குளுக்கோசினைப் பாவித்துக் கொள்ளும். அதனால் போதிய தொடர்ச்சியான குளுக்கோஸ் அளவு இரத்த ஓட்டத்தில் இருக்க வேண்டும். மூளையில் உள்ள செரபிரலின் செயற்பாடுகள் நாம் நித்திரையில் இருக்கும்போதே அதிகமாக நடைபெறுகின்றன. மூளையின் தொழிற்பாடு கள் சீராக நடைபெறுவதற்கு ஒழுங்கான போதிய நித்திரை அவசியமா கின்றது என முன்பு ஆராய்ந்திருக்கின்றோம். நாம் அதிகமான மன அழுத்தத்திற்கு உட்படும் போது நினைவாற்றல் சீராக அமைவது கடினமாகின்றது.

நினைவாற்றல் குறைபாடுகளைப் பற்றியும், நினைவாற்றலைப் பாதிக்கும் சில நோய்களைப் பற்றியும் நாம் சுருக்கமாக ஆராய்வோம். நான் பொது அறிவிற்காகச் சில விடயங்களை எடுத்து வருகின்றேன். உங்கள் தனிப்பட்ட உடல்நிலை சார்ந்த விடயங்களிற்குப் பொருத்தமான மருத்துவ ஆலோசனையே உகந்த வழி என்பதை மீண்டும் உங்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அம்னீசியா (Amnesia) என்பது பொதுவான நினைவாற்றல் குறைபாடாகும். இந்தக் குறைபாடு ஏற்படும் பொழுது புதிய விடயங்களைக் கற்க முடியாத நிலையும், நாளாந்த நிகழ்வுகளை நினைவு படுத்த முடியாத நிலையும் ஏற்படுகின்றது. இரத்தக் கலங்கள் பாதிப்புறுதல் அல்லது நோயுறுதல், தலைக் காயங்கள், அல்சாமேர்ஸ் (Alzhheimer's) நோய், நரம்புச்சத்திர சிகிச்சைகள் (neurosurgical operations), இதயச் செயலிழப்பு போன்றவற்றால் இந்தக் குறைபாடு ஏற்படலாம்.

ரிற்றோகிரேட் அம்னீசியா (Retrograde Amnesia) எனப்படும் குறைபாடு எமது பழைய நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட நினைவுகளை மறக்கச் செய்கின்றது. சில நாட்களுக்குரிய அல்லது வருடங்களுக்குரிய நினைவுகளை மீட்க முடியாத நிலை இந்தக் குறைபாட்டால் ஏற்படலாம். இந்தக் குறைபாடு மின்சார அதிர்ச்சி, மின்சார விபத்தால் ஏற்படும் காயங்கள், அல்சாமேர்ஸ் (Alzhheimer's) அல்லது கோசேக்கோவ்ஸ் சைக்கோசிஸ் (Korsakoff's psychosis) போன்ற நோய்களாலும் ஏற்படுகின்றது.

முழுதான அம்னீசியா (Total amnesia) என்ற குறைபாட்டால் எந்தப் புதிய விடயத்தையும் கற்க முடியாத நிலையும், பழைய நினைவுகள் எதையும் மீடக முடியாத நிலையும் ஏற்படுகின்றது. மூளையில் உள்ள கோட்டக்ஸ் (Cortex) பாரிய பாதிப்பிற் குள்ளாவது இந்தக் குறைபாட்டுடன் தொடர்பு பட்டது ஆகும். டெமன்ரியா (Dementia) அல்லது அல்சாமேர்ஸ் (Alzhheimer's) நோய்களுடன் தொடர்புள்ளது.

அம்னீசியா ஃவிற் (amnesia fit) அல்லது பிளக்அவுட் (Blackout) என்ற குறைபாடு ஐம்பதிற்கும் எழுபதிற்கும் இடைப்பட்ட



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

Be JOB Ready in 5 - 12 months

citi COLLEGE OF CANADIAN CAREERS

Get the skills you need to get the job

IT:
Network Engineering
Enterprise Network Eng.
Internetwork Specialist

Health Care:
Medical Office Assistant
Personal Support Worker

Business:
Business Administration
Computerized Accounting

CPA ACP
OACC PROUD MEMBER
Microsoft | IT Academy Program

You may qualify for SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours per week
Call us now for details 647-476-4148

Call Today:
(647) 476-4148
www.CitiCollegeINFO.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005



Second Career clients welcome
Financial assistance may be available for those who qualify

# கனடாவில்...

## 14ஆம் பக்கத்தொடர்ச்சி

அமல்படுத்தும் பிரிவினர் (Parking Enforcement Group in the city of Toronto) செயல்பட்டு வருகின்றனர். அவையாவன பின்வருமாறு!

1. ரொறொன்ரோ நகர வாகன தரிப்புகளை கண்காணித்து அமூல்படுத்தும் உத்தியோகத்தர்கள் (Parking Enforcement Ticketing Officers in the city of Toronto) நகர சபையின் பெயரிடப்பட்ட வாகனத்தில் வாகன தரிப்புகளை கண்காணிப்பவர்கள்



என்ற வசனத்தினையும் எழுதப்பட்ட விசேட வாகனத்தில் எங்கே சட்டவிரோத வாகனம் தரிக்கப்படுகின்றது என்பதனை தேடி தேடி நகரின் வீதிகளில் சுற்றி சுற்றி வலம் வருபவர்கள்.

தற்போது 304 உத்தியோகத்தர்கள் ரொறொன்ரோ நகரில் பணி புரிகின்றார்கள். இவர்களின் வருட சம்பளமே $48,500 - $52,918 வரை ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் வழங்கப்படுகின்றது.

**நகர சபையின் சட்டங்களை கண்காணித்து அமல்படுத்தும் உத்தியோகத்தர்கள்!** (Municipal Law Enforcement Officers - Mleo)

சில தனியார் நிறுவனங்களுக்கு நகரின் சட்ட ஒழுங்கு விதிகளை கண்காணித்து அமல்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ரொறொன்ரோ நகரில் சுமார் 115 தனியார் ஏஜென்சி நிறுவனங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந் நிறுவனங்களில் மொத்தமாக சுமார் 2500 உத்தியோகத்தர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இத் தனியார் நிறுவனங்களுக்கு ரொறொன்ரோ நகரினுள் சட்டவிரோத முறையில் தரிப்பு செய்யப்பட்ட வாகனங்களுக்கு ரிக்கற் வைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (உதாரணமாக 'Toronto Parking Authority Inc' யினை இங்கு குறிப்பிடலாம்)

இவ் ஏஜென்ஸி நிறுவனங்களே சில தொடர்மாடி கட்டிடங்கள், வாகன தரிப்பு இடங்கள் போன்றவற்றில் சட்டவிரோத வாகன தரிப்பின் குற்றங்கள் என குறிப்பிட்டு ரிக்கற் வழங்கும் அதிகாரத்தினை அங்குள்ள நிர்வாக பிரிவுக்கும், காவல்துறைக்கும் (Security Department) வழங்கியுள்ளளது.

**வீதி ஒழுங்குகளை கண்காணிக்கும் ரொறொன்ரோ நகர-சபை பொலீஸ் உத்தியோகத்தர்கள்** (Toronto Police Officers Working in Traffic Division)

ரொறொன்ரோ நகரின் பொலீஸ் பிரிவில் வீதி ஒழுங்குகளை கண்காணிக்கும் உத்தியோகத்தர்கள் வாகனங்கள் சட்டவிரோதமாக தரித்து நின்றால் அங்கு தண்டனை ரிக்கற் வைப்பார்கள்.

(வாகன தரிப்பு தண்டனை ரிக்கற் சாரதி அனுமதி பத்திரத்தில் புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் Dement Points என்ற பாதிப்புகள் எதுவும் பதிவு செய்யப்படமாட்டாது. பண தண்டனை மட்டுமே எதிர்கொள்ள வேண்டியிருக்கும்) தொடரும்...

# நினைவாற்றல்...

## 15ஆம் பக்கத்தொடர்ச்சி

வயதினரிடையே சடுதியாக ஏற்படுகின்றது. இந்தக் குறைபாடு உணர்ச்சி அதிர்ச்சியால் (Emotional shock) ஏற்படுகின்றது. இந்தக் குறைபாடு சில மணித்தியாலங்களுக்கு அல்லது சில நாட்களுக்கு நீடிக்கும். கைப்பனீசியா (Hypermnesia) என்ற குறைபாட்டால் குறிக்கப்பட்ட சில விடயங்களை நினைவாற்றல் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது. சில நேரங்களில் தற்காலிகமாகவும் அல்லது நிரந்தரமானதாகவும் இந்தக் குறைபாடு இருக்கலாம். பரம்னீசியா (Paramnesia) என்ற குறைபாட்டால் சில விடயங்களை முன்பு கண்டது போன்ற மாயத் தோற்றங்கள் ஏற்படும். எக்ம்னீசியா (Ecmnesia) என்ற குறைபாடு அல்சாமேர்ஸ் (Alzhheimer's) நோயிற்குரிய இயல்புகளைக் கொண்டது. பழைய நினைவுகள் அரை குறையாக நினைவில் வரும்.

அல்சாமேர்ஸ் (Alzhheimer's) என்ற நோய் மத்திய நரம்புத் தொகுதியைப் பாதிக்கும் நோய்களுள் பொதுவானது. இது நினைவாற்றலைப் பாதிக்கும். இந்த நோய்க்கான முதல் அறிகுறியாக புதிய விடயங்களை நினைவாற்றல் செய்ய முடியாமல் இருக்கும். இந்த நோயால் கிப்போகம்பஸின் (Hippocampus) வலப்பக்கமும், இடப்பக்கமும் பாதிக்கப்படும். இதனைத் தொடர்ந்து மூளையின் ஏனைய பகுதிகளும் பாதிப்புறும். ஒரு நிலையில் நோயாளி தானாக எதுவும் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்படுவார். இவ்வாறான நிலையில் இந்த நோயினை டிமென்ரியா (Dementia) எனச் சொல்வப்படும். ஆதரோஸ்குளோரோசிஸ் (Atherosclerosis) என்ற நோயால் இருதயம், சிறுநீரகம், மூளை ஆகியவற்றுக்குச் செல்லும் இரத்தக் குழாய்கள் பாதிப்படைகின்றன. ஒரு நிலையில் இரத்த ஓட்டம் முற்றாக தடைப்படும் நிலை ஏற்படலாம்.

பார்க்கின்சன் டிசீஸ் (Parkinson's disease) என்ற நோயால் நியுரோன்ஸ் இழக்கப்படும். நியுரோரான்ஸ்மீற்றேர்ஸ் அளவில் குறைவு ஏற்படும். கோசேக்கோவ்ஸ் சைக்கோசிஸ் (Korsakoff's psychosis) என்ற நோய் அளவுக்கதிகமாக குடிப்பவர்களுக்கு ஏற்படுகின்றது. இந்த நோயால் உடல் சமநிலை பேணுதல் கடினமாவதோடு நடக்க இயலாமலும் இருக்கும். இந்த நோய் பொதுவாக 55 வயதளவில் வருகிறது. நினைவாற்றல் குறைபாடுகள் ஏற்படாமலும், நினைவாற்றலைப் பாதிக்கும் நோய்கள் வராமலும் இருப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து அவற்றைச் செயல்முறையில் கையாளுவது மிகவும் அவசியமாகின்றது. நாம் இப்பொழுது நினைவுபடுத்த வேண்டிய தகவல்களை வெளி உலகத்தில் இருந்து உள்வாங்க உதவும் பார்த்தல், மணத்தல், ருசித்தல், தொடுதல், கேட்டல் (Sight, Smell, Taste, Touch, Hearing) போன்ற ஐம்புலன்களைப் பற்றி சிறிது ஆராய்வோம். மனித உடலில் உள்ள நரம்புகள் ஐம்புலன்கள் ஊடாக உணரப்படும் தகவல்களை அல்லது புலன்களை (senses) எடுத்துச் செல்லும். இவ்வாறு உள் வாங்கப்படும் தகவல்கள் மூளையினால் அறியப்பட்டு, தொடர்ச்சியாக ஆராயப்பட்டு பரிமாற்றம் செய்யப்படும். ஒவ்வொரு விதமான புலன்களும் வெவ்வேறு அளவு அலைநீளங்களைக் (wavelengths) கொண்டது. மூளையானது ஐம்புலன்களால் வெளியிலிருந்து உள்வாங்கப்படும் தகவல்களையும், உடலின் உள்ளே இருந்து வரும் வலி, இன்பம் போன்ற உணர்வுகளையும் பெற்றுப் பரிமாற்றம் செய்யும் தன்மை கொண்டது. எமக்கும் வெளி உலகத்திற்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தும் ஐம்புலன்களுக்குரிய உறுப்புக்கள் ஆரோக்கியமாக இருத்தலும் நினைவாற்றலுக்கு அவசியமாகின்றது. நினைவாற்றல் குறைபாடுகள் ஏற்படும்போது முதலில் ஆராயப்பட வேண்டியது எமது ஐம்புலன் உறுப்புக்கள் ஒழுங்காகத் தொழிற்படுகின்றதா என்பதே ஆகும். வயது முதிர்ச்சி அடையும்போது கண்ணுக்கு பார்ப்பதற்கு அதிக ஒளி தேவைப்படுகின்றது. சராசரியாக 80 வயதடையும்போது 8 மடங்கு அதிகமான ஒளி தேவைப்படுவதாகக் கூறப்படுகின்றது. இந்தக் குறையைத் தவிர்ப்பதற்கு கலோஜன் விளக்குகளைப் (Halogen Lamp) பாவித்தல் நல்லது எனக் கூறப்படுகின்றது. இதன் மூலம் வாசிப்பதற்கும், அறைகளில் பாவிப்பதற்கும் போதிய பிரகாசமான ஒளியை முதியவர்கள் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய புலன் உறுப்புக்களை விட விரைவாகப் பாதிப்புறும் தன்மை கண்ணுக்கு உள்ளது. ஆனால் விஞ்ஞான வழிமுறையால் இதற்கான பரிகாரங்கள் பல உள்ளன. பார்த்தலுக்கு அடுத்ததாக கேட்டல் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. சராசரியாக 50 வயதில் இருந்து கேட்கும் தன்மை குறையத் தொடங்குகின்றது. ஐம்புலன் உறுப்புக்களை ஆரோக்கியமாக வைத்திருத்தல் அவசியமானதாக உள்ளது.

தெளிவாக உள் வாங்கப்படாத விடயங்களை நினைவாற்றல் செய்வது கடினமானதாக இருக்கும். மனித வாழ்விற்கு அவசியமான விடயங்களை உள் வாங்கிப் பாரிய பணியினைச் செய்யும் ஐம்புலன் உறுப்புக்கள் எமக்கு ஆசைகளையும் துாண்டி விடுவதற்கு காரணமாக அமைந்து விடுகின்றன. இதனை உணர்ந்த திருவள்ளுவர் "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார் (குறள் 6 அதிகாரம் - கடவுள் வாழ்த்து) என்ற குறளின் மூலமாக "ஐம்பொறிகளின் வாயிலாகப் பிறக்கும் ஆசைகளைப் போக்கிய இறைவனுடைய நல்வழியில் நின்றவர், நிலை பெற்ற வாழ்வு வாழ்வர்" எனக் கூறியுள்ளார். அதற்கேற்ப வாழ்ந்து உயர்வோம் எனக் கூறி விடைபெறுகின்றேன். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். தொடரும்.


### Personal Prayer To The Holy Spirit


Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - RR



Our Mother of Perpetual Help


**YOGA - MEDITATION CLASSLESS**

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham -** செல்வ சோதி - **416.289.2033**

**RESTAURANT FOR SALE**

Brand New Bar & Grill restaurant for sale.
Over 30 seats. LLBO. **MIDDLEFIELD & FINCH**
For more info. call: 416.677.4707

# வாயுத்தொல்லை - காரணமும் தீர்வும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

அவசர அவசமாக உணவை விழுங்குதல், சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போதே குளிர் பானங்களாலும் தண்ணீராலும் வயிற்றுக்குள் உணவைத் திணித்தல், வயிற்றுக்கு ஓய்வு கொடுக்காமல் விரும்பிய உணவுகளை மேலும் மேலும் சாப்பிடுதல். நாம் உட்கொள்ளும் உணவு செமியாமல் நெடுநெரம் குடலில் தங்கி விடுவதால் பக்டீரியாக்கள் உற்பத்தியாக்கி புளிப்பை உண்டாக்குகின்றது. அத்துடன் சரியாகவே வைக்கப் படாத உணவுவகைகள் வாயுத் தொல்லைக்கு ஒரு காரணமாகும். சிலருக்கு கார்போஹைரேட் அதிகமாகவுள்ள மாவுப் பொருட்கள் வாயுக்கோளாறுகளை உருவாக்குகின்றன.

கிழங்கு வகைகள், பருப்புவகைகள், குறிப்பாக கடலைப் பருப்பினால் செய்யப்படும் தீன்பண்டங்கள் புளித்ததயிர், மசாலா, பொரித்த உணவுகள் என்பன வாயுத் தொல்லையை அதிகரிக்கச் செய்யும் தன்மை கொண்டவை. வாயுத் தொல்லையால் வருந்துகின்றவர்கள் வயிற்றினை எப்போதும் காலியாக வைத்துக்கொள்ளக்கூடாது. அத்துடன் உண்ணாநோன்பு இருப்பதும் கூடாது, நேரம் தவறி உணவு அருந்துவதும் நல்லதல்ல. வாயுத்தொல்லை உள்ளவர்கள் பால் அருந்தக்கூடாது. நெஞ்சு எரிச்சல் உருவானால் வாயுத்தொல்லை அதிகரிக்கும். எனவே அதனை முதலில் குணப்படுத்தவேண்டும். நீண்டநேரம் பட்டினி இருந்து ஒரே நேரத்தில் அதிக உணவை உட்கொண்டு பின் தண்ணீரையும் அருந்தினால் சில மணி நேரத்தின் பின் வாயு அதிகமாக உருவாகும்.

உண்ட உணவு சமிபாடடைந்து அதன்



கழிவுகள் முறையாக வெளியேற்றப்பட வேண்டும். இல்லையேல் மலச்சிக்கல் உருவாகும். பின் அதிலிருந்து உருவாகும் அபாண வாயுவானது கீழ்நோக்கி ஆசன வாயில் மூலமாக வெளியேறும் எனினும் மலச்சிக்கல் தொடர்ந்து நீடித்தால் வாயுவானது மேலெழும்பி எந்தெந்த உறுப்புக்களைச் சென்றடைகின்றதோ அந்த உறுப்புக்களினால் வலியை ஏற்படுத்தும். ஆனால் மேலெழும்பும் வாயுவானது சில வேளைகளில் இருதயத்தினுள் பிரவேசிக்கும் போது மாரடைப்பை உண்டுபண்ணும். உணவானது சமிபாடடைந்து இரைப்பையிலிருந்து சிறுகுடலுக்குச் சென்று பின் பெருங்குடலுக்குச் செல்லும்போது அதன் தசைகள் விரித்துக்கொடுக்க வேண்டும். அவ்வாறு விரியாதுவிடின் அவற்றிடையே வீக்கம் ஏற்பட்டு வாயு உருவாகும் நிலை ஏற்படுகின்றது.

## வாயுத்தொல்லை தீர யோகாசன சிகிச்சை

### (1) பவனமுத்தாசனம்

மல்லாந்து படுத்துகொள்ளவும். வலது காலை மடக்கி முழங்கால் பகுதியை மடக்கி இரு கைகளாலும் பிடித்துக்கொள்ளவும். பின் தலையைத் தூக்கியபடி மூச்சை மெதுவாக வெளியே விட்டபடி முழங்கால் பகுதியை வயிற்றுடன் சேர்த்து அழுத்தியபடி மூக்கின் நுனிப்பகுதியை தொடும்படி முயற்சி செய்யவேண்டும். பின் இரண்டு, மூன்று வினாடிகள் மூச்சை உள்ளே இழுத்தபடி முழங்காலை முன்னைய நிலைக்குத் தளர்த்தவும். இவ்விாறு 10 முதல் 15 தடவைகள் செய்யவும். இவ்வாறு இடது பக்கமாகவும் செய்யவும். இந்த வயிற்றுப் பயிற்சிகளை வயிறு காலியாக இருக்கும்போது தான் செய்யவேண்டும். இதனால் அடி வயிற்றில் தேங்கியிருக்கும் வாயுவானது வெளியேற்றப்படுகின்றது. ஊனச்சதைகள் கரைந்துவிடுன்றது. வயிற்றிலுள்ள அனைத்து உறுப்புக்களுக்கும் சுத்தமான இரத்தம் பாய்ச்சப்படுகின்றது.

### (2) சித்த மருத்துவம்

பெருங்காயம், சுக்கு, மிளகு, சீரகம், திப்பிலி இவற்றை அண்ணளாவாக சேர்த்து இடித்து அதன் கலவையை வாயில் போட்டு அதன்பின் ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்துவிட்டு இரவு படுக்கைக்குச் சென்றால் வாயுத்தொல்லை குணமாகும்.

### (3) ஆங்கில மருத்துவத்தின் பாதிப்பு

இந்த வாய்வுக் கோளாறுகளுக்கென (Gastic Problem) கொடுக்கப்படும் மருந்துகள் உடலிலுள்ளே சேரும்போது சிறுநீரக பாதிப்பை (Kidney) உண்டாக்குகின்றது.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

SEARCHING FOR FAMILY PHYSICIAN


To staff a brand new clinic within a new medical building. Amazing opportunity to build your own practice. Competitive split.

EMR Ready
In-house ECG, PFT, Allergy test, event monitor.
Easy access to pharmacy, lab, specialists within the medical building.

குடும்ப வைத்தியர் தேவை

புதிதான Medical கட்டிடத்தில் தொடங்க இருக்கும் புதிய சிகிச்சையகத்துக்கு வைத்தியர்கள் தேவை.

தங்களது சொந்தமான சேவைகளை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பம். நியாயமான சலுகைகள்.




Contact: DR. VUKIET TRAN
Mobile : 647.688.2907
Email : unimedicofamilypractice@hotmail.com

# திருநீலகண்ட நாயனார்

கணவனைத் தண்டித்த கற்பரசி பால் உணர்ச்சிப் பலவீனம் முற்றும் துறந்த முனிவருக்கும் உள்ளது என்பதைப் பல பழங்கதைகளிற் படித்திருக்கிறோம். அது பரமசிவனை வணங்கும் பத்தர்களையும் விட்டபாடில்லை. பால் உணர்ச்சி இயல்பானது. ஆனாலும் திருமகளை ஒத்த மனைவியை மணம்முடித்து இல்லறத்தில் இருக்கும் ஒருவர் பரத்தைபால் செல்வது பண்பற்றது. பரிசு கேடானது. அதுவும் அதனை ஒரு சிவனடியார் செய்வது சிறுமையிலுஞ் சிறுமை. துரோகம், நம்பிக்கைத் துரோகம்.

இந்தத் துரோகத்தைச் செய்தவர் திருநீலகண்ட நாயனார் என்னும் திருத்தொண்டர். தில்லையிலே வாழ்ந்தவர்.

மாதொரு பாகம் நோக்கி
மன்னுசிற் றம்ப லத்தே
ஆதியும் முடிவும் இல்லா
அற்புதத் திருக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி
வணங்கிடும் நலத்தின் மிக்கார்.(1)

இத்தகைய சிறந்த சிவபத்தர் சிவபெருமானைத் திருநீலகண்டம் திருநீலகண்டம் என்று சொல்லி வணங்கி வந்தமையால் அவரை எல்லோரும் திருநீலகண்ட நாயனார் என்று அழைக்கலாயினர். அவர் குயவர் குலத்தவர், மட்கலம் செய்து வாழ்க்கையை நடத்திவந்தவர், அடியவருக்குத் திருவோடு செய்து கொடுப்பதைத் திருத்தொண்டாகக் கொண்டவர். எழில்நலமும் இன்குணமும் வாய்ந்த கற்பரசியார் ஒருவரை மனைவியாகப்பெற்று இல்லறத்தைச் சிறப்பாக நாயனார் நடத்தி வந்தார். ஒரு நாள் பரத்தையர் வாழும் பகுதியால் சென்ற போது ஒரு பெண் காமக்கண் காட்டினாள். அவர் மயங்கிவிட்டார்.

கணவர் பரத்தை வீடு சென்ற செய்தி மனைவிக்கு எட்டியது. இந்தக் காலத்தைப் போலவே அந்தக் காலத்திலும் கிசுகிசுப்புகள் வேகமாகப் பரவின - வாய்மொழியாக. மனைவியால் நம்பமுடியவில்லை. மேலும் விசாரித்து உறுதிப்படுத்தியிருப்பார். உண்மைதான் என்று அறிந்துகொண்டபின் அவர் ஊடல் கொண்டார். ஊடலைத் தவிர்க்க நாயனார் கூடலை விரும்பினார். மனைவியார் விலகி 'எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்' என்றார். அதாவது, நீலகண்டத்தையுடைய சிவபெருமான் ஆணையாக நீர் எம்மைத் தீண்டலாகாது என்றார். இது காமக் கணவருக்குக் கற்பு மனைவி அளித்த தண்டனை.

'இவள் எம்மை என்றதனால் இவளையும் பிற பெண்களையும் நான் மனத்தினாலும் இனிமேல் தீண்டமாட்டேன்' என்று கூறி, அவ்விரதத்தில் நாயனார் அசையாது நிற்கலானார். எந்தப் பக்குவம் இல்லாது போனாலும் திருத்தொண்டர்கள் இவ்வித உறுதிப்பாட்டுக்குப் பெயர் பெற்றவர்கள்.

இந்நிலையில் இல்லறம் நடந்த விதத்தை இப்படி விளக்குகின்றார் சேக்கிழார் பெருமான்:

கற்புறு மனைவி யாரும்
கணவனார்க் கான எல்லாம்
பொற்புற மெய்யு றாமல்
பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம் பொழியா தங்கண்
இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி இன்மை
அயலறி யாமை வாழ்ந்தார்.(2)

கற்பினிற் சிறந்த மனைவியார் தமது மேனி கணவரிற் படாதவகை அவருக்கு வேண்டிய பணிவிடைகளை எல்லாம் பொற்புறச் செய்தார். இருவரும் வெவ்வேறாக உறங்கி எழுந்தனர். வீட்டைவிட்டு இருவரும் ஒன்றாக வெளியே செல்வதைத் தவிர்த்தனர். அவ்வகையால் தமக்கிடையில் உடலுறவு இன்மையை அயலவர் அறியாதவகை வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஆண்டுகள் பல கழிந்தன. காண்டகு இளமையும் கூடவே கழிந்தது.

இவர்களது நோன்புத் திறத்தைப் பகிரங்கப்படுத்தப் பரமசிவன் பரிவுகொண்டார். சிவயோகிக் கோலத்தில் ஒருநாள் திருநீலகண்ட நாயனார் இல்லத்துக்கு எழுந்தருளினார். நாயனார் வரவேற்று ஏதாவது உதவி வேண்டுமோ என்று கேட்டார். சிவயோகியார் திருவோடு ஒன்றைக் கொடுத்து அதனைப் பேணித் தான் திரும்பி வந்து கேட்கும்பொழுது தரும்படி கேட்டுக் கொண்டார். நாயனார் அதனை அன்புடன் பெற்றுத் தமது இல்லத்தில் பாதுகாப்பான இடம் ஒன்றில் வைத்தார்.

பல நாட்களின்பின் சிவயோகியார் திரும்பிவந்து கொடுத்த திருவோட்டைத் திருப்பிக் கேட்டார். திருவோட்டை எடுக்கச்சென்ற நாயனார் திடுக்குற்றார். வைத்த இடத்திலே திருவோடு இருக்கவில்லை. எல்லாம் சிவபெருமான் திருவிளையாடல். ஆனால் நாயனார் அதனை அறியார். வைத்த திருவோட்டை எங்கும் தேடினார். மனைவியாரும் தேடினார். ஓட்டைக் காணவில்லை. மிகுந்த கவலையோடு வந்து எங்கு தேடியும் திருவோட்டைக் காணவில்லை என்றார். சிவயோகியார் சினந்தார். உரையாடல் இப்படித் தொடர்ந்தது:

சிவயோகியார்: அது பல சிறப்புகள் வாய்ந்த திருவோடு. அதன் மகிமையை அறிந்து நீ அதனை எடுத்துக்கொண்டாய்!

நாயனார்: இல்லை, இல்லை! நான் அதனை எடுக்கவில்லை. புதிய ஓடு செய்து தருகிறேன்.

சிவயோகியார்: பொன்னால் செய்து தருவாயேனும் நான் தந்த ஓடன்றி வேறேதும் கொள்ளேன். அடைக்கலப் பொருளை அபகரித்துக் கொண்டாயே!

நாயனார்: ஐயனே! நான் சிவதொண்டன். பொருள்களைத் திருடுபவன் அல்லன்.

சிவயோகியார்: அப்படி என்றால் உன்மகனைப் பற்றிக் குளத்தில் மூழ்கிச் சத்தியஞ் செய்!

நாயனார்: எனக்கு மகன் இல்லை.

சிவயோகியார்: மனைவியைப் பற்றிக்கொண்டு மூழ்கும்.

நாயனார்: எனக்கும் மனைவிக்கும் ஒரு சூள் உள்ளது. அதனால் அவள் கையைப் பிடித்து மூழ்கிச் சத்தியஞ் செய்ய முடியாமைக்கு வருந்துகிறேன்.

சிவயோகியார்: நீ வறிதான சாட்டுகள் சொல்லித் தப்ப முனைகிறாய். உன்னை விடமாட்டேன். தில்லைவாழ் அந்தணர் அவையில் என் வழக்கை உரைக்கப்போகிறேன். என்று சொல்லிச் சிவயோகியார் கடுகி நடந்தார். நாயனார் பின்தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த தில்லைவாழ் அந்தணர் மனைவ-யியைப் பற்றிக் குளத்தில் மூழ்கி உண்மையைச் சொல்லுதல் வேண்டும் என்று தீர்ப்பளித்தனர். அவர்கள் முன்னிலையில் மனைவியைத் தீண்டமுடியாத சூளை வெளியிட நாணி, வீடு திரும்பினார் திருநீலகண்ட நாயனார். பின்னர் மனைவியை அழைத்துக்கொண்டு திருப்புலிச்சுரத்துத் திருக்குளத்தை அடைந்தார். குளத்தில் ஒரு மூங்கில் தண்டில் ஒரு முனையை மனைவியார் பிடிக்க, மறுமுனையைத் தாம் பிடித்துக்கொண்டு மூழ்க முயன்றார்.

அவ்வேளை சிவயோகியார் மனைவியின் கரத்தைப் பற்றிக்கொண்டு மூழ்கும் என்றார். நாயனார் அப்படிச் செய்ய முடியாமையை யாவரும் அறியக் கூறித் தண்டைப் பிடித்தவாறே மூழ்கினார். அவ்வளவில் சிவயோகியார் மறைந்தருளினார். குளத்தில் மூழ்கி எழுந்த இருவரும் முதுமை நீங்கி இளமைக் கோலத்துடன் விளங்குவதை எல்லோரும் கண்டு வியந்தனர். தேவர் தேவராகிய சிவபெருமான் விண்ணில் உமாதேவியாருடன் விடைமேல் காட்சிகொடுத் தருளினார். அது கண்டு அண்டரும் அன்பரும் தொண்டரும் மனைவியாரும் தொழுது போற்றி நின்றனர். அவ்வேளை,

வென்ற ஐம்புலனால் மிக்கீர்
விருப்புடன் இருக்க நம்பால்
என்றுமிவ் விளமை நீங்காது (3)

என்று பெருமான் அருளவும் விறலுடை நாயனாரும் செறிகருங் கூந்தலாரும் பெறற்கரும் பேறதாய பேரின்பம் பெற்றுய்ந்தனர். தவறு செய்த தொண்டருக்குத் தன்னிகரில்லாப் பதவியா? பண்டைத்தமிழர் வாழ்க்கையில் பரத்தையர்பாற் செல்லும் ஒழுக்கம் பரவலாக இருந்தது. குறிப்பாக மருதநிலத்து ஆடவரிடம் அந்தப் பழக்கம் அதிகம் இருந்தது. அவ்வகையில் நாயனார் செய்தது ஒன்றும் புதினமன்று. எனினும் அதனைச் சிறந்த ஒழுக்கமாக உயர்ந்தோர் எற்றுக்கொண்டதில்லை. ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பும் கற்புறு மனைவிமார் தமது கணவர் பரத்தைபாற் செல்வதை விரும்புவதில்லை. அதனைக் காட்ட ஊடல்கொள்வது அவரது வழக்கம். ஊடல் சில நாட்களின்பின் மறைந்து இல்லறம் வழமைக்கு வருவது இல்லறத்து இயல்பு. ஆனால் திருநீலகண்ட நாயனார் வாழ்வில் அது நடைபெற வில்லை. அதற்குக் காரணம் மனைவி கணவருக்கு அளித்த தண்டனை.

மனைவி மட்டுமன்றி இறைவனும் நாயனாரைத் தண்டித்தே மன்னித்தருளினார். மனைவியின் தண்டனையை உலகறியச் செய்தார். இவ்வரலாறு வழுக்கிய கணவனை வழிப்படுத்தும் மனைவியின் கடமையுணர்ச்சியைப் போற்றுகின்றது. அத்துடன் குற்றம் செய்யினும் அதனைக் குணமாகக் கொள்ளுதல் சைவத்தின் இயல்பு என்பதையும் குறிப்பாக உணர்த்துகின்றது.

--------------------

1. திருத்தொண்டர் புராணம்: திருநீலகண்ட நாயனார்
பாடல் 1
2. மேற்படி பாடல் 8
3. மேற்படி பாடல் 42

கவிஞர் வி. கந்தவனம்



# ஃ விருது - 2010

2010க் கான ∴ விருது திருமதி. வசந்தா தேவி டானியலுக்கு வழங்கப்பட்டுள்ளது. கனடா – ரொரண்ரோவில் இயங்கும் சுயாதீன – கலை திரைப்படக் கழகம் வருடந்தோறும் மாற்று ஊடக முயற்சிகளில் தீவிர பங்களிப்பவர்களுக்கு ∴ விருது வழங்கி வருகின்றது. பி.விக்கினேஸ்வரன், பாலேந்திரா, டொமினிக் ஜீவா வரிசையில் இவ்வருடம் திருமதி வசந்தா தேவி டானியல் இவ்விருதைப் பெறுகின்றார்.

அனைவராலும் வசந்தா டானியல் என அறியப்பட்ட இவர் தனது ஒன்பதாவது வயதில் பரத நாட்டியத்தை கற்க ஆரம்பித்தார். திரு. ஏரம்பு சுப்பையா, திருமதி. திரிபுரசுந்தரி யோகானந்தன் ஆகியோர் இவரது ஆரம்ப கால குருக்கள். இடையில் திருமதி. வஜீரா சித்திரசேனாவிடம் கண்டிய நடனமும் கற்றார். பின்னர் இவர் இந்தியாவில் பத்மஸ்ரீ கே. என். தண்டாயுதபாணி பிள்ளையிடம் முறையாக பரத நாட்டியம் கற்றார்.

நாடு திரும்பியவர் 1968ம் ஆண்டில் இருந்து பரதநாட்டிய ஆசிரியராக உள்ளார். தமிழ் மக்கள் பல இன்னல்களை சந்தித்த நேரங்களில் மக்களது அவலங்களை நாட்டிய நாடகமாக வெளிப்படுத்தினார். பாரதியார் பாடல்களை மையப்படுத்திய பல நாட்டிய நாடகங்களை இவர் படைத்துள்ளார். இக்கால கட்டத்தில் இவரது வீடு இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டது.

கனடாவில் ரொரண்ரோவில் தமிழர் வகை துறை வள நிலையத்திற்காக (தேடகம்) மேழி, பெண் கொடுமைகளுக்கு எதிராக சொல்லாத சேதிகள், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்காக உயிர்ப்பு



போன்ற நாட்டிய நாடகங்களை மேடையேற்றினார். பின்னாட்களில் பல புதிய முயற்சிகளை மேற்கொண்டு நடனத்தாலும் பல வித்தியாசமான செய்திகளை புதிய பரிமாணங்களை வெளிப்படுத்தினார். பஞ்சபூதங்களை மையமாகக் கொண்ட ***Elements*** என்ற நாட்டிய நாடகம் ஒரு சிறந்த உதாரணம். இசையை மையமாகக் கொண்ட மிகக் கடினமான ராகம் தானம் பல்லவி இவரது திறமையின் மற்றொரு பரிமாணத்தையும் ஒரு படைப்பாளியின் இயல்புத் திறனையும் வெளிப்படுத்தியது. இவ்வாறான முதல் முயற்சி அடையார் லக்ஸ்மன் அவர்கள் படைத்துள்ளார். அதன் பின்னர் திருமதி வசந்தா டானியலே படைத்துள்ளார். இசையின் பல பரிமாணங் களை நாட்டியத்தில் மிக அற்புதமாக திருமதி வசந்தா டானியல் படைத்துள்ளார். அம்பேத்காரை மையமாகக் கொண்ட ***Foot prints He left behind*** (எச்சமாய் பதிந்து நிற்கும் காலடிகள்) என்ற நாட்டிய நாடகத்தை மேடையேற்றினார். இதனை யோர்க் பல்கலைக் கழகமும் அம்பேத்கார் மையமுக்காகவும் மேடையேற்றினார். சுமார் 70க்கும் மேற்பட்டோர் இந்நாட்டிய நாடகத்தில் பங்கேற்றிருந்தனர். சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றை 5 மொழிகளில் (தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, பெங்காலி, தெலுங்கு) மேடையேற்றினார்.

இதுவரை இவரது மாணவர்களில் 40 மாணவர்களே அரங்கேற்றம் செய்துள்ளனர். வாரத்துக்கு ஒரு அரங்கேற்றம் நடக்கும் ரொரண்ரோவில் இப்படி ஒருவரா? Canada வில் பயிலும் மாணவர்கள் பலர் நாட்டியத்தை ஒரு அந்தஸ்து கலையாகவே மேற்கொள்கின்றனர். அதன் அங்கீகாரமாகவே அரங்கேற்றம் நடைபெறுகின்றது. இதன் வியாபார பெறுமதி சுமார் 25,000 – 35,000 டொலர்கள். இவரது மாணவர்கள் அனைவரும் முறையாக ஆட வேண்டும். அத்துடன் நாட்டியம் பற்றிய அறிவும் அதிகமிருக்க வேண்டும். அரங்கேற்றம் செய்பவர்கள் அங்க சுத்தம், அடவு சுத்தத்துடன் ஆட வேண்டும். இதனை இவரது மாணவர்களிடம் காணலாம். பல்வேறுபட்ட நாட்டிய நாடகங்களை இவர் மேடையேற்றுவதனால் இவரது மாணவர்க ளும் சமூக பிரச்சினைகளை அறிந்தவர் களாக வெளியே வருகின்றார்கள். இது நிச்சயமாக மிக முக்கியமான ஒரு சமூக பங்களிப்பாகும். இவரது மாணவர்கள் பலர் இலங்கை இந்தியா உட்பட்ட பல நாடுகளில் நாட்டிய ஆசிரியையாக உள்ளார்கள்.


பந்த நல்லூர் பாணியை தனது பரத நாட்டியத்தில் மேற்கொண்டாலும் நாட்டிய நாடகத்தில் ஒடிசி, கத்தக், கதகளி, குச்சிப்புடி, கண்டியன் நடனம் போன்றவற்றை உள்ளடக்கினார். சமூகத்தில் புரையோடி யிருக்கும் பல ஏற்றத் தாழ்வுகள், ஒடுக்கு முறைகள், பெண்ணடிமைத்தனம் போன்ற பல பிரச்சினைகளை தமது நாட்டியத்தில் வெளிப்படுத்தியுள்ளார். பரத நாட்டியத்தில் மிக அதிக தேடல் மிகுந்தவராக இவருள்ள தால் இப்பிரச்சினைகளின் வெவ்வேறு பரிமாணங்களை பல்வேறு வடிவத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இன்றைய வர்த்தக நுகர்வுக் கலாச்சாரத்தின் எதிர் நிலையில் இருந்து பார்வையாளர்களுக்கு வித்தியாச மான அனுபவங்களையளித்துள்ளார்.

இவர் வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. இவரது பெற்றோர் திரு. திருமதி. இளையதம்பி தெய்வேந்திரம் வியுவல் ஆவார்கள். திருமதி வசந்தா டானியலுக்கு இவ்விருதை சுயாதீன கலை திரைப்பட கழகம் வழங்குவதன் மூலம் கழகம் பெருமைபடுகின்றது என கழக இயக்குனர் திரு. ராம் சிவதாசன் தெரிவித்தார். பரதநாட்டியம் என்ற கலைவடிவத்தை மனிதநேயக் குரலாகவும் சமூக ஒடுக்கு முறைகளுக்கு எதிரான கலை வடிவமாகவும் மாற்றிய பெருமை திருமதி வசந்தா டானியலைச் சேரும்.


SHENSHEN DESIGN & RENOVATION

PROFESSIONAL Basement, Stair Case, Floor, Steels, Ornaments

வீட்டிற்கு Paint அடித்தல் போன்றவற்றை
மிகவும் அழகாகவும், நுட்பமாகவும் செய்ய
வேண்டுமா? அழையுங்கள்



Tel: Johnny Ma: 416.508.8888 (English)
Selvan: 416.835.3475 ( Tamil)
Email: artrenovation@hotmail.com







2220 Midland Ave., Unit 2. Toronto, ON. M1P 3E6

TRIDEL
BUILT FOR LIFE

# TRIDEL CONDO
## IN CENTRAL SCARBOROUGH
the birth of a green neighborhood

METROGATE
the birth of a green neighbourhood



# "Inventory Sale"

## Special Price Package
## for
## Our Buyers

*Special Discount * விசேட விலையில்
*Special Deposit * விசேட முதலீட்டில்

Luxury Condo by award winning Builder Tridel
Close to 401, Parks & Trails, TTC and GO Transit, and shopping centres'

தொடர்புகளுக்கு:

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife / GTA Realty Inc. Brokerage*
* Independently owned and operated

416-321-6969

"கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது"



Site Location

# கோ - திரை விமர்சனம்



- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

'கனா கண்டேன்', 'அயன்' படங்களைத் தொடர்ந்து ஒளிப்பதிவாளர் கே.வி.ஆனந்த் இயக்கும் மூன்றாவது படம் 'கோ'. கதை, திரைக்கதையை எழுத்தாளர்கள் சுபாவுடன் (சுரேஷ், பாலகிருஷ்ணன்) இணைந்து எழுதி, இயக்கியிருக்கிறார் கே.வி. ஆனந்த். 'அயன்' வெற்றிப்படக் கூட்டணி. ஆனால், 'அயன்' எதிர்பார்ப்பில் வருபவர்களுக்கு 'கோ' கொஞ்சம் ஏமாற்றமே.

'சட்டத் துறை, ஆட்சித் துறை, நீதித் துறை இவைதான் ஒரு தேசத்தின் மூன்று முக்கிய தூண்கள். இதில் எந்த துறை தவறு செய்தாலும் அதைத் தட்டிக்கேட்கும் அதிகாரம் கொண்ட நான்காவது துறைதான் பத்திரிகைத்துறை. அதனால்தான் இத்துறையை தேசத்தின் நான்காவது தூண்' என்பார்கள். இந்த நான்காவது தூணை மையப்படுத்தி, பத்திரிகையாளர்களின் வாழ்வையும் சவால்களையும் இந்தப் படம் சொல்கிறது. ஒரு அரசியல் த்ரில்லர். ஒரு நேர்மையான பத்திரிகை அலுவலகம், துணிச்சலான ஆசிரியர், ஒரு புகைப்படக்காரர், இரண்டு பெண் நிருபர்கள் ஆகியோரை மையமாகக் கொண்ட கதை. ஒரு பத்திரிகை அலுவலகத்தின் செயல்களால் தமிழ்நாட்டின் ஆட்சியையே எப்படி மாற்றி அமைக்க முடிகிறது என்பதை முடிந்தவரை சுறுசுறுப்பாக சொல்லி யிருக்கிறார்கள்.

முகமூடி அணிந்த நக்சல்கள் வங்கி ஒன்றைக் கொள்ளையடிக்கிறார்கள். பத்திரிகையாளர் ஜீவா, அதை விரட்டி புகைப்படம் எடுப்பதுடன் படம் தொடங்குகிறது. அந்த வங்கிக் கொள்ளையர்களில் சிலர் பிடிபடக் காரணமாக இருக்கிறார், ஜீவா. தொடர்ந்து ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்று அனைவரும் செய்யும் தில்லுமுல்லு திருகுதாளங்களை எல்லாம் தன் பத்திரிகையின் முதல் பக்கத்தில் அதிரடி புகைப்படங்களால் டர்டாராக கிழிக்கிறார்.

இன்னொரு பக்கம் அஜ்மல். இவர் இரண்டாவது கதாநாயகன். படித்த இளைஞர்களை ஒருங்கிணைத்து அரசியல் இயக்கமாக வளர்ந்து, அரசியல் கட்சியாகி, ஆட்சியையே கைப்பற்றுகிறார். ஆனால், ஒரு கட்டத்தில் வழக்கமான அரசியல்வாதி-களைவிட படித்த இந்த இளைஞர்கள் மோசமான அரசியல் சக்தியாக காண்பிக்கப்படுகிறார்கள். படித்த இளைஞர்கள் மோசமானவர்களாக இருக்க வாய்ப்பில்லை என்றில்லை, அதை நிருபணம் செய்ய வைக்கப்படும் காட்சிகள்தான் சொதப்பல்களாக இருக்கின்றன.

எந்நேரமும் பரபரப்பான பத்திரிகை புகைப்படக்காரர் பாத்திரத்துக்கு ஜீவா பொருத்தமாக இருக்கிறார். சம்பவங்கள் நிகழும் கணத்தில் சடாரென புகைப்படக் கருவியைத் தூக்கிக்கொண்டு ஓடும் பரபரப்பும், புகைப்படம் எடுக்கும் லாவகமும் இயல்பாக இருக்கிறது. இயக்குநர் கே.வி.ஆனந்த பத்திரிகை புகைப்படக்காரராக வேலை பார்த்த அனுபவம் உள்ளவர் என்பதால், சரியாக ஜீவாவைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். கார்த்திகாவிடம் ஜீவாவுக்கு இருக்கும் நெருக்கத்திற்கும், பியாவிடம் இருக்கும் நெருக்கத்திற்கு மிடையே ஜீவாவிடம் தெரியும் உடல்மொழி வித்தியாசம் சுவராசியம்.

நகைச்சுவைக்கு என தனியாக ஆள் எதுவும் இல்லாமல் அதையும் ஜீவாவே செய்திருக்கிறார். அவரது துறை தலைவர், "என்னாடா போட்டோ எடுத்திருக்க, எல்லா போட்டோவும் ஷேக் ஆகியிருக்கு" என்று சொல்லும் பொழுது, "சரி சார், அடுத்த பேங்கை கொள்ளையடிக்கும் பொழுது, கொள்ளையனுங்களை போஸ் கொடுக்க சொல்லி, நின்னு நிதானமா ஜூம் போட்டு எடுக்கிறேன்" என்று சொன்னதும் அரங்கத்தில் சிரிப்பலை.

ரேணுகாவாக வரும் ராதா மகள் கார்த்திகாவுக்கு இது முதல் படம். அழகான கண்கள், நல்ல வாளிப்பான உயரம். பெண் பத்திரிகையாளர் வேடத்தில் வருகிறார். மெச்சும்படி இல்லை, இன்னொரு பக்கம் நடிப்பதற்கும் அதிகம் வாய்ப்புகள் இல்லை. இவர் மேல் சிம்பு பாய்கிறார் எனத் தெரிய வில்லை.

சரோ எனும் சரோஜாவாக வரும் ஃபியாவும் முத்திரை பதிக்கிறார். ஃபியா அழகு மட்டுமல்ல, செக்ஸி.

வசந்தன் பெருமாளாக வரும் அஜ்மல் நிறைவான நடிப்பு. ஊழல் மிகுந்த அரசியலை எதிர்க்கும் இளைஞராக வருகிறார். ஆனால், திடீர் திருப்பமாக அஜ்மல் வில்லனாவது


**தொடர்ச்சி 23ஆம் பக்கம்**




# கிராமிய காதல் பாடல்கள்

## "புறாவிடு தூது"

சங்க இலக்கியங்களில் கிளிவிடு தூது, அன்னம் விடுதூது, புறாவிடு தூது என்றெல்லாம் அறிந்திருந்தபோதிலும் மட்டக்களப்புக்கிராமிய பாடல்கள் மனதில் உள்ளதை உள்ளபடி எடுத்துரைப்பன. சங்க இலக்கியங்கள் தலைவன் தலைவிக்கு இடையே இடம்பெறும் கருத்தாளத்தை தோழியின் மூலம் எடுத்துரைக்கும் பாணியை விட தனது மனதை வெளிப்படையாகத் திறந்து கூறும் பாங்கு தனிப்பாங்கு. சாதாரணமாக கிராமிய மக்களிடையே நிலவும் பேச்சு வழக்கும் அவர்கள் நாளாந்தம் கண்டு கழித்துப் பழகும் பொருட்களுமே அவர்களின் உவமான உவமேயங்களாக அமைகின்றன. எளிதில் அனைவருக்கும் விளங்கத்தக்க சாதாரண கிராமிய நடையில் இந்தப் பாடல்கள் அமைந்து விடுகின்றன. அதுவும் குக்கிராமங்களில் வாழும் மக்கள் நாளாந்தம் தாம் பேசும் மொழியில் (பேச்சு வழக்கில்) அதாவது நாம் கொச்சைத் தமிழ் என்று குறிப்பிடும் அளவிற்கு அவர்களின் பாடல்கள் அப்படியே யதார்த்தத்தை கையாண்டுள்ளமை அவற்றைப் படிக்கும் போது காணப்படுகின்றது.



த. சிவபாலு, எம்.ஏ.
கனடா

காதலனைக் காணாது ஏக்கம் மனதிற்குள் இருத்திப் படும்வேதனை பெண்களுக்குத்தான் தெரியும். விரக தாகமா, அல்லது காதல் பித்தா? அவளின் நெஞ்சத்து ஈரமெல்லாம் பகல் கனவாகுமா? அல்லது நனவாகுமா? என்பதே தினந்தினம் நினைந்து நினைந்து மனத்தில் சுமையாகக் கொண்டு வரும் நிலை. காதலைக் காணாத கவலை தனது காதல் நிறைவேறுமா அல்லது நிறைவேறாது போகுமா என்ற பயம் இன்னொருபுறம். நான் உன்னோடு ஓடிவரவும் தயாராக உள்ளேன் ஆனால் எங்களின் தலை எழுத்து எப்படியிருக்கின்றதோ? என்று தனது ஆதங்கத்தை அவள் வெளிப்படுத்துகின்றாள். தனது காதலனுக்குத் தனது உள்ளத்தைத் திறந்து காட்டுவதாக அமைகின்றது பின்வரும் பாடல் அடிகள்.

தனிய இருந்துநான் தன்மப் படுகின்றதை
காகம் ஒன்று வந்து கதைக்கலையோ ராசா

என்று காகத்திடம் தூதுவிட்ட கதை சங்க இலக்கியத்தில் வரும் சத்திமுத்தப் புலவரை நினைவுக்குக் கொண்டு வருகின்றது. பெரும் வழுதியின் கொடைத்திறத்தை அறிந்த ஏழ்மையில் தவித்த சத்திமுத்தப் புலவர் பெரும் வழுதியின் அரண்மனை நோக்கிச் செல்கின்றார். மிகுந்த தூரம் நடந்த ஏழைப்புலவனை அரண்மனைக் காவலர்கள் கண்டு கொள்ளவில்லை. யாரோ பிச்சைக்காரன் என விரட்டி விட்டனர் அவரை. என்ன செய்வார் பாவம். குசேலர் கிருஷ்ணரிடம் சென்றது போன்று இவரும் செல்கின்றார். ஆனால் இவர் அரசனின் பள்ளித்தோழன் அல்லவே. என்ன செய்வார் ஊரின் ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு ஆலயத்தின் அயலிலிருந்த ஒரு மடத்தில் இரவைக் கழிக்கலாம் என்று அங்கே செல்கின்றார். அங்கு பசி ஒரு புறம். இன்னொரு புறம் தனது மனைவியின் ஏழ்மை நிலை, கணவனாக எதனையும் செய்யமுடியாத கையாலாகாத் தனத்தின் சோகமே வடிவமாக வாடி வதங்கிய அந்தப் புலவன் மேலே பார்க்கின்றான். வடகடலில் மீன் தேடி வந்து உணவுண்டு மாலைப் பொழுதில் வீடு திரும்பும் நாராய்கள் அவனது கண்களில் படுகின்றன. தனது நிலையை எப்படி மனைவிக்கு அறிவிப்பது என்பது பெரும் சவாலாக அமைய நாராய்க்கு தூதுபோகும் வண்ணம் தனது செய்தியைத் தெரிவிக்கும் வண்ணம் வேண்டுகின்றார் இந்தப் புலவர் பெருமகன். அவரது பாடலோ சுவாரஸ்யமானது:

"நாராய் நாராய் செங்கால் நாராய்
பனம் படு பனையில் கிழங்கு பிளந் தன்ன
பவளக் கூர்வாய் செங்கால் நாராய்!
நீயுந் நின்மனைவியும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீராயின் எம்மூர்ச்
சத்தி முற்ற வாவியுள் டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லிப்
பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி உரையின் மெலிந்து
கையது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே"

இந்தப் புலவன் தனது மனைவி தன்னை எதிர்பார்த்து வேயப்படாத கூரையை உடைய

தொடர்ச்சி 28ம் பக்கம்

# கோடை சுற்றுலா சுருளி அருவி

மலைப் பயணம், அடர்ந்த காடுகள், அருவிக் குளியல், புண்ணியஸ்தலம் எல்லாம் ஒரே இடத்தில் இருந்து, அந்த இடத்துக்கு சுற்றுலா சென்றால் எப்படியிருக்கும். சந்தேகமே இல்லாமல் அற்புதமான



- வழிப்போக்கன் -

அனுபவமாக இருக்கும். அப்படியொரு சிலிர்ப்பூட்டும் இடம்தான் நமது இந்த வார பயணமான சுருளி அருவி. தமிழகத்தில் பிரசித்தமான கோடைகால சுற்றுலா தளங்களில் ஒன்று சுருளி அருவி.

தமிழ்நாட்டில், தேனீ மாவட்டத்தில் போடிநாயக்கனூரில் இருந்து இருபத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது சுருளி அருவி. உயரத்தில் இருந்து கொட்டும் தண்ணீரின் குளியல் சுகத்தை மனதில் அசைபோட்டுக்கொண்டே மகிழ்ச்சியில் சுருளியை நெருங்கினால், நெருங்க நெருங்க அந்தப் பயணமே ஒரு பேரானந்தமாக உள்ளது. அடர்ந்த காடுகளும் மரங்களும், குளிர்ந்த காற்றும், காற்றில் மிதந்துவரும் காட்டின் நறுமணமும், பறவைகளின் சங்கீதமும் சுருளியின் அழகுக்கு மேலும் மெருகூட்டுவதாக உள்ளது.

அருவிக்குச் செல்லும் வழியில் சாலையின் இரு பக்கமும் திராட்சைத் தோட்டங்கள் நிறைய உள்ளன. திராட்சை விற்கும் பெண்கள் கூடையோடு சாலையோரங்களில் அமர்ந்திருப்பதைப் பார்க்கலாம். சுருளி அருவிக்கு வருபவர்களில் பெரும்பாலானவர்கள் கிலோக்கணக்கில் இங்கு திராட்சை வாங்கிச் செல்வார்கள். இப்பகுதியில் குரங்குகள் அதிகம் காணப்படும். எனவே, வாங்கிய திராட்சையையும் நமது உணவு, பண்டங்களையும் குரங்குகளிடம் பறி கொடுக்காமல் கவனமாக செல்ல வேண்டும்.

அருவிக்கு பக்கத்தில் வந்ததும் மேலும் ஒரு இன்ப அதிர்ச்சி. ஒரு அருவியை எதிர்பார்த்து வந்தால், இங்கு இரண்டு அருவிகள் உள்ளன. கீழ்ச் சுருளி, மேல்ச்சுருளி என இரு அருவிகள் உள்ளன. கீழ்ச் சுருளி அருவியில் ஒரு குளியல் போட்டுவிட்டு, அடர்ந்த காட்டின் வழியாக காலாற மலையின் மேல் நடந்து மேல்ச் சுருளி அருவிக்குச் செல்வதே ஒரு நல்ல அனுபவம். மேல்ச் சுருளி அருவியில் இருந்து விழும் தண்ணீர் தரையில் மெலிதாகப் பரவி மறுபடியும், இந்தக் கீழ்ச் சுருளி அருவியில் 40 அடி ஆழமாக வீழ்ந்து ஓடுகின்றது. உயரம் அதிகம் என்பதால் கீழ்ச் சுருளியில் தண்ணீர் குறைவாக இருக்கும்போதும் வேகம் அதிகம் இருக்கும். மொத்து மொத்தென்ற விழும் குளிர் தண்ணீரில் குளிப்பது பேரானந்தம்.

மேல்ச் சுருளி அருவிப் பகுதியில் சித்தர்கள் வாழ்ந்த இடங்களைக் காணலாம். இப்பகுதியில் நிறைய குகைகள் உள்ளன. ஒரு குகையில் சிலர் படுத்துக்கொண்டு உள்ளே சென்று வெளியே வருவதுமுண்டு. இந்த மலைக்குகைகளில் இந்து சமயக் கடவுள்களாகக் கருதப்படும் முப்பத்து முக்கோடி தேவர்களும், எண்பத்து மூன்றாயிரம் ரிஷிகளும் தங்கியிருந்ததாகக் கருதப்படும் கைலாயக் குகை மிகப் பிரபலமானது. இந்தக் குகையில் இமயகிரிச் சித்தர் என்பவர் தவமியற்றியதாகவும் கூறப்படுகிறது. இங்கு புண்ணியதானம் செய்யப்படும் இறந்தவரின் ஆன்மா சாந்தியடைய, முப்பத்து முக்கோடி

தொடர்ச்சி 26ம் பக்கம்

REDUCE FEES INCREASE PROFITS
DEBITTECH POS
BENEFITS
Free 24/7 help desk
4 hrs on-site service
Gift & loyalty cards
Use it as ATM and generate revenue
Sell phone cards
(Cellular & Long Distance)
ACCREDITED BUSINESS
BBB
CounterTop $23.95 (Dial/IP)
Wireless $39.95 (Delivery)
Pay @ table $44.95 (Dial/IP)
We Will Beat Any Competitors Offer Guaranteed
1.49%*
*Some conditions apply
Other services
Tel: 1-888 640-5479
www.debittechpos.com

# திரை விமர்சனம்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

பொருந்தவில்லை. அஜ்மல் போன்ற ஒரு பாவப்பட்ட முகத்தை வில்லனாக்கி பிரகாஷ் ராஜ், கோட்டா சீனிவாசராவ் ஆகிய இரு பெரிய குறிப்பாக, முதல் காட்சி சண்டை துரத்தலிலும் பாடல் காட்சிகளும் திை-ரயரங்கைவிட்டு வெளியேறிய பின்பும் கண்களைவிட்டு போராட்டங்களின் உண்மையான தியா-கத்தை மறைத்து, போராளிகளின் அர்ப்பணிப்பை எள்ளி நகையாடுகிறது படம் என்பதுதான் வருத்தமான விஷயம். விமர்சனங்கள் மிகவும் பலவீனமாகவும், நகைப்புக்குரியதாகவும் இருக்கிறது.


சில மெச்சத்தக்க விஷயங்களும் சில சொதப்பல்களும்



வில்லன்களை வீணடித்திருக்கிறார்கள்.

ரிச்சர்ட் எம் நாதனின் ஒளிப்பதிவு பிரமாதம். அகல மறுக்கிறது. ஹாரிஸின் இசையும் துள்ளல் ரகம்.

நக்சல் போராளிகள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்களில்லை. ஆனால், வைக்கப்படும் இருந்தாலும், கோ - விறுவிறுப்பான ஒரு கிரைம் நாவல் வாசித்த அனுபவம்.

## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


சுயாதீன கலை திரைப்பட மையம் ரொரண்ரோ

## 9th IF Tamil -2011

ஒன்பதாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா - படைப்புகளுக்கான கோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால், கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புக்கள் ஆங்கில துணைத் தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்படவேண்டும்:

- படைப்புக்கள் மே 15, 2011க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புகளுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது..
- படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி: Tam Sivathasan, Exceutive Director - IAFS
  1345 Morningside Ave., Unit # 8, Toronto, ON. Canada, M1B 5K3

மேலதிக தொடர்புகளுக்கு: 1-416-450-6833; 1-416-804-3443;
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com

- Independent Art Film Society of Toronto


## ராதிகா சிற்சபைஈசன்

Scarborough-Rouge River

தேர்தல் காலங்களில் மட்டும் தமிழர்களது பிரதிநிதிகள் என வெட்டிப் பேச்சு பேசாமல், உணர்வாலும், செயலாலும் தொடர்ந்து தமிழர்களுக்காக குரல் கொடுத்துவரும் Jack layton னின் NDP கட்சி சார்பாக, தமிழர்களின் ஒன்றுபட்ட குரலாக இத்தேர்தலில் உங்கள் முன் நிற்கின்றேன். எங்களது சமூகத்தை, எமது சமூகத்தின் உணர்வுகளை புரிந்து கொண்ட ஒருவரால்த்தான் பிரதிநிதித்துவம் செய்யமுடியும்.

இத் தேர்தலானது கனடியத் தமிழ் மக்களுக்கு மிக முக்கியமான தேர்தலாக அமைந்திருக்கின்றது. இந்நிலையில், நான் தேர்தலில் போட்டியிடும் Scarborough- Rouge River தொகுதியில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் எமக்கான ஆதரவை மென்மேலும் பலப்படுத்தி, உருவாகியுள்ள வாய்ப்பினை வரலாறாக மாற்றுவதில் அனைத்து தமிழ் மக்களும் தங்களது முழு ஆதரவைத் தருவீர்கள் என அன்புடனும் உரிமையுடன் உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன். என்னை உங்கள் பிரதிநிதியாக அனுப்புவதன் மூலம் எங்கள் சமூகத்தின் குரலை NDP Jack Layton னுடன் சேர்ந்து கனடியப் பாராளுமன்றில் ஒலிக்கச் செய்வோம்.

நான் போட்டியிடும் Scarborough-Rouge River தேர்தல் தொகுதியில் 16000 தமிழ் வாக்காளர்கள் இருக்கின்றோம். எமது இந்த 16000 வாக்குகளால் நிச்சயமாக எமக்கான தமிழ் பாராளுமன்ற பிரதிநிதியை தெரிவு செய்ய முடியும். எமது மக்களின் பிரதிநிதியாக நான் வெற்றிபெற எனக்கு உங்கள் முழுமையான ஆதரவு கிடைத்தாலே போதும். எனவே இது எங்களுக்கான நேரம். முதல் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தெரிவு செய்து வரலாறு படைக்கும் காலம்.

எனது அன்பு மக்களே, எதிர்வரும் மே 2ஆம் திகதி எங்கள் அனைத்து வாக்குகளையும் பயன்படுத்துவதன் மூலமே இவ்வெற்றியை நிச்சயப்படுத்த முடியும். எனவே எங்கள் ஒவ்வொரு வாக்குகளையும் பயன்படுத்த வேண்டிய முக்கியத்துவத்தை உணாந்து, எல்லோருமாக கைகோர்ப்பதன் மூலம் இவ்வெற்றியை நிச்சயப்படுத்துமாறு உங்களை மிக்க அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.



NDP

Scarborough-Rouge River

Paid and authorized by the offcial agent for the candidate.

# BASEMENT RENT

***MIDLAND & HUNTINGWOOD***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, supermarket. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.754.3599

***MARKHAM & 16TH AVE.***
Newly finished 2 bedroom bsmt for rent. Garage side entrance, parking. Close to school, mall. Avail. May 15, 2011
905.209.1421 / 647.405.1962

***JANE & MAJOR MACKENZIE***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to mall, Wonderland, bank. Avail. immediately.
905.303.5370 / 647.244.5370

***MIDDLEFIELD & MCNICOLL***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.704.7659

***MCCOWAN & DENISON***
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
647.706.4922 / 416.522.3314 / 905.554.2496

***MARKHAM & ELLESMERE***
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. தனித்தனியாகவும் அறைகள் கொடுக்கப்படும். 3 bedroom also available on Main floor. Family preferred. Avail. immediately.
647.857.2629 / 416.439.6009

***HIGHGGLEN & MCCOWAN***
Newly renovated 2 Bedroom walk-out bsmt for rent. Dishwasher included. Close to 3 different high schools & also Elementary school, TTC. Avail. immediately. Price negotiable.
தொடர்புகளுக்கு: 416.737.4807

***MORNINGSIDE & OLD FINCH***
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. Anytime. Close to ttc, school, shopping.
தொடர்புகளுக்கு: 416.284.6226

***MIDDLEFIELD & FINCH***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, GTA Square mall, temple. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.292.5334

***MCCOWAN & MCNICOLL***
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, temple, mall. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.335.5028

***VICTORIAPARK & ELLESMERE***
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, stores, mall & more. Avail. immediately
416.576.2655 416.444.2655/ 416.844.2655

***SHEPPARD & MARKHAM***
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Small family or ladies preferred.
தொடர்புகளுக்கு: 416. 727.3716

***MORNINGSIDE & OLDFINCH***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.712.1033

***BRIMLEY & EGLINTON***
1 Bedroom walk-out bsmt for rent. Close TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.662.7984

***MCCOWAN & STEELES***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. May 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.523.1312

***MORNINGSIDE & SHEPPARD***
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.241.2872

***MIDLAND & EGLINTON***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.750.9138 / 647.401.9423

***MARKHAM & SHEPPARD***
2 Bedroom with ground level Sep. entrance, cable, parking. All appliances Included. Close to TTC, 401. Avail. May 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.412.7837

***MARKHAM & STEELES***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.896.7740

***BIRCHMOUNT & SHEPPARD***
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, laundry. Utilities included. Avail. May 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.804.8435

***MCCOWAN & 16TH AVE.***
2 Bedroom bsmt for rent. sep. entrance, laundry, cable. Close to school, Markville mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.721.9709

***KENNEDY & EGLINTON***
2 Bedroom bsmt for rent. sep. entrance, parking, laundry. Close to TTC, Subway, mall. Avail. May 01, 2011.
647.342.9417 / 647.669.0179

***MARKHAM & PAINTED POST***
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. 1 அறை மேல்தளத்திலும் வாடகைக்கு உள்ளது. Avail. Anytime. Samll family or single person preferred.
416.431.4730 / 647.771.3801

***MORNINGSIDE & LAWRENCE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school. Avail. Anytime. 1 or 2 person or working people preferred. தொடர்புகளுக்கு: 416.841.2232

***WARDEN & ELLESMERE***
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & cable. Close to Parkway Mall, school, TTC 24 hrs., Plaza. Available anytime.
தொடர்புகளுக்கு: 416.294.4631

***MCNICOLL & MCCOWAN***
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Very strictly No smoking, No drink & Clean. Rent $650 & 40% utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

***FINCH & NEILSON***
2 Bedroom with kitchen, laundry, tv cable(With a tamil channel). Sep. entrance & parking. Close to school, busstop. Suitable for couple or small family. Avail. May 01, 11.
647.830.1915 / 416.754.4968

***MCCOWAN & BRIMORTON***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, school, park, Scarborough Town Center.
416.439.1570 / 416.431.5195

***DUFFERIN & RUTHERFORD***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, livingroom, kitchen. Close to YRT, GO station, school. Avail. anytime.
தொடர்புகளுக்கு: 905.303.3022

***MORNINGSIDE & SEWELLS***
2 Bedroom bsmt for rent. Close to all facilities. 647.703.1343 / 905.472.1370 / 647.500.4564

***MCCOWAN & STEELES***
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to plaza, school, TTC. Avail. May 01, 2011
தொடர்புகளுக்கு: 416.836.3279

***SHEPPARD & MARKHAM***
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.930.8190 / 416.321.5874

***NEILSON & FINCH / TAPSCOTT***
2 அறைகள் கொண்ட Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
வயதான தனியொருவர் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு: 416.802.6067

***MCCOWAN & 14TH AVE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to mall, school, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.302.6930

***14TH AVE & MCCOWAN***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, cable, laundry. Close to TTC, mall. Avail. Anytime. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.727.7550

***BRIMLEY & DENISON***
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0870

***McCOWAN & ELSON***
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school, mall & tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.8615

மேலும் பக்கங்கள் 25, 26

# CONDO. FOR RENT

***MIDLAND & LAWRENCE***
3 Bedroom condo. apt. for rent. Swimming pool, laundry, parking. Close to RT Station, mall. Avail. June 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.999.8318

# CONDO. FOR SALE

***WARDEN & FINCH***
2 Bedroom condo. for sale. 1 ½ Washroom, 3 car parking, cable. Close to all facilities. Avail. immediately.
416.230.7696 / 416.412.0406

# HOUSE FOR RENT

***BIRCHMOUNT & FINCH***
4 bedroom detached house for rent. Close to stores, hospital, ttc, etc. Avail. anytime.
தொடர்புகளுக்கு: 416.897.4838

***MARKHAM & LAWRENCE***
3 Bedroom + 2 washroom house for rent. Kitchen, living room உடன் Newly renovated bungalow house வாடகைக்கு உண்டு. Close to TTC, Cedarbrae mall, school, shopping.
647.707.6933 / 416.439.4076

# HOUSE FOR SALE

***MARKHAM & 14TH AVE***
Rooms 6 + 3, 3 bedroom house for sale. 4 Washrooms, kitchen, laundry. Close to all facilities.
Email: jacikumar@hotmail.com
http://ontario.propertysold.ca/markham/7063/31-horstman-street.
தொடர்புகளுக்கு: 416.993.8001

## வீடு காணி விற்பனை

யாழ். வலிகாமம் வடக்கு அளவெட்டியில் தெல்லிப்பழை பண்டைத்தரிப்பு வீதியில் சன சமூக நிலையத்திற்கு எதிரில் சேதமடைந்த வீட்டுடன் கூடிய 6 பரப்பு வீதியோர காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.543.6614

# SPACE FOR RENT

***FINCH & MIDDLEFIELD***
Meeting, classes, partyhall. Weekly, monthly, day Payment. Stress Managment workshop. $20 - 5 Sessions.
647.772.6982 / 416.497.7660

KKM Auto Maintance Inc. கார் Wash பண்ணுவதற்கு ஓர் இடம் வாடகைக்கு உண்டு.
416.755.8354 / 647.836.9255

## CARS FOR BUY & SELL

2005 Toyota corolla, 2001 Toyota Sienna, 2003 Honda Accord கார்கள் விற்பனைக்கு உண்டு. கார்கள் வாங்குவதற்கும் விற்பனைக்கும் உண்டு. அத்துடன் **Van** வாடகைக்கு ஓட்டப்படும். Airport Service.
அழையுங்கள் : ***416.625.4146***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

# ROOM RENT

**FINCH & WARDEN**

One room for rent. Laundry, internet. Close to TTC, shopping mall. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.938.7510

**KENNEDY & ELLESMERE**

இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry avail. Close to Highland Farm, TTC, school, Hopperhut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

**MARKHAM & SHEPPARD**

1 Bedroom for rent - mainfloor. Living room, washroom. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.277.9044

**KEEL & FINCH**

Furnished room for students. Close to all facilities. Now available.
905.209.9212 / 416.562.5113

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**

Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Part-time or Full-time வேலை வழங்கப்படும். Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

**MARKHAM & ELSON**

3 அறைகள் கொண்ட bsmt இல் ஒரு அறை வாடகைக்கு கொடுக்கப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது. Sep. entrance, kitchen, parking, laundry. Close to TTC, mall, bank, nofrills, tamil stores, etc.
416.686.4859/ 416.428.9138

**MIDLAND & EGLINTON**

1 Room for rent in 3 bedroom bangalow house. Close to all facilities. ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**DANFORTH & EGLINTON**

Room for rent in an apartment. Fully furnished with bed, cable tv, internet phone, laundry, parking, sharing kitchen & washroom. Close to TTC, mall. Rent $400. Male only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.637.1303

**EGLINTON & DANFORTH**

சந்தியில் தனி நுழைவாயில், பஸ்தரிப்பு, கடைகள் உள்ள அமைதியான இடத்தில் ஒரு படுக்கை அறை சகல வதிகளுடன் வாடகைக்கு உண்டு. வேலை பார்க்கும் ஆண்கள் விரும்பத்தக்கது. பென்சன் ஊதியம், சமூகநலன் உதவி பெறுபவர் ஆலோசிக்கப்படும். Rent $350
தொடர்புகளுக்கு: 416.431.5156

**BRIMLEY & DENISON**

1 Room in a bsmt for rent. Sep. entrance, laundry, cable, internet, kitchen. Close to TTC, YRT. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.919.1431

**WARDEN & SHEPPARD**

ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. ஆண்கள், பெண்கள் விரும்பத்தக்கது அல்லது வயோதிபர் விரும்பத்தக்கது. 24 மணி நேர பராமரிப்பு. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

**KENNEDY & LAWRENCE**

1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence RT. இருவர் விரும்பத்தக்கது. Available immediately.
416.994.9635 / 416.757.9456

**MIDDLEFIELD & ELSON**

Spacious rooms for rent. Sep. entrance. All amenities close by. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.300.4530

**KENNEDY & EGLINTON**

1 Bedroom for rent. Close to all facilities. No smoking. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.930.1171

**MARKHAM & SHEPPARD**

3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall.
416.335.5242 / 416.820.1999

**KENNEDY & LAWRENCE**

Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**LAWRENCE & PHARMACY**

**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

# TUITION

**FINCH & MIDDLEFIELD**
***GTA Squre Unit #230***
***Chemistry, Physics, Math, English, French, Biology***
***Homework Help Grade 6 - 12. Grade 8-10 & Grade 11 & 12 . Specialist in University experienced teacher. 416.497.7660***
***647.771.6237 / 416.889.3191***

# TUTORING

**BRIMLEY & LAWRENCE**

For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS. ***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: **416.669.3101**

## SAREE BLOUSE

**அனைத்து தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

# WANTED

Used Toyota Corolla cars wanted. 1990 - 1997 Only. Any condition.
Steeve - 416.832.1359

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

மேலும் பக்கங்கள் 24, 26

# STORE FOR SALE

கொழும்பு புறக்கோட்டையில் பீச் றோட்டில் 2 அடுக்குடன் கூடிய கடை ஒன்று விற்பனைக்கு உண்டு.
905.294.7122 / 647.771.3111

# STORE FOR SALE

***LAWRENCE & Scar. GOLF CLUB***

பகுதியில் தமிழ் Grocery கடை ஒன்று விற்பனைக்கு உள்ளது.
416.827.2585 / 416.880.4004

# CAKE CLASSES

Wilton Method of cake decorating classes available at Aarusha cake house at GTA Square mall. Unit #228.
தொடர்புகளுக்கு: 416.292.7347

## சங்கீத வகுப்பு

Ajax, Markham, Scarborough, Downtown ஆகிய இடங்களில் Swaraganam Academy ஆசிரியை வாசுகி சிகாமணி அவர்களால் சங்கீத வகுப்பு நடத்தப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 905.427.1792

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 647.618.9316

# JOB JOB JOB

**YONGE & LAWRENCE**

Midtown இல் அமைந்துள்ள இத்தாலிய உணவகத்திற்கு சமையலறை உதவியாளர் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 416.835.2943

Kitchen செய்யும் Factory ஒன்றில் அனுபவமுள்ள Kitchen, Cabinet Makers, Chairs செய்யக்கூடியவர்கள் வேலைக்குத் தேவை. (A - Z அனுபவமுள்ளவர்கள்)
தொடர்புகளுக்கு: 416.830.3932

**வேலைக்கு ஆட்கள் தேவை**

தோட்டம் துப்பரவாக்க வீடு வெள்ளையடிக்க துப்பரவாக்க உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். Fultime or parttime. Scarborough வில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.269.5174

**DRIVER WANTED**

A - Z Driver wanted. Minimum 2 years US west coast experiences. Salary from 42¢ per mile.
Francis: 647.961.2322

## CoMPuTER RePaiR

✛ கணனி திருத்தவேலைகள்
✛ கணனி தேவைகள்
✛ அடிப்படை கணனி பயிற்சி
✛ இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

# JOB JOB JOB

***MARKHAM & STEELES***

Srilankan & South Indian Restaurant Part-time & Full-time
ஆண்கள் அல்லது பெண்கள் வேலைக்கு தேவை.
***Experience*** உள்ளவர்கள் வரவேற்கத்தக்கது.
தொடர்புகளுக்கு: ***416.292.5464***

# ROOM FOR RENT


## WARDEN & FINCH

சந்திப்புக்கு அருகாமையில் உள்ள Condo. வில் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு அறை தளபாடங்களுடன் (Fully furnished) வாடகைக்கு உண்டு. மாணவர் அல்லது தனி நபர் விரும்பத்தக்கது. மாலை 4.00 மணிக்கு பின்
தொடர்பு கொள்ளவும்: 416.509.6780

## YOGA - MEDITATION CLASSLESS

# யோகா, தியான வகுப்பு

***Scarborough*** இல் யோகா தியான வகுப்பு பட்டறைகளுடன் நடைபெறுகின்றது.
ஆர்வமுடையவர்கள் தொடர்புகொள்ளவும்:
***416.273.0220***






# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 279



(1) Let the length be 2x and the height y.

We know $x^2 + y^2 = 100$.

∴ $Y = \sqrt{100 - x^2}$ (omite negative)

Area (A) = 2xy $= 2x\sqrt{100 - x^2}$ $0 \le x \le 10$

$A^1 = 2\sqrt{100 - x^2} + 2y, \frac{1}{2}(100 - x^2)^{\frac{1}{2}}(-2x)$

Let da/dx = 0

∴$2\sqrt{100 - x^2} - 2x^2/\sqrt{100 - x^2} - 0$ ∴$2(100 - x^2) - 2x^2 = 0$ $x^2 = 50$

$x = 5\sqrt{2}$ Thus $y = 5\sqrt{2}$ $L = 10\sqrt{2}$

The largest Area = $10\sqrt{2}.\sqrt{50}$ =100 sq. Unit

(2) Distance from (-3, 3) to a point on the curve is $d = \sqrt{(a + 3)^2 + [(a + 3)^2 - 3^2]}$

$d(a) = (a + 3)^2 + (a^2 - 6a + 6)^2$ For cirtical points $d^1(a) = 0$

$a + 3 + (a^2 - 6a + 6)(2a - 6) = 0$ $(a - 1)(2a^2 - 16a + 33) = 0$

a = 1 or $16 + \sqrt{-8}/4$, Therefore a =1

d(1) = 17. Therefore minimum distance = $\sqrt{17}$ and the point in (1, 4)

(3) Answer $f^1(x) < 0$

(4) $f^1(x) = 3ax^2 + 2bx + c$ $0 = 3a(-2)^2 + 2(-2) + c$

0 = 12a - 4b + c ——(1) 2 = a + b + c + 1

1 = a + b + c ———(2)

From (1) & (2) 1/5 = -11/5a + b $f^{11}(x) = 6ax + 2b$

0 = 12a + 2b 6a + b = 0

a = -1/41

Therfore -1 = 11a - 5b -1 = 11 (-1/41) - 5b

5b = 1 -11/41 = 30/41 b = 5/41

0 = 12a - 4b + c 0 = -12/41 - 24/41 + c

c = 36/41.

(5) Number of sample = (100/5). If three are defective, No of components no defective is (97/5) Number of samples that contain at least one defective component is (100/5) - (97/5)

Fraction = (100/5) - (97/5)/100/5 = 1 - 97!/92!5! x 95! 5!/100!

= 4657/32340 = 0.144 (Approximately)

### Tutorial 279 Questions

(1) Caculate the cosine of the angle between the pain of vectors c = (1, -2, 3), d = (4, 2, -1). (For Grade 12)

2. Two vectors 2a + b and a - 3b are perpendiular. Find the angle between a and b, if |a| = 2 |b|. (For Grade 12)

3. Given two non collinear vectors a and b show that a, a x u, and (a x b) x a are mutually perpendicular. (For Grade 12)

4. A ball is dropped from the height of 20m, 12m away from the top of 20m lamp post. The ball's shadow, created by the light at the top of the lamp post in moving along the level ground. How fast in the shadow moving one second after the ball is released. (For Grade 12)

5. In a dinner party of six people, what is the probability that atleast two of the people have a birthday in the same month? (For Grade 12)

MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at *Scarborough & Stouffville*

**Contact: 647.340.9490 / 647.831.0363**

Tutoring

Gr.1-12; College & University

* English * French * Math * Physics * Chemistry * Biology *

❖ Systematic and individualized Plan to Build Strong Base in Core Subject Areas

❖ Strict Adherence to Ontario Curriculum

❖ Regular School Teachers and Canadian University Graduate and Post Graduate Students Taking Classes

GTA Tutors

Ph: (647) 705 0725

Our Aim is to Make Students Competent Internationally while Committed to Affordable Rates

# கோடை சுற்றுலா...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

தேவர்களும் எண்பத்து மூன்றாயிரம் ரிஷிகளும் உதவுவார்கள் என்கிற நம்பிக்கை உள்ளது. இதனால் சுருளி நீர் வீழ்ச்சியின் அடிவாரப் பகுதியில் இறந்தவர்களுக்கான இறுதிக்கடன்களில் ஒன்றான புண்ணியா தானம் செய்யும் நிகழ்வுகள் அதிக அளவில் நடைபெறுகிறது.

இந்த இரண்டு அருவிகளிலும் ஆண்டு முழுவதும் நீர் வரும் எனச் சொல்கிறார்கள். குறிப்பாக, ஜுன், ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் நீர்ப் போக்குவரத்து மிக அதிகமாய் இருக்குமாம். சுருளி அருவிகளில் கொட்டும் தண்ணீர் அடர்ந்த காடுகளின் வழியாக, மலை மேல் இருந்து வருவதால், மலையில் உள்ள மூலிகைச் செடிகளின் மருத்துவக் குணம் சுருளி அருவி தண்ணீருக்கும் சேருகிறது. எனவே, சுருளியில் குளிப்பது உடலுக்கு ஆரோக்கியமானது என்றும் சொல்கிறார்கள்.

சுருளி அருவி அருகில் இருக்கும் சுருளியாண்டவர் கோயில் பிரசித்தமானது. மிகப் புராதனமான கோயிலும்கூட. இளங்கோவடிகள் 'சிலப்பதிகாரம்' இதிகாசத்தில் இந்த அருவி பற்றி எழுதியிருக்கிறார். ஆடிப் பெருக்கின் போது இந்தக் கோயிலுக்கு வரும் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். இப்பகுதியில்



மிகவும் பழமையான மரங்கள் காலத்தின் மாறுதலால் படிவங்களாக உருமாறி உள்ளதைப் பார்க்கலாம்.

சுருளி அருவி பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் சுருளி மலைச் சாரலில் உள்ளது கோடிலிங்கம் லிங்கபர்வதவர்த்தினி கோயில். தனியார் அறக்கட்டளை ஒன்றின் மூலம் நிறுவப்பட்டுள்ள இந்தக் கோயிலில் கோடி லிங்கங்கள் வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம். தற்போதைய நிலையில் சிறியதும் பெரியதுமாக சுமார் ஆயிரம் லிங்கங்கள் வைக்கப்பட்டுள்ளன.

சுருளி அருவி அருகிலேயே, மேற்குத் தொடர்ச்சி மலையில் கேரளா எல்லை உள்ளது. இந்த எல்லையைத் தொட்டதும் பிரசித்தமான கேரளா சுற்றுலா தளங்களான மூணார், தேக்கடி ஆகியவை இருக்கிறது. தமிழக எல்லைக்குள் கும்பக்கரை அருவி, வைகை ஆகியவை உள்ளன. சுருளி குளியல் முடித்த புத்துணர்ச்சியுடன் இப்பகுதிகளையும் சுற்றுப் பார்க்கலாம்.

எப்படிச் செல்வது, எங்கே தங்குவது?

சுருளி அருவி, தேனீ மாவட்டத்தில் உத்தமபாளையத்திலிருந்து 18 கி.மீ தொலைவிலும், கம்பம் நகரிலிருந்து 8 கி.மீ தொலைவிலும் போடிநாயக்கனூரில் இருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த ஊர்களில் இருந்து சுருளிக்கு பேருந்து போக்குவரத்தும், தனியார் டிராவல் போக்குவரத்தும் உள்ளது.

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

## ரீங்காரமிடும் குருவிகள்
## *Hummingbirds*

இது ஒரு சிறிய, அழகான தேன் குடிக்கும் குருவி. பல வண்ணங்களில் இருக்கும். நீண்ட அலகும் இருக்கும். இந்த ரீங்காரமிடும் குருவி (Hummingbirds). இப்பறவை தனது இறக்கைகளை வேகமாக அடிப்பதனால் இந்த ரீங்காரம் இடும் ஓசை வருகிறது.

ரீங்காரம் செய்யும் குருவி உலகத்தில் மிகவும் சிறிதான குருவி. அது மட்டுமல்ல, இக்குருவி பற்றிய பல விடயங்கள் உள்ளன.

இந்தக் குருவிகள் மிகவும் வேகமாகப் பறப்பன. இக்குருவிகள், நொடிக்கு 8 தொடக்கம் 100 தரம் சிறகை அடிக்கும். மேலே, கீழே, முன்னால், பின்னால் பறக்க கூடியன. இதனால் அசையாமல் ஒரே இடத்தில் பறந்துகொண்டு இருக்க முடியும். மற்றைய பறவைகளால் இது முடியாது. ரீங்காரமிடும் குருவியின் இதயம் மிக வேகமாக அடிக்கும்.



மேற்கூறிய செயல்களை செய்வதற்கு, உணவு அதிகம் உண்ண வேண்டுமே! ரீங்காரம் செய்யும் குருவிகள் தேனையும், சிறிய பூச்சிகளையும் உண்பவை. அவை தமது நிறையை விட அதிகம் உணவு உண்ண வேண்டும். இரண்டு மணித்தியாலம் சாப்பிடாமல் இருந்தால், இந்த குருவி இறக்கலாம்! அல்லது, அவை ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க வேண்டும் (torpor - hibernation) ரீங்காரமிடும் குருவிக்கு விரும்பிய நிறம் சிவப்பு. சிவப்பு நிற பூக்களை தேடிச் செல்லும்.

இவை வசிக்கும் இடம் வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா. ரீங்காரம் செய்யும் குருவியால் நடக்க முடியாது. கால்கள் இருக்கின்றன. ஆனால் அவை மிகவும் பலவீனமானவை. இவை கூடுதலாக மரத்தில் இருப்பன.

இது தான் ரீங்காரமிடும் குருவியை பற்றிய சில விடயங்கள்.



ஞா. ஆரணி
அகவை 12


**NOVENA TO THE MOST SACRED HEART OF JESUS AND ST. JUDE**



*May the Most Sacred Heart of Jesus be praised, blessed, loved adored and glorified throughout the whole world now and forever. Amen. Most Sacred Heart of Jesus, pray for us. St. Jude, worker of miracles, help to the helpless, pray for us. Say nine times a day for nine days. Prayer will be answered by the eighth day, it has never failed. Publication must be promised. Thank you very much Most Sacred Heart of Jesus and St. Jude, for favours granted. -C.D.J.*

**HOUSE FOR SALE**



வத்தளையில் மாபொல **Midland City** யில் **6 Perch** காணியில் மூன்று வருடத்திற்கு முதல் கட்டிய 3 படுக்கையறைகள், 2 குளியலறைகள் (**2 Washrooms**) உடன் சகல வசதிகளுமுடைய விமான நிலைய வீதியில் வீடு ஒன்று விற்பனைக்கு உள்ளது. விலை பேசித்தீர்க்கப்படும்.

**416.421.4345 / 416.879.8778**

**வீடு விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் ஆலடி சந்திக்கு அருகாமையில் 3 பரப்பு காணியில் 3 படுக்கை அறை, சமையல் அறை, வரவேற்பு அறையுடன் நல்ல நீர் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.**

**சாவகச்சேரியில் மட்டுவில் தெற்கில் 2½ பரப்பு காணியில் 4 அறை, சமையல் அறை, வரவேற்பு அறையுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.**

**தொடர்புகளுக்கு: 416.566.2601**
Call after 6.00 pm

**HOUSE + LAND SALE IN JAFFNA**

Location: 2nd Cross Street, Jaffna
**2½ பரப்பு காணி கிணற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு.** 2 1/2 Parappu Land including the house and the well. 5 Min. Walk to Subramaniyam Park, Courts, Jaffna Public Library, Central College, Vembadi Girls High School etc. 15 Min. Walk to Jaffa Hospital/ Town
Closer to A9 (Kandy - Jaffna) Highway
***Contact : 416-580-0606***

# கிராமிய காதல்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

தனது வீட்டை அடையாளம் கண்டு அங்கு என்னை எதிர்பார்த்திருக்கும் எனது மனைவியிடம் எனது நிலைமையை எடுத்துச் சொல்லுங்கள் என்று நெஞ்சத்தை உருக்கும் வகையிலே பாடிய பாடல் மன்னனால் செவிமடுக்கப்பட்டு அவர் அரண்மனைக்கு அழைக்கப்பட்டு பொன்னும் பரிசும் வழங்கியமை வரலாறு. ஆனால் காதலால் அன்பால் உருகும் நிலையை வெளிப்படுத்தும் பாங்கு எங்கும் ஒன்றே. மட்டக்களப்புப்பிரதேசத்திற்கு காதல் பாடலில் ஒரு தனித்துவம் உண்டு. மிக உருக்கமாக காதலர்களின் நெஞ்சத்து உணர்வுகளை வெளிக்கொண்டுவரும் பாங்கே தனித்தன்மை வாய்ந்தது. செந்தமிழில் அல்லாது பேச்சுத்தமிழில் கிராமிய சூழலில் பாடப்படும் இப்பாடல்கள் பெரும்பாலும் காதலி தனது உள்ளத்து உணர்வினை எடுத்துக் கூறுவதும் காதலன் தனது உணர்வினை எடுத்துக்கூறுவதும் அவர்களை அணுகவிடாது இடையே உள்ள தடைகள் பற்றிக் குறிப்பிடுவது தனித்துவமானது.

பச்சம் இருக்கு மச்சான் பறக்கச் சிறகிருக்கு
எண்ண மிருக்கு – நம்மட எழுத்துவண்ண மெப்படியோ?
எல்லாம் எந்தன் தலைஎழுத்து ஏங்கி ஏங்கி வாடுகிறன்
நல்லாயிருக்க எனக்கு நாள்ளப்ப விடிஞ்சிருமோ?

எனக் காதலியின் ஏக்கத்தினை வெளிப்படையாக எடுத்தக்கூறும் பாடலின் இனிமை, அதன் பொருட்சுவை, சொற்சுவை என்பன காமக்கிளர்வினை ஏற்படுத்தி விடுவதோடு அலுப்புச் சலிப்பின்றி மீண்டும் மீண்டும் பாடப்பாடக் கேட்கும் வண்ணம் அமைந்தவை. காதலியிடம் உள்ள ஐயத்தை எடுத்துக் கூறவும் தயங்கவில்லை. வாப்பா என்பது இங்கு தந்தையைக் குறிக்கும் இஸ்லாமியரது சொல்வளம். வாப்பா எனத் தந்தையையும் உம்மா எனத் தாயையும் அழைப்பார்கள். இந்தக் காதல் பாடல்கள் கிழக்குமாகாண இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் சிறப்புக்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

வாவெண்டு அழைச்சிருவன் வாசலில பாய்தருவன்
வாப்பா அறிஞ்சாரெண்டா வாளெடுத்து வீசிடுவார். நான் உன்னோடு உறவாடுவது தந்தைக்குத் தெரிந்தால் அவர் என்னைச் சும்மாவிடமாட்டார். எனக்குத் தண்டனைதான் கிடைக்கும் என்பது அவளது கருத்தாக வெளிப்படுகின்றது. நீங்கள் வந்து போகும் காலடி மண்ணை நான் அழியவிடாது பாதுகாத்து அந்தக்காலடியினைப் பார்த்துப் பார்த்து ஏங்குகின்றேன். அப்போதாவது உனது பார்வை, கழிவிரக்கம் என்மீது படும் என்னும் ஒரு நப்பாசைதான் என்பதனை உணர்த்துவதாக இந்த வாரிகள் அமைகின்றன.

தங்கமுடி ராசாட தடமழிஞ்சி போகுமெண்டு
ஓட்டால மூடிவைச்சன் - ராசா உள்ளிரக்கம் வைப்பாயெண்டு
எனக் காதலனின் பாதச்சுவட்டை யாரும் அறியாமல் மறைத்து வைத்துப் பார்த்துப்பார்த்து தனது ஆசையை பெருக்கிக்கொள்ளும் நிலைமையைய வெளிப்படுத்துகின்றது இந்தவரிகள்.

அன்புக் கரசே அழகொழுகும் ஆடவரே
காத்திருந்து கதைபேச கனகாலம் நானிருந்தன்



உன்னோடு கதைப்பதற்காக நான் இந்த யுகம்மெல்லாம் காத்திருந்தேன். அப்படிக் கதைக்க ஒரு சந்தர்ப்பத்தைக் கூட நீ ஏற்படுத்திக் கொள்ளவில்லையே. உனக்காக நான் காவல் இருக்கின்றேன் என்பதுமா உனக்குத் தெரியவில்லை. நான் காதலிப்பதைக் கூட உனக்குத் தெரியப்படுத்த முடியாதவளாக நான் இருக்கின்றேன். தலைவி சிறைப்புறமாக நிற்கின்றாள் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது இந்தக் காதல் சிட்டின் நிலைமை.

நெஞ்சிலே பாரம் நினைச்சால் பெருங்கவலை – என்ரை
கண்ணால ஓடினதை- யாரும் கண்டதுண்டோ கிளியே
என் அன்புக்காதலனோடு சேர முடியவில்லையே என்னும் ஆதங்கம் காதலியின் உள்ளத்தில். மனதில் கவலை அது பெரும் சுமையாக எனது மனதில் படிந்திருக்கின்றது. நான் கவலைப்பட்டு வடிக்கும் கண்ணீரை யாருமறியாமலல்லவா வடிக்கின்றேன். இதனை யாரறிவார்? எனது காதலனுக்கும் இது தெரிந்திருக்க நியாயம் இல்லையே என மனக்கவலையைக் கொட்டித் தீர்க்கின்றாள்.

தாமரைக் குளத்திலே தலைதெரியா ஓடையிலே
நீராடும்போது – உங்க நினைவுவந்து போகும் ராசா
தாமரைக் குளத்தில் நல்லன்னம் நீந்துவதுபோல் நான் நீராடும்போது எவ்வளவு கவர்ச்சியாக நான் இருப்பேன் இந்த உடல் உனக்காகத்தானே. என்னை நீ கண்டுகொள்ளவில்லை என்றாலும் எனது உடல் உனதல்லவோ என என்னை நினைக்க வைக்கும் சந்தர்ப்பம் நான் நீராடும் வேளைதான். அந்த ஏகாந்த நிலையில் நீ என்னுடன் இருந்தால் எப்படி இருக்கும், நான்தான் உன்னை நினைந்து நினைந்து உருகுகின்றேன் என்கின்றாள்.

வண்டறுத்த சோலையிலே மரமழுது போறதுபோல்
நிண்டழுவன் மச்சான் - உங்க நினைவுவாற நேரமெல்லாம்.
எங்கெல்லாம் தனிமை கிடைக்கின்றதோ அங்கு உன்னை அடையமுடியாத கவலை என்னைப் பற்றிக்கொள்ளும். நான் ஏங்கி ஏங்கி அழுவதற்கு அதுதானே நல்ல இடம். மரச்சோலையில் வண்டுகள் அரிக்கும் வேதனையில் அந்த மரங்கள் கண்ணீர் வடிப்பதுபோல் நானும் கண்ணீர் வடிக்கின்றேன். எனது முறை மாப்பிள்ளையே என ஏங்கும் தண்மையைப் படம்பிடித்துக்காட்டுகின்றது இந்தப்பாடல்.

தாழ்வு கடலே தங்கமுடி ராசாவே செல்வம் நிறைஞ்ச
கண்டே ஒரு செய்தி கேட்டுச் சொல்வளளே.


மனதிற்குள் பூட்டிவைத்திருக்கும் ஆசைகளை அடக்கமுடியாது வெளியே கொட்டிவிடும் நிலைமையை இந்தப்பாடல்கள் சித்தரித்துக்காட்டுகின்றன. பெண்கள் தாங்கள் மனதினுள் வரைத்துக்கொண்ட ஆண்மகனின் அழகு, அவனின் செயல், வீரம் என்பனபற்றி மனதில் தமக்குத்தாமே சொல்லி இன்புறுவதும், தோழியருக்குச் சொல்லி இன்புறுவதும் சாதாரணம். அந்த அடிப்படையில் இந்தப்பாடல்கள் ஒரு காதல் சிட்டின் கடிமனத்தைப் படம்பிடித்துக்காட்டுகின்றது. அடுத்து இதழில் இதற்கு என்ன பதில் கிடைக்கின்றது என்பதனைப் பார்ப்போம்.

# இன்றைய...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

ராலேகான் சித்தியைப் பின்பற்றி மகாராஷ்டிராவில் உள்ள 70-க்கும் மேற்பட்ட கிராமங்களில் நீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு உறுதுணை புரிந்தார், ஹசாரே. ஊருக்கு ஒரு சுயநிர்வாக அமைப்பை உருவாக்கினார். அதை அரசாங்கத்துக்குச் சம்பந்தமில்லாத ஒன்றாக கட்டமைத்தார். அதைக்கொண்டு கிராமத்திற்குத் தேவையான விஷயங்களை அந்த மக்களே செய்துகொள்ள வழியமைத்தார்.

தேவையில்லை என்பதுவும் இம்மசோதாவின் முக்கிய அம்சமாகும். இது, இந்திய மத்திய அரசால் தயாரிக்கப்பட்டுள்ள லோக்பால் சட்ட மசோதாவைவிட வலுவானது. ஆனால், இந்த மாதிரி சட்ட மசோதாவை மத்திய அரசு ஏற்க மறுத்தது. ஏற்கெனவே, அரசால் முன்வைக்கப்பட்ட லோக்பால் மசோதாவுக்கான வரைவுப் பணிகளை மேற்கொள்ள வேளாண்மை அமைச்சர் சரத்பவார் தலைமையிலான மத்திய அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டது. இந்தச் சூழலில்தான் ஊழல்வாதிகளைக் கடுமையாக தண்டிக்க வகை செய்ய,



மத்திய அரசின் லோக்பால் மசோதாவை வலுவாக்கி, அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக் கோரி, டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தரில் கடந்த 5ஆம் தேதி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார், ஹசாரே. லோக்பால் சட்ட மசோதாவை இயற்றும் பணியில், அரசு பிரதிநிதிகளுக்கு நிகராக குடிமக்களின் பிரதிநிதிகளும் இணைந்து ஈடுபடும் வகையில், கூட்டுக்குழுவை அமைக்க வேண்டும் என்பதே அன்னாவின் உறுதியான வலியுறுத்தல்.

இந்தியாவில் இப்போது பெரும் சர்ச்சைகளை உருவாக்கி வரும் பல ஊழல்கள் வெளிவர காரணமாக இருந்த, ஆர்.டி.ஐ. எனப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு பின்புலமாக இருந்தவர், அன்னா ஹசாரேதான். இப்போது ஊழலுக்கு எதிரான தனது போராட்டத்தை வலுப்படுத்தியுள்ளார்.

முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி சந்தோஷ் ஹெக்டே, உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் ஆகியோர் உட்பட 'ஊழலுக்கு எதிரான இந்தியா' என்ற அமைப்பின் உறுப்பினர்கள் 'ஜன் லோக்பால் மசோதா' என்ற மாதிரி சட்ட மசோதாவை தயாரித்தனர். இம்மசோதாவின் நோக்கம், ஜன் லோக்பால் அமைப்பின் மூலம் ஊழல் புகார்களை உடனுக்குடன் (ஒரு வருடத்தில்) விசாரித்து முடித்து, சம்பந்தப்பட்ட நபருக்கு தண்டனை வாங்கித் தருவது, ஊழலின் மூலம் ஈட்டிய சொத்துக்களை முடக்குவது போன்றவை ஆகும். ஊழலில் ஈடுபட்டவர் மந்திரியாகவோ அல்லது முக்கிய அரசாங்க அதிகாரியாகவோ இருப்பின், அவர் மீது வழக்குத் தொடர அரசாங்க அனுமதி

ஹஸாரே போராட்டம் குறித்து பிரதமர் அலுவலகம் முதலில் அதிருப்தி வெளியிட்டது. தொடர்ந்து வழக்கமாக எல்லாப் போராட்டங்களையும் கையாள்வது போல கண்டுகொள்ளாமல் இருந்தது இந்திய அரசு. ஆனால், தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஹசாரேவுக்கு பெருகி வந்த ஆதரவு, இந்தியாவில் ஒரு புரட்சிக்கு வாய்ப்புள்ளதோ என்ற அளவுக்கு சென்றது. அச்சமடைந்த அரசு இறங்கி வந்தது. ஹசாரேவின் கோரிக்கைக்கு தலைசாய்த்தது.

# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 4 பகுதி 17**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

**◊ சி.வி. நாதன் ◊**

இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைக் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப் படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். மூன்றாம் பகுதியில் பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

இருவரும் சர்வ சாதாரணமாகவே உள்ளே நுழைந்தார்கள். அவர்களின் முன்னால் ரேவதி சென்றாள். பின்னால் இனியன் அவர்களை நோட்டம் விட்டபடியே வந்தான். வாசல் கதவு ஒரு சிறிய அறையின் முன்பக்கம் போல் இருந்தது. சுமாராக 6′, 8′ பரிமாணம் கொண்ட அந்தச் சிறிய அறையைக் கடந்துதான் வீட்டினுள் ஆட்கள் போகவேண்டும். வாசற்கதவுடன் இருந்த அறையின் வலதுபுறத்தில் பாதஅணிகள் வைப்பதற்கான அமைப்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இடதுபுறத்தில் பனிக் கால மேலங்கிகள் வைக்கக் கூடியதான அலுமாரி போன்ற ஒன்று சுவருடனேயே பொருந்தியிருந்தது. வாசற்கதவுக்குச் சரி நேராக வரவேற்பறை இருந்தது. வரவேற்பறைக்குள் நுழைந்துதான் வீட்டினுள் போகவேண்டும். வரவேற்பறை நல்ல சுத்தமாகவும் ஒழுங்காகவும் இருந்தது. போதுமானதும் தேவையானதுமான தள பாடங்கள் அறையில் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. வரவேற்பறை பெரியதாக, விசாலமானதாக இருந்தது. விருந்தினர்கள் வந்து அமர்ந்திருப்பதற்கு நல்ல விலையுயர்ந்த இருக்கைகள், மெதுமெதுப்புச் செய்யப்பட்டு இருந்தன. அவற்றின் முன்னால் சுவருடன் ஒட்டிய வண்ணமாக பெரிய தொலைக்காட்சிப் பெட்டி, நாலரை அடி உயரத்தில். கீழாக சிறிய கண்ணாடியால் ஆன மேசை போன்ற ஒன்றில் தொலைகாட்சிப் பெட்டியை உயிர்ப்பித்து, தொழிற்பட வைக்கக் கூடிய சங்கதிகள். இந்த தொலைக்காட்சிப் பெட்டியில்தான் ரேவதி அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டு இருந்தவள். ரேவதி பார்த்துக் கொண்டிருந்த நிகழ்ச்சி முடிவடைந்து இன்னொரு நிகழ்ச்சி போய்க் கொண்டிருந்தது. ரேவதி போய் தொலைக்காட்சியை நிறுத்தினாள்.

அவள் தொலைக்காட்சியை நிறுத்துவதையும் நன்றாக அவதானித்தார்கள், அந்த இருவரும். எல்லோரும் வரவேற்பறைக்குள் வந்துவிட்டார்கள். உள்ளே வரும் வரையில் ஒருவருமே ஒருவருடன் ஒருவர் ஒன்றும் கதைக்கவில்லை. இனியன் இருவரையும் அமரும்படி இருக்கைகளைக் காட்டினான். அந்நியர்கள் இருவரும் அந்த அறையை வியப்புடன் பார்த்துக் கொண்டு வந்து, இனியன் காட்டிய இருக்கைகளில் இருந்தார்கள். அவர்களது முகத்தில் தெரிந்தது பிரமிப்பா அல்லது விடுப்பா என்று தெரியவில்லை. இனியனின் செல்வச் செழிப்பினை எடுத்துக் கூறுவதற்கு அந்த வரவேற்பறை ஒன்றே போதும். திலகம் மருமகளின் பதிலின்மையுடன், வீட்டினுள்ளே சென்று விட்டாள். வரவேற்பறையில் அவள் இல்லை. வரவேற்பறையை அடுத்து இருந்த தனது அறைக்குள் போய்விட்டாள். சற்று நேரத்தில் விருந்தினர்களுடன் அளவளாவ வருவாள் இது அவளது வழக்கமாக இருந்தது. வரவேற்பறையுள் வரும்வரையில் இனியன் ஒன்றுமே பேசாதிருந்தாலும் அவனது சிந்தனை பலவாறாக ஓடியது. யார் இவர்கள்? ஒருவன் என்னைப் போல, எனது மகன் இன்பவேல் போல இருக்கின்றானே? இன்பனைப் பற்றி என்ன சொல்லப் போகின்றார்கள்? ஒருவேளை இந்தப் பையன் இன்பனின் மகனாக இருப்பானோ! எப்படி? நாகராசனால் கடத்தப் பட்ட இன்பன் எப்படியோ நாகராசனிடம் இருந்து தப்பிப் போயிருக்க வேண்டும். நாகராசனிடம் இருந்து தப்பிய இன்பன் தப்பிய இடம் அவனுக்கு புதியதாக இருந்திருக்கும். புது இடமாகையினால், சிறுவனாக இருந்த இன்பனால் எங்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

50 வருடங்கள். இன்பன் வளர்ந்து, மணம் செய்து குடும்பத்துடன் இருக்கலாம். இப்பொழுதுதான் எங்களைப் பற்றி அறிந்து, எங்களுடன் தொடர்பு கொள்வதற்காக மகனை அனுப்பியிருக்க வேண்டும். அந்த விபரங்களைச் சொல்லத்தான் இன்பன் பற்றிக் கதைக்க வேண்டும் என்றார்களோ அல்லது, திரைப்படங்களில் வருவது போல இன்பன் பற்றிய முழுவிபரங்களையும் அறிந்த யாரோ, கிட்டத்தட்ட என்னைப்போல் இருந்த ஒருவனைப் பிடித்து, அவன்தான் இன்பனின் மகன் என அறிமுகப்படுத்திப் பணம் பறிக்கும் முயற்ச்சியின் ஒருபகுதியோ? இப்படியாகவும் இனியன் யோசித்தான். உள்ளே வந்த இருவரும் இன்பன் பற்றி ஒன்றுமே கூறவில்லை. அந்த அறையை அளவெடுப்பது போல் இருந்தபடியே, தலையை நாலாபுறமும் திருப்பித்திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தார் கள். இனியனுக்கு பொறுமையாக இருக்கமுடிய வில்லை. ஒருவித தவிப்புடன் "தம்பியவை இன்பன் பற்றி என்ன சொல்ல வந்தனீங்கள்?"

இனியன் கேட்டதும் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். 'அட! எத்தனை தடவைதான் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளப் போறாங்கள்' இனியன் மனதுக்குள் கேட்டுக் கொண்டான்.

"தம்பி நீங்கள் சொல்லுங்கோ!" பெரியவன் சின்னவனிடம் கூறினான்.

"இல்லையண்ணை, நீங்கள்தான் சொல்லவேண்டும்" – சின்னவன்.

"தம்பி நீங்கள் சொன்னால்தான் முறையாக இருக்கும்" – பெரியவன்


"அண்ணை! நீங்கள்தான் விபரமாக முழுவதையும் சொல்லுவது எண்டுதானே வந்தனாங்கள்? பிறகேன் இப்ப என்னைச் சொல்லச் சொல்லுறியள்?"

"அதுவும் சரிதான், ஆனாலும்......" இனிய னால் பொறுமையாக இருக்கமுடியவில்லை.

"ஆரெண்டாலும் ஒருவர் சொல்லித் துலையுங்க ளேண்டா!" கோபமாக இனியனின் குரல் வர, இருவரும் கொஞ்சம் அதிர்ச்சியாகப் பார்த்தார்கள்.

"அதை.... என்னெண்டு.... சொல்லி விளங்கப்.. படுத்துவ தெண்டுதான்..." சின்னவன் கூற, சற்றுக் கோபமாக "நான் சொல்லுறேன்" என்ற இனியன், சின்னவனைப் பார்த்துக் கேட்டான்,


**தொடர்ச்சி 37ஆம் பக்கம்**




ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்

பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்

மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

**Tel: 647-707-8671 / 416-829-4004**

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# பழங்களின் பலாபலன்கள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நாம் நோய் அற்றவர்களாக வாழ்வதற்குப் பழங்கள் பயன் தருவதுடன், தீமையும் விளைவிக்கின்றது. ஒவ்வொரு பழங்களுக்கும் இரச குணவீரியங்கள் உண்டு. அதாவது 'எக்குணத்தினால் எக்காரியம் செய்யப்படுகின்றதோ அக்குணமே வீரியமாகும் என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். அத்திறத்தினால் எமக்கு நன்மைகளும், தீமைகளும் ஏற்படுகின்றன. நாம் பழவர்க்கங்களை தெரிந்து எடுக்கும் போது நாட்டின் காலநிலைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். அறுசுவைகளில் பழங்களில் இனிப்பு, புளிப்பு, புளிப்புஇனிப்பு, கைப்பு, துவர்ப்பு சுவையுடன் காணக் கூடியதாக உள்ளது.

எனவே நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு உடல்நலம், உள்ளம் தாக்கம் இன்றி நோய் அற்றவர்களாக இருக்க வேண்டும். இதற்கு நாம் நாளாந்தம் எடுக்கும் அன்ன ஆகாரவர்க்கத்தில் பழத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருப்பீர்கள்.

கால, நேரம், இடம் என்பவற்றிற்கு எமது, உடம்பு எந்நிலையில் இருக்கின்றது என்பதை நன்கு அறிந்துகொள்ள வேண்டும். அதற்கு அமைய உண்ணும் பழத்தை தெரிந்து எடுத்தால் மருந்தின்றி மகிழ்வுடன் வாழமுடியும் என்பதில் ஐயமில்லை.

விஞ்ஞானம் விருத்தியான இக்காலத்தில் நவீன முறையான ஆங்கில மருந்துகளைத் தொடர்ந்து பாவிப்பதினால் இருதயம், சுவாசப்பை, கல்லீரல், மண்ணீரல் குடல்பகுதி என்பன நாளடைவில் தாக்கம் ஏற்பட்டு ஒன்றைத் தொட்டு ஏற்படும் உபத்திரவ வியாதிகள் வரலாம் எனவும் அறிய முடிகின்றது.

ஒருவர் சிகிச்சை பெற்றுவரும் போது நன்கு புலனாகும். மேலும் இத்தன்மை ஏற்படாது மாற்றியமைக்க அவ்வேளையில் பழங்களையோ அன்றி பழரசங்களையோ பாவிப்பது மிக முக்கியமாகும். உணவு முறைகளைக் கவனிக்கும் போது நன்கு சத்துள்ள தகுந்த பழவர்க்கங்களை இளமையில் இருந்து பாவித்து வருவது மிக நன்றாகும். நாம் பழவர்க்கம் பலவற்றை கண்டவர்களாக இருக்கலாம். அதில் எமக்கு உடல் நலத்திற்கு ஒத்துப் போகக் கூடிய சத்துநிறைந்த பழங்களைத் தேர்ந்து எடுப்பது முக்கியமாகும். எனவே பழங்களின் திறன் ஆய்வு பற்றிப் பார்ப்போம்.

## விளாம்பழம்



இது இனிப்பும், புளிப்பும் சேர்ந்த சுவையுடையது. குளிர்ச்சியை உண்டாக்கும் குணம் உடையது. அத்துடன் உயிர்ச்சத்து A.B.C + இரும்புச்சத்து + சுண்ணாம்புச்சத்து என்பன நிறைந்து காணப்படுகின்றன. உடல் தசை வளர்ச்சியை ஏற்படுத்தும். இரத்தத்தை சுத்தீகரிக்கும் இயல்புடைய பலம் தரும் பழமாகும். இருதயம் வலுப்பெற்று செய்கைகள் தளர்வின்றி இயக்க உதவும். நரம்பு மண்டலங்களைச் சோர்வு இன்றி செயல்பட வழியமைக்கும். ஆண்மைத் தன்மையை அதிகரிக்கச் செய்யும். அத்துடன் சுண்ணாம்புச் சத்து, செறிந்து காணப்படுவதினால், பற்களும், எலும்புகளும் வலுப்பெற்றதாக அமையும். பசியை ஊட்டி உண்ணும் உணவை இலகுவாக சீரணிக்க வழியமைக்கும். அத்துடன் உடல் வெப்பத்தை தணிக்கும் ஆற்றல்படைத்தது.

சிறுவர்களுக்கு இப்பழத்தை இடையிடையே கொடுத்து வருவதினால் அவர்களின் மூளை வளர்ச்சியை கொடுப்பதுடன் நினைவாற்றலையும் ஊட்டவல்லது. சுவாசகாசம் என அழைக்கப்படும் வியாதியை இதன் வீரிய செயல் திறனால் குணமாக்கும் இயல்புடையது. சொறி, சிரங்கு, கடி ஏற்பட்டவர்களுக்கு வெளிப்பிரயோகமாக தைலம் அல்லது கீறீம் (பசை) போன்றவற்றைப் பூசி இப்பழத்தை உட்பிரயோகமாகப் பாவித்து வந்தால் குணம் பெற்று வருவதைக் காணமுடியும்.

வெள்ளை வெட்டை வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் பழத்துடன் + வெல்லம் கூட்டிப் பாவித்து வர படிவு ஏற்பட்டு வருவதை நன்கு அறிவீர்கள். நெஞ்சுவலி காணும் போது இப்பழத்தை + தேன் சேர்த்துப் பாவித்து வந்தால் வலித்தன்மை நாளடைவில் அற்றுப் போகும்.

## வில்வம்பழம்

இது நன்கு தசைப்பற்றுள்ள பழமாகும். இப்பழத்தின் தன்மையை நன்கு அறியாததினால் அதிகமானோர் எடுப்பது குறைவு. இப்பழம் மருத்துவகுணம் கொண்டதாகும். உஸ்ணவீரியம் கொண்டதாக இருந்தாலும் உடல் நலத்தையும் பலத்தையும் ஆக்கும் இயல்புடையது. சுவாசகாசம் ஏற்பட்டவர்களும் பாவிப்பதினால் பயன் பெறமுடியும். மேலும் வில்வம் பழத்தின் ஒட்டுப்பகுதியை எடுத்து சிறுசிறு துண்டுகளாக்கி முறைப்படி கசாயம் செய்து தேன் கூட்டிப் பாவித்துவந்தால் சீதத்தோடு கூடிய பேதி நோய்குணமாகும். (சீதபேதி) தங்களுக்கு தொண்டைநோ, புண்தன்மை காணப்படின் இப்பழத்தை தவறாது பாவித்து



வந்தால் தகுந்த பயன்பெறமுடியும். சிலருக்குச் சலம் சொட்டுச் சொட்டாகக் கழிவதுண்டு. இவ்வேளையில் இப்பழத்தை எடுத்து நன்கு சுத்தமான தண்ணீரில் கரைத்து வெல்லம் கூட்டிப் பாலும் சேர்த்துப் பாவித்து வந்தால் (காலை மாலை) சுகம் பெறமுடியும். வயிற்றின் குடல்புண், அவியல் அகன்று விடும். மூலவியாதி இருப்பின் இப்பழத்தை பாலுடன் சேர்த்து ஓரளவு மிளகுத்தூளும் இட்டுப் பாவித்துவரின் தக்க பயன் காணமுடியும்.

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909



**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

your 2nd house is Investment property
1st house put down payment

Tenant (Rent) Pay the **Mortgage**
Scarborough , Mississauga


Senior Home in Richmondhill
12 Beds

Metal scrap yard for recycling
and car sales with house office

Bungalow House with basement Apartment
Markham /Sheppard

For students 2 + 1 **Condo.**
in Toronto Near Univerisal of York
$130,000

ELECTRICAL WORKS
**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880



# கலியுகத்துக்கும் அவதாரங்களுக்கும் என்ன சம்பந்தம்

## பகவான் பாபா அவர்களை உள்ளத்தில் நிறுத்தி....

யுகங்கள் நான்கு. அவையாவன: கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம். பூலோகவாசிகள் அறிவும், ஆய்வும், ஆற்றலும் கூடக்கூட அறநெறிகளைக் கைவிட்டு பாவமூட்டைகளின் சுமையைக் கூட்டுகிறார்கள். எவ்வாறு ஆசாபாசங்களை மட்டுப்படுத்த அவதாரங்கள் தோன்றுகின்றன பார்ப்போம். இந்த யுக அழிவுகள் நீராலும் நெருப்பாலும் மாறி மாறி அழிவனவும், வடவாமுகாக்கினியாலும், கடற்கோள்களினாலும் அழிந்து வந்தமை இப்போது இரண்டாலும் சேர்ந்து நிகழுமோ எனும் ஐயம் எழுகிறது.

சுகர்நாடி எழுதிய சுகர் முனிவரும், ஜேசு கிறிஸ்து நாதர் எழுதிய உலகின் கடைசிநாள் (End of the world) உம், நொஸ்ரடாம் எழுதிய பிரளயமும் ஏறக்குறைய ஒரே காலத்தில் வருகின்றன. கலியுக அழிவு மெல்ல, மெல்ல அண்மித்துக் கொண்டு வருகிறது. பகவத்கீதையில் கலியுகம் 21 அவதாரங்களைக் காணுமென்றும் இதில் 10 அவதாரங்கள் மிகப்பிரதானமானவை. கிருஷ்ண அவதாரம் ஒரு பூரண அவதாரம் எனவும் கூறப்பட்டுள்ளது. மற்றவை சில கூர்ப்பு நிலையில் நிகழ்ந்தவையாகும்.

## அவதாரம் என்றால் என்ன?

இறங்கி வருதல் என்பது பொருள். மேலே இருந்து இறங்கி வருதல் ஆகும். இறைசக்தி, பூவுலகின் பாவம் செய்த ஆன்மாக்களை வழிப்படுத்த நிலவும் அகங்கார மமகாரங்களைப் போக்கவும், குருவடிவாய் வந்து அற்புதங்களைச் செய்து மக்களை ஆசீர்வதிக்கவும், துர்ச்செயல் களை நீக்கவும், உபதேசம் செய்யவும் எடுப்பது அவதாரம் என நாம் அறிவோம்.

அவதாரம் தோன்றும்போது தான் யாரெனச் சொல்லிக் கொண்டுவருவதில்லை. ஆனால் இயற்கை அதனை ஆட்கொண்டுவிடும். அதற்கு இருக்கும் மகிழ்ச்சியில் இயற்கை காட்டிக் கொடுத்துவிடும். அதனை அவதானிக்கும் மக்கள் புரிந்து கொள்வர்.

உதாரணமாக ஜேசுநாதர் பிறந்தபோது வெள்ளிகள் அடையாளங்காட்டின. பகவான் சிறிசத்தியசாயிபாபா பிறந்த போது பல இயற்கை நிகழ்வுகள் நிகழ்ந்தன. ஒருவரும் வாசிக்காமலே அங்கே வைக்கப்பட்டிருந்த சங்கீத வாத்தியங்கள் தாமே வாசிக்கத் தொடங்கின. சட்டைப்பையுள் கை விடும் நேரமெல்லாம் சொக்கலேற்றுக்களும் இனிப்புகளும் வந்தன.

தெய்வீகத்துவத்தோடு பிறக்கும் மனிதரை



துலங்கவிடாது காமம், கோபம், மோகம், மதம், லோபம், மாற்சரியம் முதலியன தெய்வத்துவத்தை மூடி மறைக்கின்றன. இவற்றை அணுகவிடாமல் நன்மக்களாக வாழ்ந்து காப்பாற்றிக் கொள்கிறார்கள் சிலர்.

பகவான் தன்னைத் தானே யார் என அறிந்து கொண்டாலும் பதினாறு வயதுவரை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. அவர் வெளிப்படுத்திய "சாயிபாபா" கண்டபின் தான் பகவானில் மனிதத்தன்மையும் தெய்வீக தன்மையும் கலந்திருப்பதை மக்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

பகவானின் வருகை மக்களிடம் எப்படி தெய்வீகத் தன்மை இருப்பதை உணர்த்தி இழிவான இயல்புகளைத் தவிர்த்து ஒன்று சேர்க்கவே சத்யம் சிவம், சுந்தரம், சத்ய சொரூபம் சச்சிதானந்தம் ஆனவர்.

இயற்கையே அவர் கட்டுப்பாட்டில். அவர் எங்கும் நிறைந்தவர். எல்லாம் வல்லர். அப்போது எப்படி அவரை அவதாரமோ இல்லை என்று சொல்வது.

## எப்படி அவர் மக்களை அணுகுகிறார்?

எல்லாச் சமயங்களுமே சனாதன தர்மங்களை அடிப்படையாகக் கொண்டவை. எல்லாச் சமூகங்களுமே மதங்களுக்கு முதன்மை ஸ்தானம் கொடுப்பவை. இவ்வேறுபாடுகளிடையே நாம் ஒருமைப் பாட்டைக் கண்டு பிடிக்க வேண்டும். எல்லா மதங்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு பொதுவிடயம் பகவான் அப்படிக் கண்டுபிடித்த தத்துவம் தான் என்ன? சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை. இந்த நான்குமே தத்துவத்தை ஏற்றுநிற்கும் நான்கு கப்புகளாகும். இதிலிருந்து பலவற்றை நாம் தோற்றுவிக்க முடியும் என்கிறார். அப்படி துணை நெறிகளும் அஹிம்சை போன்ற பல நன்நெறிகளை மக்கள் மத்தியில் பரப்பினார். அவரது அற்புதங்களும் மகிமைகளும் ஒரே நேரத்தில் பல இடங்களில் காட்சி கொடுத்ததையும், நோய் நொடிகளைத் தீர்த்து வைத்தமையும், அசாதாரண திட்டங்களை நிறைவேற்றியதும் ஆகும்.

ஒரு காலகட்டத்தில் அவரது சங்கங்கள் இல்லாத ஒரு நாடோ ஒரு மூலைமுடுக்கோ இல்லாமல் பறைசாற்றும்.

தான் வாழ்நாளை மகிமைக்கெனவும், உபதேசத்திற்கெனவும், தியானத்துக்கென வும் மூன்றாகப்பகுத்து வைத்தார். அவை முக்கியம் பெற்றாலும் முக்காலத்திலும் எல்லாம் சிறிது சிறிதாகவாயினும் நடைபெறும் என்றார்.

தமது 85வது வயதில் குன்றின்மேல் அமர்ந்திருக்கும் அனுமன் சிலையருகே குடிசையொன்று போட்டு Forest (For Rest) போகப் போகிறேன் அப்போதிலிருந்து ஒருவருக்கும் தரிசனம் தரமாட்டேன் என்று சொல்லியும் இருந்தாராம். நிஓராசத எனில் நிஓ ரிாசத எனவும் விளக்கம் அளித்தார்கள்.

கோதுமைக் கஞ்சி மட்டுமே அவரது உணவு. மனித உடல் எப்போதும் ஒரு எல்லைவரை தான் நின்று பிடிக்கும். அது துருப்பிடிக்கத் தொடங்கினால் அந்த அவதாரங்களாலே காப்பாற்ற முடியாது. இராமகிருஷ்ண பரமகம்ஷர் தொடக்கம் எல்லா ஞானிகளுமே நோய் வந்துதான் மறைந்தார்கள்.

"மானஸ பஜரே குருசரணம்" என்ற பஜனைப்பாடலை முதலாவதாகப் பாடிய பகவான் எத்தனையோ பஜனைப் பாடல்களைப் பாடியுள்ளார். சர்வமதமும் சம்மதமே என்பது போல சர்வதர்மப் பாடலையும் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அவரை ஆன்மீகக்குருவாக ஏற்று பின்பற்றும் பக்தர் யாவரும் தங்கள் வழி நின்று சத்யயுகத்தைப் படைப்பதற்கு முன்னிற்போம்.




**வள்ளிநாயகி இராமலிங்கம்**


# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

*WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:*

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

*HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING*

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# சிவத்தமிழ் விழா

ஸ்ரீ வரசித்திவிநாயகர் இந்துக்கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு சிவத்தமிழ் விழா ஏப்ரல் 23, 2011 திகதி சனிக்கிழமை ஸ்காபரோவிலுள்ள கனடா கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்ரீ வரசித்திவிநாயகர் தேவஸ்தான ஸ்தாபகர் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் அவர்களால் 2005 ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தில் பண்ணிசைப் பாடத்துடன் ஆரம்பிக்கப்பட்ட வகுப்பு பின்னர் 2006 ஆம் ஆண்டு தை மாதம் முதல் பண்ணிசை, தமிழ் மற்றும் சமயம் ஆகிய மூன்று பாடங்களையும் கற்பித்துவரும் ஸ்ரீ வரசித்திவிநாயகர் இந்துக்கல்லூரியாக மாற்றமடைந்தது. 2009 ஆம் ஆண்டு ஆவணி மாதத்திலிருந்து இந்துக்கல்லூரி வேதசிவாகம வித்யாலயம், யோகாசன வகுப்புக்களையும் நடத்தி வருகிறது.

2006 ஆம் ஆண்டில் ஸ்ரீ வரசித்திவிநாயகர் இந்துக்கல்லூரி 60 மாணவர்களும் 7 ஆசிரியர்களுடனும் ஆரம்பமானது. இப்போது 200க்கு மேற்பட்ட மாணவர்களும் 11 ஆசிரியர்களும் இருக்கிறார்கள். சிவத்தமிழ் விழா சரியாக மாலை 4:00 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. இவ்விழாவிற்கு இந்துக்கல்லூரியின் ஆசிரியர் திருமதி விஜயநந்தினி விஜயபவன் தலைமை தாங்கினார். சிவத்தமிழ் விழாவிற்கு பிரதமவிருந்தினராக தமிழ்கலைத் தொழில்நுட்பக் கல்லூரி தலைவர் V.S. துரைராஜாவும், கௌரவ விருந்தினர்களாக ஸ்காபரோ ஏஜின் கோட் பகுதி பாடசாலை சபை உறுப்பினர் Soo Wong அவர்களும் உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் R.N லோகேந்திரலிங்கம் அவர்களும் மற்றும் அறிஞர் சாமி அப்பாத்துரை அவர்களும் வந்திருந்தார்கள். சிவத்தமிழ் விழா நிகழ்ச்சிகளை செல்வி ஸ்ரீரஞ்சினி பஞ்சாட்சரகுருக்களும் திருமதி மதுநந்தினி தயானந்த சர்மாவும் தொகுத்தளித்தனர். சிவத்தமிழ் விழாவின் முழு நிகழ்வுகளும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி மாணவர்களாலேயே நடத்தப்பட்டன. அதேபோல் இந்நிகழ்ச்சிகளை நெறியாள்கை செய்தவர்களும் இந்துக்கல்லூரியின் ஆசிரியர்களே. மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து விநாயகர் துதி, வேத பாராயணம், தேவாரம், தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழில் கனேடிய தேசியகீதம் மற்றும் ஸ்ரீ வரசித்திவிநாயகர் இந்துக்கல்லூரி கீதம் என்பன நடைபெற்றன. இவற்றை தொடர்ந்து இந்துக்கல்லூரியின் அதிபர் திருமதி பூங்கோதை அமுதன் வரவேற்புரை நிகழ்த்தினார். அதிபரின் வரவேற்புரையை தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. இந்நிகழ்ச்சி களுக்கு இடையியே இந்துக்கல்லூரி மாணவர்களுடைய பேச்சுக்கள் இடம்பெற்றன.

ஞானக்குழந்தை - றாணியன் சுரேஷ்குமார் தாய்மொழி - துர்க்கா தயாளலிங்கம், திருநாவுக்கரசுநாயனார் - புருஷோத் தவேந்திரன், ஆறுமுகநாவலர் - ஜனகன் செந்தூரன், சுந்தரமூர்த்திநாயனார் - வாகீஸ் மதியழகன், நன்றி அறிதல் - ஆரணி ஞான-நாயகன்.

இப்பேச்சுக்களை இந்துக்கல்லூரியின் ஆசிரியர்களான திருமதி. கமலாம்பிகை சாந்தலிங்கமும், திருமதி. திலகவதி சின்னப்புவும் நெறியாள்கை செய்திருந்தனர். மாணவர்கள் எல்லோரும் பேச்சுக்களை மனனம் செய்தும் பெரும்பாலானோர் தெளிவான உச்சரிப்புடன் பேசியதும் குறிப்பிடத்தக்கது. இவ்விழாவிற்கு ஆசி உரைகளையும் வாழ்த்து உரைகளையும் ரொறொன்ரோவிலுள்ள மற்றைய சமய, தேவஸ்தானங்களை சேர்ந்தவர்கள் வழங்கியிருந்தார்கள்.

ஒருங்கமைப்பாளரான திரு. கதிர் துரைசிங்கம் இச்சிவத்தமிழ் விழாவை நடத்துகின்ற ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானமும், இந்துக்கல்லூரி ஆசிரியர்களும் இவ்விழாவை சரியாக நான்கு மணிக்குத் தொடங்கி இவ்விழா நிகழ்ச்சியிலுள்ள 48 நிகழ்வுகளை திட்டமிட்டு சிறப்பாக நடத்திக்கொண்டுவரும் திறமையைப் பாராட்டினர். இந்துக்கல்லூரி யில் மார்ச் 06, 2011 இல் நடைபெற்ற பொது அறிவுப் போட்டிக்கு நடுவர்களாக இருந்த செல்லத்துரை சத்தியமூர்த்தி, கவிஞர் வி. கந்தவனம், கலாநிதி இ. பாலசுந்தரம் மற்றும் தம்பிரான் குகதாசனுக்கும் மேடையில் மதிப்பளிக்கப்பட்டது. இவ்விழாவின் ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு விழாவிற்கு வருகை




விழாவின் கலை நிகழ்ச்சிகளுக்கு இடையே விழாவிற்கு கௌரவ விருந்தினர்களாக வந்திருந்தவர்களுடைய உரை இடம்பெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்த மார்க்கம் கல்விச்சபையை சேர்ந்த செல்வி வனீற்றா நாதன், திருமறை கலாமன்றத்தை சேர்ந்த திரு. குயின்ரஸ் துரைசிங்கம், கனடா ஈழநாடு பத்திரிகை பிரதம ஆசிரியர் திரு. T.K. பரமேஸ்வரன் மற்றும் ஜனகன் பிக்சர்ஸ் அதிபர் கலைஞானி திரு. S. ஸ்ரீமுருகனும் உரை நிகழ்த்தினார்கள். இவ்விழாவிற்கான தலைவர் உரையை இவ்வருடம் சிவத்தமிழ் விழாவை தலைமை ஏற்று நடத்தும் இந்துக்கல்லூரி ஆசிரியர் திருமதி விஜயநந்தினி விஜயபவன் நிகழ்த்தினார். பிரதமவிருந்தினர் உரையை நிகழ்த்திய திரு. V.S. துரைராஜா தமிழ்கலை தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பயில்வதாயும், கத்தோலிக்க கல்விச் சபையை சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தன்னிடம் தமிழ் மாணவர்கள் மற்றைய வசதி வாய்ப்புக்கள் கூடிய சமூக மாணவர்களைவிட ஆர்வமாகவும் ஊக்கமாகவும் தங்கள் பாடசாலை வேலை தவிர்ந்த வெளிக்கள நிகழ்வுகளில் பங்குபற்றுவதாக தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார். இக்கல்லூரியின் வளர்ச்சி பற்றி உரையாற்றிய இந்துக்கல்லூரியின் ஆலோசகரான சிவத்தமிழ் செல்வர் திரு. செல்வத்துரை சத்தியமூர்த்தி, சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரகுருக்கள் எவ்வாறு ஸ்ரீ வரசித்திவிநாயகர் இந்துக்கல்லூரியை ஆரம்பித்தார் எனவும் அது எவ்வாறு கடந்த ஐந்து வருடங்களாக வளர்ந்து வந்தது என்பது பற்றியும் கூறினார்.

கௌரவ உரை நிகழ்த்திய இவ்விழாவின் தந்திருந்த ஆதரவாளர்களான தனா மாணிக்கவாசகர் மற்றும் வாசுகி தேவதாஸிற்கும் மேடையில் கௌரவமளிக் கப்பட்டது. பெற்றோரின் பார்வையில் என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய வாசுகி தேவதாஸ் தனது பிள்ளை இந்துக்கல்லூரி யில் கடந்த நான்கு ஆண்டுகளாக கல்வி பயின்று வருவதாகவும் அவர் அழகாக தமிழில் பேசுவதுடன் மட்டும் அல்லாமல் தமிழ் பத்திரிகைகளை வாசிப்பதாயும், தமிழ் படங்கள் நன்றாக விளங்கிப் பார்ப்பதாயும், வீட்டில் எல்லோரும் தமிழில் கதைக்க வேண்டும் என கேட்பதாகவும் கூறி இந்துக்கல்லூரி ஆசிரியர்களின் தமிழ் கற்பிக்கும் திறனையும் மெச்சினார்.

மார்ச் 6, 2011 இல் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பொது அறிவுப் போட்டியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம்பெற்றவர்களுக்கு பரிசளிப்பு நடைபெ-ற்றது. இப்போட்டி இளம் மழலைபிரிவு, முது மழலை பிரிவு, மற்றும் 1, 2, 3, 4, 5 ஆம் பிரிவுகளுக்கு நடைபெற்றது. இவை காலை, மாலை வகுப்பு மாணவர்களுக்கு தனித்தனியாக நடைபெற்றன. இவ்விழாவில் இந்துக்கல்லூரியின் நிர்வாக பொறுப்பாளரான ஜெயானந்த சர்மா தியாகராஜா ஐயர் நன்றியுரை நிகழ்த்தினார். அவர் தனது நன்றியுரையில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நிகழ்ச்சிக்கு பலவழிகளில் ஒத்தாசை வழங்கியவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

சிவத்தமிழ் விழாவின் கலை நிகழ்ச்சிகளாக "எல்லாம் சிவன்" என்ற நடனமும், நாட்டார் பாடல்களும், "கண்ணன் ராதை" நடனமும், வேதபாராயணமும், "வாழ்த்துச் சொல்ல வந்திடுவான்", "வெயிலோடு விளையாடு"

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

*Best Building in Scarborough!*
*Clean, family building, FREE parking.*
*Close to schools, bus stop, Tamil store in building.*

Pl. Call: 416.264.2818

# தொலைக்காட்சி நடிகரான அற்றம் யூஜினின் படங்களில்

தூறல்

வானரன்

ஒரு தமிழ்த் திரைப்படத்தில் (பெயர் ஞாபகத்தில் இல்லை) காதல் ஒரு தொலைபேசியினூடாகவே மலர்கின்றது. காதலிக்கு காதலனின் முகம் கூடத் தெரியாது. இது தமிழ்ப் படம் அவ்வாறுதான் இருக்கும். இப் படத்தில் தொலைபேசிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அதனை ஒரு கருவியாகவே காட்டியுள்ளார்கள். இன்றைய காலத்தில் உலகில் பெரும்பாலான மனிதர்களுக்கு தொலைபேசியும், தொலைக் காட்சியும் அவர்களது வாழ்வின் அங்கமாகவே மாறிவிட்டது. House Wife என்ற குறும் படத்தை You Tubeஇல் பார்த்தேன். தனிமையில் உள்ள மனைவி தனது வெறுமையை தீர்க்கும் கருவியாக தொலைக்காட்சியை பயன்படுகின்றாள். கணவன் வீடு வரும் வரை தொலைக்காட்சி யுடனேயே அவரது உறவு வலுப்படுகின்றது. அவரது உணர்வுகளின் அடைக்கலமாக தொலைக்காட்சி உள்ளது. கோபம், சந்தோசம் இவை அனைத்தையும் அவர் அங்கு தான் பகிர்ந்து கொள்கின்றார். இவரது இரண்டாவது தஞ்சம் தொலைபேசி. அவ்வப்போது தனது திருமணப் படங்களையும் பார்த்துக்கொள்வார். சுமார் 10 மணித்தியாலங்கள் தனிமையைப் போக்கும் ஒரு சக மனிதனாகவே தொலைக்காட்சி மாறிவிட்டது. இப்பெண் மாத்திரமல்ல பல வயது முதிர்ந்தவர்களது வாழ்க்கையிலும் தொலைக்காட்சி ஒரு சக பயணியாகவுள்ளது என்பது உண்மை.



இப்பொழுதெல்லாம் கணினியில் சட்டிங் என்பது சகஜமாகிவிட்டது. வேலை அல்லது பாடசாலை முடிந்தவுடன் சட்டிங் இன்று ஒரு காலைக் கடன்கள் முடிப்பது போல் ஒன்றாக மாறிவிட்டது. Antaheen இப்படத்தை இயக்கியிருப்பவர் Aniruddha Roy Chowdhury. இதில் அபர்ணா சென், ராகுல் போஸ் நடித்துள்ளனர். ராகுல் ஒரு பொலிஸ் அதிகாரி. இவர் வேலை முடிந்தவுடன் வீடு வந்து சட்டிங் செய்வார். இவரும் தனிமையில் தான் உள்ளார். சட்டிங்கில் இவர்களுக்கு காதலும் வருகின்றது. (இப்படம் பற்றிய கட்டுரை ஒன்று சில காலங்களுக்கு முன்னர் விளம்பரத்தில் வந்துள்ளது). Antaheen கணினியை பாத்திரமாகவே மாற்றியுள்ளனர். ஆனாலும் ஒரு சக பயணி யாக காட்டத் தவறிவிட்டார்கள். நவீன தொழில் நுட்பம் வாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்பை இந்தியப் படங்கள் காட்டத்தவறி விட்டன. டோபி கட் என்ற படம் விதி விலக்காக உள்ளது. கடந்த இதழில் இப்படம் பற்றிய கட்டுரை வெளிவந்துள்ளது. இப் படத்தில் ஓவியன் அருணின் வாழ்வில் ஏற்படும் பல மாற்றங்களுக்கு அவனது வாடகை வீட்டில் முன்னாள் குடியிருப்பாளர்கள் விட்டுச் சென்ற தொலைக்காட்சி நாடாக்கள் காரணம். இங்கு தொலைக்காட்சியினூடாக ஒரு குடும்பத்து வாழ்வு காட்டப்பட்டுள்ளது. இப்பாத்திரங்கள் தொலைக்காட்சியூடாகவே வருகின்றன.

கனடிய இயக்குனர் அற்றம் யூஜின் நவீன தொழில்நுட்பங்கள் வாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்பை பல வருடங்களுக்கு முன்னரே தனது படங்களில் வெளிப்படுத்தியுள்ளார். இவரளவிற்கு வேறு எவரும் உலகளவில் இதன் பாதிப்பை வெளிப்படுத்தவில்லை.

தொலைக்காட்சி மக்களிடையே துயரங்களை கொண்டு செல்கின்றது. புத்திஜீவிகள் உண்மையான துயரங்களை நிராகரிக்கின்றனர். அவர்கள் நுகர்வுக் கலாச்சாரத்தின் பிரதிநிதிகளாக உள்ளனர். துயரங்களுக்கான தீர்வையும் புத்திஜீவிகள் ஏளனஞ் செய்கின்றனர். மக்கள் தொலைக் காட்சியில் தங்களது முகத்தை தரிசிக்கும் பொழுது தங்களது வெறுமையையும் தாங்கள் அணிந்துள்ள முகமூடியையும் பார்க்கின்றனர்.

இன்றைய நவீன தொழில்நுட்பத்தின் பாதிப்பை தனது முதல் மூன்று படங்களில் பத்து வருடங்களுக்கு முன்பாகவே வெளிப்படுத்தியுள்ளார். வீடியோ கொன்பிரன்சிங், வீடியோ போன்றவற்றின் எதிர்வினைகளை இப்படங்களில் காணலாம். இவை இரண்டும் இப்படங்களில் முக்கிய பாத்திரங்களாகவே மாறியுள்ளன. cameras, video recorders, televisions, telephones, answering machines, computers போன்றவை இவரது படங்களில் வரும் சில முக்கிய பாத்திரங்கள். ஊடகங்கள் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கும். மக்கள் இதனை கண்ணாடியாக பார்க்கும் பொழுது உண்மை பொய்யாக வெளிப்படுத்து கின்றது. Egoyan நவீன தொழில் நுட்பம் வாழ்வின் அன்றாட செயல்பாடுகளில் முக்கிய இடம் பிடித்துள்ளது. ஊடகங்கள் மனிதர்களுக்கு எதிராக நிறுவனங்களுக்கு உதவி செய்கின்றன என்கின்றார். நவீன தொழில்நுட்பங்கள் சமூக வாழ்வியலை உடைத்து தனித்த வாழ்வியலை அதி-கரிக்கின்றன. உதாரணம் நாடகம் நடிகர்களையும் பார்வையாளர்களையும் ஒரு அரங்கில் வைத்திருந்தது. திரைப்படம் நடிகர்களை பார்வையாளர்களிடமிருந்து அந்நியப்படுத்தியது. வீடியோ மற்றும் நவீன கருவிகள் சக பார்வையாளர்களையும் அந்நியப்படுத்தி தனிமைக்கு கொண்டு செல்கின்றது. இன்று செல் போன் போன்றவை இவற்றை மேலும் அதிகரிக்கின்றன. ***Christian Metz' Notes on two kinds of voyeurism*** கருத்துக்களை ஒத்தவை இவரது கருத்துக்கள் Egoyan ன் ஒவ்வொரு படமும் புகைப்பட-வீடியோ கருவிகளை பாத்திரமாகக் கொண்டுள்ளது. Speaking Parts படத்தில் ஒவ்வொரு பாத்திரமும் தங்களது உணர்வுகளை, கனவுகளை, நன்மதிப்புக்களை மற்றவர் களிடம் வீடியோவினுள் வெளிப்படுத்து கின்றார்கள். திருமணத்தை வீடியோ படமெடுப்பவர், வீடியோ கடை தொழிலாளி, வீடியோ கொன்பிரன்சிங் போன்றவை இப்படத்தின் தொழில்நுட்ப பாத்திர தன்மையை வெளிப்படுத்துகின்றன. The Sweet Hereafter ல் வழக்கறிஞர் விபத்துக்குள்ளான பாடசாலை பேரூந்தை வீடியோவினுள் பதிவு செய்து துருவி துருவிப் பார்க்கின்றார். அங்கு பிம்பங்களை தவிர வேறெதுவுமில்லை. இங்கும் மனித உயிரின் பேரிழப்பின் ஓர் அடையாளமாக இக்காட்சி வெளிப்படுகின்றது. வழக்கறிஞரின் விசாரணை நட்ட ஈட்டைப் பெற்றுக் கொடுக்கும். இறந்த இளம் உயிர்களை அல்ல. Calendar ல் தேவாலயங்கள் புகைப்படமெடுக்கப்படு கின்றன. அத்துடன் கணவன் மனைவியினது ஆமேனிய பயணம் வீடியோவில் பதிவாக்கப்படுகின்றது. Family Viewing ல் வீடியோவில் பதியப்பட்ட காட்சிகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

தொடர்ச்சி 38ஆம் பக்கம்


TORONTO BUSINESS COLLEGE



Personal Support Worker Diploma

- Excellent Instructors
- Well equiped PSW Lab
- Hands on Clinical Training
- 100% Co-op placement
- NACC Certificate
- Good Salary

Computerized Accounting Diploma

- Microsoft Windows
- Microsoft Word
- Microsoft Excel
- Financial Accounting
- Payroll
- Quick Books
- Simply Accounting
- ACCPAC

Second Career

Co-Op Available

★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005 January க்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்கலாம்

416-291-5155

4465 Sheppard Ave. East #208

(Sheppard & Brimley) Scarborough

www.t-businesscollege.com t.businesscollege@gmail.com

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# கற்றுக்கொள்ள - 6

அமெரிக்கக் கண்டமெங்கணும் ஆங்கிலமும், ஸ்பானிசும், போர்த்துக்கீசும் (பிரேசில் நாட்டில் மட்டும்) பேசு மொழிகளாகக் கோலோச்சுவதை இன்று காணுகின்றோம். ஐரோப்பியர்கள் அமெரிக்க மண்ணில் காலடி வைப்பதற்கு முன்பாகவே இந்த நீண்ட பெரு தொடர் நிலப்பரப்பிலே பல்வேறு மொழி-களைப் பேசிய பல தரப்பட்ட கலாசார, பண்பாட்டு வாழ்க்கை அமைவுகளை வரித்துக் கொண்ட "மண்ணின் மைந்தர்கள்" திட்டுத்திட்டாக வாழ்ந்து வந்துள்ளார்கள். ஆயினும் அசுர பலம் படைத்த ஆக்கிரமிப்பாளர்கள், குடியேற்றவாதிகள் முன்னே தனித்துவம் வாய்ந்த தொன்மை கொண்ட அக்குடிகளின் வன்மம் அடக்கப்பட்டு, முறியடிக்கப்பட்ட வரலாறே எம் கண் முன் விரிந்து கிடக்கிறது. அந்த முறியடிக்கப்பட்ட மாந்தர்களின் மனக் குமுறல்களை, ஆதங்கங்களை வரலாற்றின் புதைகுழிகளிலிருந்து மீட்டெடுப்பதில், மறு வாசிப்புக்குள்ளாக்குவதில் எங்களில் அநேகருக்கு ஈடுபாடு இருக்கப் போவதில்லை.

ஆனாலும் ஸ்காபுரோ (Scarborough) சிவிக் சென்ரரில் நடைபெற்ற கருத்தரங்கமொன்றில் அந்தப் பழங்குடிகளின் சந்ததி வழி வந்த பெண் மனித உரிமைவாதியொருவர் அந்த மக்களின் உரிமைகள் குறித்ததோடல்லாமல் அதற்கும் மேலாக அந்த மக்களினங்களின் சுயநிர்ணய உரிமைகளுக்கான ஏக்கங்களைப் பிரதிபலித்த போது அந்த உணர்வுகள் நெஞ்சைப் பிழிந்தமையை என்னால் வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. இந்தத் தளத்திலே உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பிய பழங்குடி மக்களது போராட்ட வாழ்வுக் களங்களில் கனடாவிற்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்றான மெக்சிக்கோவின் "சியாப்பாஸ்" பிரதேசத்தில் வாழ்ந்து வரும் பழங்குடி மாயன் இந்தியர்களின் துயரம் தோய்ந்த வரலாற்றுச் சுவடுகள் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட வேண்டியவை என்பதை அண்மையில் நான் வாசித்துக் கொண்டிருந்த விடியல் பதிப்பகம் பிரசுரித்த "எதிர்ப்பும் எழுத்தும் - துணைத் தளபதி மார்க்கோஸ்" (தமிழில் மொழி பெயர்ப்பு: எஸ்.பாலச்சந்திரன்) என்ற நூல்



எனக்கு உணர்த்தியது.

இந்த நூலின் 36வது அத்தியாயத்தில் "சியாப்பாஸ் பழங்குடிகளின் போராட்டத் தலைவர்களில் மிக முக்கியமானவர் என்று கருதப்படும் துணைத் தளபதி மார்க்கோஸ் காடுகளில் ஒழிந்தவாறான 17 ஆண்டு கால போராட்டத் தலைமறைவு வாழ்க்கையின் பின் 2001ஆம் ஆண்டு மார்ச் மாத நடுக் கூறில் மெக்சிக்கோ அதிபரின் அழைப்பையேற்றுப் பெருமளவு மக்கள் நிறைந்த மாபெரும் பேரணியொன்றை வழிநடத்திப் பல நூறு மைல்கள் கடந்து மெக்சிக்கோ நகரத் திடலை வந்தடைவதும், அச்சமயத்தில் தங்களது குறிக்கோளை வென்றெடுப்பதற் கான அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக "காம்பியோ" என்ற பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியும் கூறப்பட்டுள்ளது." அரசியல் வன்முறைகள் உச்சம் பெற்றிருக்கும் முரண்பாட்டுக் களத்தில் ஒடுக்கப்பட்ட மக்களது தளைகளை அறுப்பதற்காக அமைதியைப் பேணிக்கொண்டு அடக்கு முறையாளனோடு தீர்வுக்காகப் பேசப் புறப்படுவது குறித்த வளர்ச்சிப் போக்கினை துணைத் தளபதி "மார்க்கோஸ்" எவ்வாறான அரசியல் பார்வையோடு அளவிடுகிறார் அல்லது அளவிட முனைந்தார் என்பது குறித்து இங்கு உரையாட விழைவதே எனது நோக்கமாகும்.

காம்பியோ பத்திரிகைப் பேட்டியின் போது "இனவெறிக்கு நிச்சயமாக ஏற்படப் போகின்ற தோல்வியைப் பற்றிய கருத்தானது அரசுக் கொள்கையின் பிரச்சினை, கல்விப் பிரச்சினை, மெக்சிக்கோ சமூகம் முழுவதினுடைய பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்கான தீர்வை நாங்கள் மிகவும் நெருங்கி விட்டோம், எனினும் இன்னும் நெடுந்தொலைவு செல்ல வேண்டியிருக்கிறது. போர் வீரர்களான நாங்கள் கூறுவதைப் போல, போரில் வெற்றி கிடைத்திருக்கலாம். ஆனால் இன்னும் சில யுத்தங்களைப் புரிய வேண்டியிருக்கிறது. சமூகத்துடன் எங்களைப் பிணைப்பது இராணுவரீதியான எங்களது வலிமை அல்ல என்பதாலும், நல்ல விளைவுகளைத் தரப்போவது அமைதி வழியிலான போராட்டமே என்று நாங்கள் உறுதியாக நம்புவதாலும், எங்களுடைய ஆயுதங்களை நாங்கள் கீழே போட வேண்டும் என்பதே மார்ச் 11ஆம் தேதி எங்களுக்கு உணர்த்தும் செய்தி என்று நான் நினைக்கிறேன்.

மெக்சிக்கோ அரசு மட்டும்தான் இதைப் புரிந்து கொள்ளவில்லை என்று "மார்க்கோஸ்" கூறுகின்ற வார்த்தைகளானது சொல்லும் தீர்மானகரமான அரசியல் செய்தி என்ன என்பது பற்றிய புரிதலிலேதான் மக்களின் சுதந்திரம், அமைதியான வாழ்வு பிறப்பெடுத்தல் சாத்தியமாகும். மேலும் இன்னுமொரு பதிலில் "ஒரு படை என்ற விதத்தில் அது மறைந்து போய் விட வேண்டும். இராணுவத் தன்மை கொண்ட ஒருவனாக – ஒரு படை வீரனாக – வாழ்வது ஓர் அபத்தமாகும். ஏனென்றால், ஒருவன் தனது கருத்துக்களை மட்டுமே பின்பற்ற வேண்டும் என்று மற்றவர்களை வற்புறுத்தி ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு, ஆயுதங்களையே எப்போதும் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. இந்த அர்த்தத்தில், எங்களுடைய படை இராணுவத் தன்மையைக் கொண்டிருக்குமானால், அதற்கு எதிர்காலம் என்பதே கிடையாது. எமது தேசிய விடுதலைப் படை ஓர் இராணுவரீதியான அமைப்பாகவே தொடர்ந்து நீடிக்குமானால், அது தோல்வி யடையப்போவது உறுதி. உலகத்தைப் பற்றிய ஒரு நிலைப்பாடு என்ற முறையில், ஒரு கருத்தியல் ரீதியான தேர்வு என்ற முறையில், அது நிச்சயமாகத் தோல்வியடையும். அது அதிகாரத்தைக் கைப்பற்றித் தன்னை புரட்சிகரமான இராணுவம் என்ற பெயரில் நிலை நிறுத்திக் கொள்ள முயலுமானால், அது இந்தத் தோல்வியை விட மோசமானதாயிருக்கும். தேசிய விடுதலை இயக்கங்களாக உருவான, 60- களையும் 70- களையும் சேர்ந்த அரசி யல்- இராணுவ அமைப்புக்களினால் வெற்றி என்று கருதப்பட்டது எதுவோ, அது எங்களால் தோல்வியென்று கருதப்படுகின்றது என்றும் கூறுகின்றார்.

இங்கு துணைத் தளபதி "மார்க்கோஸ்"



வியாக்கியானம் செய்யும் தத்துவார்த்தச் சிந்தனை முறைமைகள் இலத்தீன் அமெரிக்கச் சூழலில் மாத்திரமே பொருத்திப் பார்க்க முடிந்த நிகழ்வுகளா? அல்லது உலகளாவிய விரிந்த சமூகப் பரப்பில் மீள் வாசிப்புக்குரிய விடயங்களா? சமூகத்திலே மேலே இருந்தவாறு அதிகாரம் செலுத்துகிற சூழல் புரட்சியை வெற்றி கொண்டவர்களுக்குக் கிடைத்தபோது சமூகத்திற்கான நன்மை, தீமைகளை அக்குழுவே தீர்மானிக்கும் பொழுது உலகத்தையோ, சமூகத்தையோ மாற்றியமைத்துவிட முடியாது என்பதாகவே "மார்க்கோஸ்" தனது வாதத்தை நிகழ்த்துகிறார். ஒரு புறத்தில் ஆயுதங்களை ஏந்தாமல் அணிதிரள்வது ஒரு விதத்தில் நிம்மதி அளிக்கும் செயல்பாடாக மாறிவிடுகிறது என்று அவர் சொல்வது இராணுவச் சொல்லாடல்கள் குறித்த அவரது விமர்சனப் பார்வை இவற்றிலிருந்து ஏதாவது நாம் கற்றுக் கொள்ள முடியுமா?



நடராஜா முரளிதரன்

Ontario Vegetarian Food Bank

Employment Training & Skills Resource Centre

Certified Food Handlers

Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify

CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357

Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011

HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# கிறிஸ்ரியன் ஐகனின் கருத்து

## நுண்ணுலகியல் 09

சென்ற தடவையில் ஒளி சின்னச்சின்ன துகள்களாகச் செல்கின்றது என நியூட்டன் கூறியதைப் பார்த்தோம். அதற்கு எதிரான மறுப்புக்கருத்தினை ஐகன் கூறியிருந்தார் எனக் குறிப்பிட்டு இருந்தேன். அவரது கூற்றினை இன்று பார்ப்போம்.

### கிறிஸ்ரியன் ஐகனின் கருத்து

கிறிஸ்ரியன் ஐகன் ஒரு அற்புதமான டச்சு தேசத்தின் விஞ்ஞானி. அலை இயக்கம் பற்றிய தெளிவான விளக்கங்கள் பல தந்தவர். அலை ஒன்று முன்னேறிச் செல்லும் பாதையில் உள்ள ஒவ்வொரு புள்ளியும் தன்னை ஒரு அலைமுதலாக்கி, அலையைப் பரவவிடுகின்றது என்பதனைத் தெளிவுபடுத்திக் காட்டியவர். ஒருவகையில் பார்த்தால் நியூட்டனுக்கு நிகரான பௌதீகவியலாளர் என்றே கூறலாம். ஐகனைப் பொறுத்தவரையில் ஒளியானது ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு அலை வடிவிலே செல்கின்றது என்ற கருத்தே இருந்தது. ஒளியும் சக்தியின் இன்னொரு வடிவமான ஒலியினைப் போலவே அலை வடிவில்தான் செல்லவேண்டும் என உறுதியாக நம்பினார். வெவ்வேறு



நிறங்களில் காணப்படும் ஒளியிற்குக் கூட, ஒளியலைகளின் அலைநீளங்களே அதாவது அவற்றின் அதிர்வெண் வேறுபாடே காரணம் என்றார். அலைகளின் சிறப்பியல்புகளில் இந்த அலைநீளம், அதிர்வெண் என்பவை முக்கிய இடங்களை வகிக்கின்றன. அவை பற்றிப் பின்னர் இன்னமும் பொருத்தமான இடத்தில் பார்ப்போம். ஒளியலையின் அலைநீளங்கள் மாற மாற வெவ்வேறு நிற ஒளிகள் பெறப்படும் என்ற கருத்தினை ஐகன் முன்வைத்தார். ஐகன் மாத்திரமல்ல. நியூட்டன், ஐகன் இருவரதும் காலத்தில் இருந்த இன்னமும் சில விஞ்ஞானிகள் ஒளி அலை வடிவில்தான் செல்ல வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஊக்கின் விதியைத் தந்த 'ஊக்' ஆவர். ஆனாலும் நியூட்டன் எடுத்துக் காட்டிய நிழல்களின் விளக்கத்திற்கு அலைக் கொள்ளையில் அவர்களால் விளக்கம் கொடுக்க முடியவில்லை.

நியூட்டனும் ஐகனும் ஒளியின் செலுத்துகையில் முரண்டு பிடித்துக் கொண்டார்கள் தனினத்தனியான அலகுகளால் ஒளி ஆகியது என நியூட்டனும் இல்லை ஒளியானது தொடர்ச்சித் தன்மையான அலை வடிவில் ஆனது என்றும் ஐகனும் நேரடியாகவே (கொஞ்சம் காரசாரமாக) வாதிட்டார்கள். ஆக, பொருட்களுக்கும், ஒளியிற்கும் அடிப்படை தனித்தனி அலகுகளின் சேர்க்கை என்பதும் இல்லை தொடர்ச்சித் தன்மை என்பதும் போட்டியாக இருந்தது. அதுவா இல்லை இதுவா என்ற கேள்வி எழுந்திருந்து. ஏதோ ஒரு பக்கமான முடிவும் அந்தந்தக் காலங்களுக்கு ஏற்ப பெறப்பட்டும் இருந்தன. ஒளியினைப் பொறுத்தவரையிலும் நியூட்டனின் துணிக்கைக் கொள்கையே அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. இங்கும் கூட செல்வாக்குத்தான் பலப் பரீட்சையில் வென்றிருக்க வேண்டும் என்கிறார்கள் பலர். முடிவாக 17ம் நூற்றாண்டில் இருந்து ஒளியானது பல சின்னஞ் சிறிய துணிக்கைக்கைக் கூட்டமாக நேர்கோட்டில் பயணப்படுகின்றது என்பது முடிவாயிற்று. 19ம் நூற்றாண்டு வரையில் இது அதிக தொல்லையில்லாமற் பயணப்பட்டது என்றுதான் கூறவேண்டும்.

### 19ம் நூற்றாண்டில்....

19ம் நூற்றாண்டு! விஞ்ஞானத்தைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான நூற்றாண்டு எனக் கூறலாம். பௌதீகம், வானவியல், இரசாயனம், உயிரியல் என எல்லாப் பகுதிகளுமே மிக வளமாக வளர்ந்து கொண்டு போனது பெரிய பல மாற்றங்களுக்கும் அடிகோலியது. புதுப்புதுக் கருவிகளின் கண்டுபிடிப்புகளுடன் பல புதிய முடிவுகள் பெறப்பட, பௌதீகத்தில் அவை செம்மைப் பௌதீகத்துடன் சேர்க்கப்பட்டன. குவாண்ரத்தின் கதையில் இது முக்கியமான காலப் பகுதியாகக் காணப்பட்டது. எனவே



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பேரண்டம் - 88**



# தமிழர் மத்தியில் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது




Niru Niru

நிரு

பிராண்ட்


# நிரு பிராண்ட் தயாரிப்புக்களே

# நாமும் எமது செல்லிடத்தொலைபேசியும்


## மின்வலையில் வந்தவை - 14

கடந்த இதழ் தொடர்ச்சி


- துறையூரான் -




படம் - 9 களைப்பு, தலைவலி, நித்திரையின்மை, ஞாபகம் இழப்பு, காதில் மணியோசை, மூட்டுநோக்கள்




படம் - 10 ஒரு வளர்ந்தவர், 10 வயதினர், 5 வயதினர் ஆகியோரின் தலைக்குள் கதிர்வீச்சு உட்புகும் அளவு




படம் - 11 - **செல்லிடத் தொலைபேசிக்கதிர்கள் மனிதரைக் தாக்கும் விதம்.** கதிர் வீச்சு எமது தலையை அடைந்ததும், தலையோட்டினூடாக உட்புகும். மேலுள்ள படம் கதிர்வீச்சு எவ்வளவு ஒரு வளர்ந்தவரின் தலைக்குள் (25%), 10 வயதுச் சிறுவனின் தலைக்குள் (50%) 5 வயதுக் குழந்தையின் தலைக்குள் (75%) புகுகின்றது என்பதைக் காட்டுகின்றது. குழந்தை எவ்வளவு வயது குறைந்ததோ கூடுதலான கதிர்வீச்சு உட்புகும். காரணம் அவர்களின் தலையோடு மெல்லியதாய் இருப்பதுடன், வளர்ந்தோரைக் காட்டிலும் மூளையில் அதிகம் திரவம் உள்ளது. கதிர்வலைகள் குழந்தைகள் தலைக்குள் மிகவும் இலகுவாக உட்புகுத்து புற்றுநோய் வாய்ப்பை அதிகரிக்கிறது.

# பவதாரணியின் பாரதி கலைக்கோயில் திறன்காண் நிகழ்ச்சிகள்

கடந்த சித்திரை 22 மற்றும் 24ம் திகதிகளில் ஸ்காபுரோவில் கோனேசன் றைவில் உள்ள ஐடொல் சமூகசேவை நிலையத்தின் கலா மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது. பாரதி கலைக்கோயிலின் அனைத்து மாணவர்களின தும் இசைத் திறன் வெளிக்கொண்டு வரப்படும் ஒரு நிகழ்வாக அனைத்துப் பெற்றோருக்கும் கண்ணுக்கும் செவிக்கும் விருந்தாக அமைந்திருந்தது. பெற்றோரும் பிள்ளைகளும் இந்த இரு நாட்கள் நடந்த நிகழ்வுகளில் மிக ஆர்வத்தோடு ஈடுபட்டதனை அவதானிக்க முடிந்தது. பவதாரணியின் இழப்பை ஈடுசெய்யும் வகையில் அவரிடம் கற்ற மாணவர்களும், அவரோடு கற்பித்த ஆசிரியர்களும் தங்கள் மாணவர் களின் இசை, நடனத் திறன்களை வெளிக் கொண்டுவர அரும்பாடுபட்டு உழைத்ததன் பெறுபேறாகவும், பங்குபற்றும் அனைத்து மாணவர்களையும் ஊக்குவிக்கும் ஒரு நிகழ்வாகவும் இது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கீபோர்ட், வயலின், வீணை, றம், மிருதங்கம் ஆகிய கருவிகளை இசைக்கும் திறனும், வாய்ப்பாட்டு, நடனம் ஆகியவற்றின் திறனும் காட்சிப்படுத்தப்பட்டன. இளம்பாலகர் தொடக்கம் பதின்ம வயதினர் வரை இந்த நிகழ்ச்சிகளில் பங்குகொண்டனர். சனிக்கிழமை மு.ப. 9 தொடக்கம் மாலை 9 வரையும் நாலு காட்சிகளாகவும், திங்கள் காலை 9 தொடக்கம் 8 மணிவரையும் இந்த நிகழ்வுகள் மூன்று காட்சிகளாகவும் இடம்பெற்றன. பாரதி கலைக்கோயிலின் நிருவாக இயக்குநர் திரு. எஸ். மதிவாசன் அவர்களைவிட மாணவர்களே எல்லா ஒழுங்குகளையும் ஓடி ஓடிச் செய்தமையை அவதானிக்க முடிந்தது. பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்து மாணவர்க ளின் தலைமைத்துவப் பண்பையும் வளர்க்கும் ஒரு நற்பணியினை பாரதிகலைக்கோயில் முன்வைத்திருப்பதினைப் பலரும் வரவேற்றும் பாராட்டியும் கதைத்துக்கொண்டமையை அவதானிக்க முடிந்தது. பல புதிய மாணவர்களின் வரவும் அவர்களின் கைவண்ணமும் இங்கு சபையோரைக் கவர்ந்திழுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மாணவர்களிடம் மறைந்துள்ள திறன்களைக் கல்வி வெளியே கொண்டுவரும் பாரிய முயற்சியில் பாரதி கலைக்கோயில் வெற்றிப் பெருமிதத்தோடு வீறு நடைபோடுகின்றது என்பது மட்டும் வெளிப்படையாகப் படம்பிடித்துக்காட்டுவது போன்று நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நடன ஆசிரியை செல்வி மாலினி பரராசசிங்கம், வீணை, வயலின் மற்றும் கர்நாடக இசை ஆசிரியை திருமதி லசந்தி இராஜ்குமார், மிருதங்க ஆசிரியர் கிரிதரன் ஆகியோரின் பங்களிப்பும் பார்வையா- ளர்களின் கவனத்தை ஈர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைவிட கீபோர்ட், றம் போன்ற இசைக்கருவிகளை மீட்டுவிப்பதில் நிசாந்தன் பாலகுமார், காண்டீபன் ரங்கநாதன், குகன் சிவசுப்பிரமணியம், சகானா ராஜசிங்கம், துபாரகன் சோதிலிங்கம், பிரவீன் மதிவாசன், பவித்திரா இரத்தினேஸ்வரன், மதிவாசன் சீனிவாசகம் ஆகியோருடன் உதவியாளர் களாக குயீன்சி சோமசேகரம், நயனி இராமகிருஷ்ணன், தட்ஷணன் உதயகுமாரன், செந்தூரன் மாணிக்கவாசகர், திவாகர் பாலயோகேஸ்வரன் ஆகியோர் செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுகளை முன்னோடியாக இருந்து தொகுத்துத் தந்தவர் முன்னணிச் சமூகசேவகர் திரு. கதிர் துரைசிங்கம் அவர்கள். இசை நிகழ்வுகளை தட்ஷணன் உட்பட மாணவர்களே தொகுத்துத் தந்தமை சிறப்பாக அமைந்திருந்தது.

## - கலாரசிகன் -

ஒவ்வாரு நிகழ்வுக்கும் சிறப்பு விருந்தினர்கள் அழைக்கப்பட்டு மாணாக்கரின் திறன்காண் நிகழ்வைப் பற்றிய கருத்துக்களை அறிந்து கொள்வதோடு மாணவர்களைத் தட்டிக் கொடுக்கும் கங்கரியத்தையும் பாரதி கலைக்கோயில் செய்யத் தவறுவதில்லை. அந்த வரிசையில் பாரதி கலைக்கோயில் திருவாளர்கள் பொ. கனகசபாபதி, த. சிவபாலு, ஆர்.என்.லோகேந்திரலிங்கம், ஆர். நந்தீஸ்வரன், மனுவல் ஜேசுதாசன், எஸ். சிவநாயகமூர்த்தி, என். சாந்திநாதன், கே.எஸ். பாலச்சந்திரன், எஸ். பத்மநாதன், ஐ.வேலாயுதபிள்ளை, எஸ். இராசநாயகம், குரு அரவிந்தன், எ. புராந்தகன்,
பேராசிரியர்கள் நா.சுப்பிரமணியன், இ. பாலசுந்தரம், திருமதிகள், பவானி திருநாவுக்கரசு, விமலா பாலசுந்தரம், மாலினி குரு அரவிந்தன் ஆகியோர் அழைக்கப்பட்டு உரைகளை வழங்கிய மாணாக்கர்களை பாராட்டியதோடு வெற்றிப் பதக்கங்களையும் அணிவித்துக் கௌரவித்தனர்.

பவதாரணியின் பாரதி கலைக்கோயிலின் வளர்ச்சி அதன் பணி என்பன பற்றியும் இசையின் தன்மை, மாணாக்கர்களை பண்பார்ந்த முழுமனிதர்களாக்கும் தன்மை, பெற்றோரின் பொறுப்பு, கடமை என்பன பற்றிய கருத்துரைகள் அனைவராலும் முன்வைக்கப் பட்டதோடு பெற்றோர்களையும் பாராட்டிச் சென்றதனை அவதானிக்க முடிந்தது. அத்தோடு தமிழோடு இசை கற்பிக்கப்படவேண்டும் என்ற ஒரு வேண்டுகோளும் முன்வைக்கப்பட்டதனை மதிவாசன் செவிமடுத்துத் தனது உரையில் அதற்கான ஒழுங்குகளை தாம் முன்னரே ஆரம்பித்து விட்டதனை எடுத்துரைத்ததோடு மாணவர்களே அனைத்துப் பொறுப்புக்களையும் வகிக்கும் ஒரு கட்டமைப்பை நாம் உருவாக்கியிருக்கின்றோம் என்பதனையும் எடுத்துரைத்ததோடு அந்த மாணவர்களைப் பாராட்டியதோடு அனைத்துப் பெற்றோர், பெரியோர், விருந்தினர்களுக்குத் தனது நன்றியறிதலைத் தெரியப்படுத்தினார்.

கதிர் துரைசிங்கம் அவர்கள் இடையிடையே தனது காசியப் பேச்சின்மூலம் அனைவரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டி சபையைக் கலகலக்க வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது

# இன்னொரு

29ஆம் பக்கத்தொடர்ச்சி

தனது அநுமானங்களில் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு.

“நீதான் இன்பனின் மகன் எண்டு சொல்லப் போறாய், அப்பிடித்தானே?’ இனியன் தனது இருக்கையில் இருந்து எழுந்து சற்று ஆவேசம் வந்தவன் போல் கேட்டான்.

மீண்டும் அந்த இரு அந்நியர்களும் ஒருவரை ஒருவர் (இது எத்தனையாவது தடவையோ தெரியவில்லை) பார்த்துக் கொண்டார்கள்.

சின்னவன் இனியனின் பக்கமாகத் திரும்பிச் சொன்னான்,

சின்னவன் கூறியதைக் கேட்ட இனியனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை..

- இன்னமும் வரும்

# சிவத்தமிழ் விழா

32ஆம் பக்கத்தொடர்ச்சி

"உழவர்கள் நாமே", அபிநயப்பாடல்கள், மற்றும் நலம் தரும் யோகா என்பன நடைபெற்றன. இவற்றைத் தவிர "வாழ்வியலில் சமயக்கல்வியும் பெற்றோரின் பங்களிப்பும்" என்ற பட்டிமன்றத்தை ஒன்பது மாணவர்கள் பங்கேற்றி சிறப்பாக நடத்தினார்கள். இப்பட்டி மன்றத்தில் பெற்றோரின் பங்களிப்புப் பற்றி கேள்வி கேட்ட மாணவர்களது கேள்விகளான வீட்டில் ஏன் சிவராத்திரி, நவராத்திரி கொண்டாடப்படுவதில்லை? பெற்றோர் வீட்டு நிகழ்வுகளில் ஏன் தேவாரம் பாடத்தயங்குகிறார்கள்? மாமிச உணவின் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்க்கை வரலாறு அவரின் சில பாட்டுக்களுடன் நடித்து காட்டப்பட்டது. 'தமிழர் அசைவெல்லாம் இசையே" என்ற நாடகத்தில் அரச அவையில் தமிழர் வாழ்வில் பிறப்பிலிருந்து மரணம்வரை இசை எவ்வாறு இரண்டறக் கலந்துள்ளது என விவரிக்கப்பட்டது. இதில் அரசனாக வந்த திவ்யா பிரபாகரனின் பேச்சுத்திறனும், அவரது நடிப்பும் அவரை ஒரு கைதேர்ந்த நாடகக் கலைஞர் போல் காட்டியது. எல்லாக் கலை நிகழ்ச்சிகளும் சரியாக இரவு 11:00 மணிக்கு நிறைவடைந்தன.



மோகம் போன்றவை பல பெற்றோரை சிந்திக்க வைத்தன. பட்டிமன்றத்திற்கு நடுவராக இருந்த சிறுமி நிஷாந்தி கணேசலிங்கத்தின் பேச்சுவன்மை நன்கு அனுபவமிக்க நடுவர் போல் இருந்தது மட்டுமல்லாமல் அவர் தனது திறமையால் சபையோரை வியக்கவைத்தார். இப்பட்டிமன்றத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என பண்பாடு பேசும் நாம் ஏன் முருகனுக்கு இரண்டு மனைவியரை வைத்திருக்கின்றோம் என்ற கேள்விக்கு பதிலளிக்க கூடிய அளவிற்கு சமய அறிவு பெற்றோரிடம் இல்லையே என்று கேள்வி கேட்ட மாணவனின் ஆதங்கம் வெளிப்படையாக தெரிந்தது. சூழல் பாதிப்பால் நடைபெறும் மற்றும் நடைபெற போகும் தீங்குகளை எடுத்துக்காட்டிய நாடகமான "ஐம்பூதங்களின் ஆர்ப்பரிப்பு" பார்வையாளர்களை சிந்திக்க வைத்தது என்றால் மிகையாகாது. "சொத்துக்களை சேர்ப்பதை விடுத்து சூழலைப் பாதுகாப்போம்" என்று கூறியது சிந்தனையை தூண்டியது. தாயை இழந்த பன்றிக்குட்டிகளுக்கு தாயாக வந்து பால்கொடுத்த இறைவனின் கருணையை காட்டும் நாடகமான "தாயுமானவர்" நாடகம் சிறப்பாக தயாரிக்கப்பட்டிருந்து.

மண்டபத்தின் ஒலி, ஒளி அமைப்பு நன்றாக இருந்தது. ஆனால் பெற்றோர் எல்லோரும் தமது சிறார்களின் நிகழ்வை தமது வீடியோவில் பதிவு செய்யும் ஆர்வத்துடன் மேடையின் முன்னால் நின்றது பார்வையாளர்களுக்கு நிகழ்ச்சிகளை பார்க்க மிகவும் இடைஞ்சலாக இருந்தது. பலர் நிகழ்ச்சிகளை பின்னாலுள்ள தொலைக்காட்சித் திரையிலேயே பார்க்க வேண்டியிருந்தது. மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் மிகுந்த பிரயாசையுடனும் ஊக்கத்துடனும் நடைபெறும் இந்நிகழ்ச்சிகள் இனிவருங்காலங்களில் ஒரு நல்ல அரங்கில் (ஆசனங்கள் உயர்ந்து செல்லும் அரங்கு) நடைபெறுமானால் பார்வையாளர்களால் எவ்வித இடைஞ்சல்களும் இல்லாமல் இத்தரமான நிகழ்வுகளை பார்த்து மகிழலாம்.



அருந்ததி ஞா.

# அடையாளங்களை...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

Egoyan ன் பாத்திரங்கள் நிலையான பிம்பத்தினூடாக நினைவுகளை இயந்திர ஊடகங்களான வீடியோ போன்றவற்றில் தேடுகின்றார்கள். தங்களை அழுத்திக் கொண்டிருக்கும் சுய நினைவுகளை இவை சிறிதளவாவது வெளிப்படுத்துகின்றன என நினைக்கின்றார்கள். இவற்றால் ஏற்படும் கற்பனை நினைவுகள் சுய நினைவுகளை மாற்றீடு செய்யும் என இயக்குனர் கருதுகின்றார். புதிய தொழில்நுட்பம் வீடியோ கமரா போன்றவை நாம் பார்ப்பவற்றை மாத்திரமல்லாது நாம் அவற்றிற்கூடாக உணர்பவற்றினையும் எம்மை மீள் பரிசோதனைக்குட்படுத்த வைக்கின்றன. சினிமா எம்மில் ஏற்படுத்திய தாக்கத்தை விட வீடியோ தொலைக்காட்சி என்பன நாள் தோறும் எமது வாழ்வில் ஒரு அங்கமாக மாறிவிட்டதனால் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் அதிகம். இவை பல்வேறு இடங்களில் செய்திகளை சம்பவங்களை தாங்கி வெளிப்படுத்துகின்றன. பல மனிதர்களை அவர்களின் பல் வேறு வாழ்வியல் துயரங்கள் சந்தோசங்கள்



கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. தனிப்பட்ட பொதுவான என இரு வகை உணர்வுகளை கருதுகோள்களை ஏற்படுத்துகின்றன. இவ் ஊடகங்கள் ஒரே விடயத்தை பலரிடம் பகிர்ந்து கொண்டாலும் ஒவ்வொருவரிடமும் வெவ்வேறான உணர்வுகளை ஏற்படுத்துகின்றன. நவீன தொழில்நுடபம் கருத்துப் பரிமாற்றத்தின் பரிமாணத்தை புதிய தளத்துக்கு இட்டுச் செல்கின்றது. கடிதங்கள் கணினியாக மாறி வேகத்தை அதிகரிக்கின்றது. தொலைபேசி வீடியோ போன்றவை பாலியல் தொழிலாளிகளுக்கு பல புதிய வாடிக்கையாளர்களை பெறுவதற்கு உதவியாகவுள்ளது. தொலைபேசி, வீடியோ கொன்பிரன்சிங் போன்றவை pornography ற்கு உதவியாகவுள்ளன. இதனை இவரது Exotica, Speaking Parts படங்களில் காணலாம். Egoyan himself claims that 'one of the transformations affecting our society is that we always live with the images of the deceased, and for that very reason lack the space to mourn their absence'

அன்று ஜெயகாந்தனின் "சினிமாவிற்கு போன சித்தாளு" சினிமா மக்கள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை வலியுடன் கூடிய விமர்சனமாக முன்வைத்தது. இன்று Egoyan நவீன தொழில்நுட்பம் ஏற்படுத்தும் பாதிப்புக்களை தனது ஒவ்வொரு படத்திலும் பதிவாக்கியுள்ளார். இவரது படங்களில் நவீன தொழில்நுட்பம் ஒரு முக்கிய பாத்திரமாகவே உள்ளது. இயக்குனர் தொழில்நுடபம் பற்றி அளித்த பேட்டியிலிருந்து ஒரு முக்கிய பகுதி

M: ***What do you feel some of the ways that the shift to digital technology alters our sense of memory?***

AE: ***There was a point in which the technology-and this show really makes this clear-there was a point where the machines that we used to record to memories were somehow extensions of our own bodies. There were things that had character and form and shape. We were aware of the process involved in transcribing the memories. If the machines would break down, we could relate to it in terms of our own bodies: things snapping or getting jammed or springs being slackened. There was something very reassuring in a sense. So even though we surrendered vital parts of our memory to this form of transcription, it was somehow blessed with our own frailty of our own memory. They reflected something about our own attitude; there was something corporeal about the analogue system. As opposed to digital, which seems a complete mystery to us. I think now we completely abstract the storage system. We don't have the same physical relationship to the instruments we use in digital transcription that we did to analogue.***

# கிறிஸ்ரியன்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

இப்பகுதியில் பல விடயங்களைப் பார்க்கப் போகின்றோம். பொருட்கள் எவற்றினால் ஆனவை? ஒளி எவ்விதம் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்கின்றது என்பன பெரிய வாதங்களுக்கு உட்பட்டு ஏதோ முடிவுகளையும் பெற்றிருந்தன. எதிலும் திருப்திப்படும் மனம் இந்த விஞ்ஞானிகளுக்கு இல்லை. உண்மைதான், சரியானதுதான் என நிறுவப்பட்டாலும் அதனையும் குடைந்து குடைந்து ஆய்வு செய்து எதையாவது புதியதாகக் கண்டு கொள்வார்கள். அந்த வகையிற்றான் பெரும் திருப்பங்கள் ஏற்பட்டன. அப்படியாகத்தான் பொருட்கள் எவற்றினால் ஆனவை என்பதும், ஒளியானது எவ்விதம் பயணப்படுகிறது என்பதும் முன்னய கருத்துக்களில் இருந்து மாற்றப்பட்டன. இந்த மாற்றங்களைக் கொண்டு வந்த நூற்றாண்டுதான் 19ம் நூற்றாண்டு. இந்த மாற்றங்களைத்தான் இனி முக்கியமாகப் பார்க்கப் போகின்றோம், குவாண்ரம் பிறந்த கதையில். முதலில் ஒளி பற்றி தோமஸ் யங் என்பவரின் பிரபலமான இருதுளைப் பரிசோதனையின் முடிவினைப் பார்ப்போம். அடுத்த தடவையில் அதனைப் பார்ப்போம்.

### Best Entrepreneurs Award 2011



Aaron Sureshkumar & Ranji Sureshkumar
**PSP Fabricating Inc.**

### Woman Entrepreneurs Award 2011



Poomagal (Pushpa) Sivakumar & Shyamala Ketheswaran
**Varathas Silk & Giftware**

### Best Marketing Award 2011



Balraj Sivasubramaniam & Kuharaj Sivasubramaniam
**Pro Stone**

### Life Time Achievement Award 2011




**Kingsley Ariaratnam**

### Young Entrepreneur Award 2011



Vykunthan Murugupillai
**Inhome Comfort Inc**

### Most Outstanding Professional Award 2011



**Velupillai Balasubramaniam**

## PLATINUM AWARDS








Tamils' Business Connections
www.tamilbizcard.com

சர்வதேச அரங்கில் தமிழரின் இருப்பை பொருளாதாரரீதியாக நிலைநாட்டும் வர்த்தகர்களுக்கும் 20ம் ஆண்டை கொண்டாடும் கனேடிய தமிழ் வர்த்தக சம்மேளனத்திற்கும்

எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

Ahilan Nagarajah
Chandra Thambirajah
George Sakthivel
Gerard Simonpillai
Gukathasan Sinnathurai & Ranji Gukathasan
Jey Rajaratnam & Sasi Kananathan
Jeya Ponnuchamy
Jeyakumar Paramananthan & Srikumar Paramananthan
Jeyaruban Selvadurai
Kanagaratnam Mahesan
Kanagasabai Rasendrakumar
Karunakaran (Karu) Kandiah
Kathir Subramaniam
Kegalyalingam Ruthralingam
Ketha Nadarajah
Kula Sellathurai
Kumarakulasingam Nadarajah
Mano Gunaranjan & Ranjan Gunabalasingam
Margie Vincent de Paul & John Vincent de Paul
Nagendran Balakrishnan
Nathan Sritharan
Jeya & Brothers
Yaarl Cake House
Independent Insurance Broker
GNS Party Rentals
Ceycan Trades Ltd
Claireport Place
Jeya Video Production
6Kumar Silk House
Ruban Auto Tech
Murugan Book Depot
Uthaya's Supermarket
Real Estate Broker/ Owner
Gnanams Studio
A1 Studio
NKS Drapery & Blinds
Inter Citi Courier Ltd
Geethavani Radio
Optimart
Sun Flowers Furniture
Cavalier International Air & Sea Freight Ltd.
Barrister, Solicitor & Notary Public (Ontario)
Radha Krishnasamy
Raja Mahendram
Ranjan Rajaratnam
Ravi Sivayogasundaram
Ruthiran Velumailum
Santha Panchalingam
Dr. Shan A Shanmugavadivel
Shanker Mahendran
Sinnadurai Jeyaratnam
Sinnadurai Mahendrananthan
Sinnadurai Navaretnam
Sinniah Selvaratnam
Sivabatham Visvalingam & Gnanakalal
Sri Bavan
Sri Subramaniam
Suresh and Deepa Suresh
Dr . Thambirajah Vasanthakumar
Thayalan Muthulingam & Stan Muthulingam
Thiru S Thiruchelvam
Vairamuththu Sornalingam
Vasanthan Pathmanathan
Vimalan Kallasapillai
R & S Auto Sales Inc
The Publisher of "Vlambaram"
Windstar Auto Collision
Computerlink Systems Inc
Ownership of Gas stations
Santha Electrical & Plumbing Services
Dental Practices
Derek Travels
Maxwood Kitchen Inc
MP Accounting & Finance Services
Pearl Sign
RG Education Centers
Rathika Trade
Kugan Studio
AirLink Travel Ltd
Paradise Print
Computek College
The Cable Shoppe Inc
Ahilan Associates
Yarl Metal Febrications Inc
Vasantha Jewellery
Max Travels

Promoting Prosperity and Co-operation
416 272 8543

# உழைப்பாளர் தினம்

உழைக்கும் மக்கள் உயர்ந்திடவும் அவர்தம் உரிமைகளைப் பேணிக் காத்திடவும் நாட்டை ஆண்டிடும் அரசுகள் அவர் நலம் காத்திட வேண்டும். சட்டங்கள் இயற்றிட வேண்டும்.

மே முதலாம் திகதி தொழிலாளர் தினமாகும். இது உலக உழைப்பாளர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. உழைப்பாளர்களுக்குரிய உன்னத “திருநாள்” இதுவாகும். அமெரிக்காவில் ஆரம்பமான மேதினக் கொண்டாட்டம் 1890 முதல் உலகம் முழுதும் பரந்தது. உழைப்பு மீதும் உழைப்பாளர் மீதும் எந்த நாடு உயர்ந்த எண்ணம் வைத்திருக்கின்றதோ அந்த நாடு பொருளாதாரத் துறையில் உயர்ந்து கொண்டே செல்லும். உழைப்பர்களுக்கே உலகில் அனைத்து உரிமைகளும் இருக்க வேண்டும். அவர்களே ஒரு நாட்டின் வளத்திற்கு வழிசமைப்பவர்கள். அரும்பும் வியர்வை உதிர்த்து புவியில் ஆயிரமாயிரம் தொழில்கள் செய்து அகிலம் வளம் பெறச் செய்பவர்கள் தொழிலாளர்கள். உழைப்பவர்கள் மட்டுமே உன்னத வாழ்வை எய்த முடியும். உழைப்பவர்கள் ஏமாறாமல் இருந்தால் ஒருபோதும் ஒட்டாண்டியாகி விடுவதில்லை. உழைப்பவர்கள் தளைத்துக் கொண்டே இருப்பார்கள். உழைக்காமல் பிழைப்பவர்களின் உள்ளம் உறுத்திக் கொண்டேயிருக்கும். உழைப்பே உயர்வுதரும். உழைப்பால் கிடைக்கும் மகிழ்ச்சியே உண்மையான உவகை தரவல்லது. உழைப்பவர்கள் உறுதிமிக்கவர்கள். உழைப்பவர்களை ஊக்கப்படுத்தினால் உற்பத்தி பெருகும். எனவே அவர்களது உரிமைகள் வழங்கப்படல் வேண்டும். உரிமைகளை வென்றெடுத்த தினமாகவே மேதினம் அமைகின்றது.




உழைக்காமல் உண்பது திருட்டுக்குச் சமமானது என்பது காந்தியடிகளின் கருத்து. ஓடி ஓடி உழைத்தால் செல்வம் நம்மை நாடி நாடி வரும். உயர்வு நம்மை தேடி வரும். புகழ் நம்மை சேரும். எனவே உன்னத பெருமைக்கு அடையாளமாக இருப்பது உழைப்பு. உயர்ந்த கனவு மெய்ப்பட வேண்டுமென்றால் உழைப்புத்தான் ஒரே வழியாகும். இதனால் தான் ‘ஊழையும் உட்பக்கம் காண்பர் உலைவு இன்றி தாழாது உஞற்றுபவர்’ என்றார் வள்ளுவர்.

உழைப்பதால் உயர்வு கிட்டும். உள்ளம் மகிழும். தூய எண்ணம் குடி கொள்ளும். தீய எண்ணம் விலகும். வரலாறு வசப்படும். விதியை வெல்லலாம். வளம் பெருகும். நலம் கூடும். சோம்பல் தூர விலகும். வளம் பெருகும். நலம் கூடும். வறுமைவிலகும். பிழைப்பு கிடைக்கும். களைப்பு கலையும். எனவே தொடர் உழைப்பு சுகம் தரும். உழைத்துக் கொண்டு இருந்தால் நம் உள்ளம் இறைவன் வாழும் இல்லமாகத் திகழும். உழைக்காவிட்டால் நமது உள்ளம் சாத்தான் வேலை செய்யும் தொழிற்சாலை யாக மாறிவிடும். குடியென்னும் குன்றாவிளக்கம் மடியென்னும் மாசுஊர மாய்ந்து விடும்.

சோம்பல் என்னும் இருள் ஒருவனது உள்ளத்தில் குடிகொள்ள அவனது குடியாகிய மங்கா விளக்கு மங்கி அணைந்து விடும் என்பது திருவள்ளுவரின் தீர்க்கமான முடிவு. உழைப்பாளர்களின் உழைப்பை சுரண்ட அனுமதிக்காமல் அவர்கள் ஓய்வு என்பதும் மகிழ்வு என்பதும் உண்டு என்பதை உறுதிப்படுத்தவுமே மே தினம் அமைய வேண்டும். உரிமைகள் மறுக்கப்பட்டு உழைப்பின் பலன் வேறு சிலருக்கு மட்டும் உடமையாக்கப்பட்டு ஆமைகளாகவும் ஊமைகளாகவும் அடங்கிக் கிடந்த தொழிலாளர்கள் உரிமை பெற்ற திருநாளே மேதினமாகும்.

சித்திரச் சோலைகளை உமை நன்கு
திருத்தப் பாரினிலே முன்பு
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே

என்ற புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பாடலின்படி தொழிலாளர் சிந்திய வியர்வையாலும் இரத்தத்தினாலும் தான் இந்த உலகம் உருவாக்கப்பட்டிருக்கின்றது என்ற உண்மையை உணர்ந்து உழைப்பவர் நலனுக்கு நாடுகளின் அரசாங்கம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். பார்மிசை மக்களைக் காத்து தெய்வமாக விளங்குபவர் தொழிலாளர் என்றால் மிகையில்லை.

**‘உழைக்கும் கைகளே உலகை உருவாக்கும் கைகள்.’**



நா. க. சிவராமலிங்கம்











